# ஞானச்சுடர்

கார்த்திகை

203 ஆவது மலர்

2014




வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை



# குறள் வழி

**அழுக்கா றுடையார்க் கதுசாலு மொன்னார்**
**வழுக்கியுங் கேடீன் பது.**

**பொருள் :** பகைவர் கேடு செய்யத் தவறினாலும் பொறாமைதான் ஒளிந்திருந்து கேடு தருதலால் அப்பொறாமையுடையார்க்குப் பகைவர் வேண்டுவதில்லை; கெடுப்பதற்கு அதுவே போதும்.

(165)

**கொடுப்ப(து) அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்**
**உண்பதூஉம் இன்றிக் கெடும்.**

**பொருள் :** ஒருவன் பிறனுக்குக் கொடுக்க, அவ்வாறு கொடுப்பதைக் கண்டு பொறாமைப்படுகின்றவனும் அவனது சுற்றத்தினரும் உடையும் உணவுமின்றி அழிவர். (166)

---



# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை

## முத்தி நல்குமே

## ஓதுக அதுநாம் ஓம்தத் சத்ஓம்

இன்ன தன்மைய னிவனென வெவரும்
இன்னு மிசைக்க வியலா வியல்பினன்
மன்னர்க்கு மன்னன் மறைமுடி பானவன்
அன்னோன் மலரடி பணிவோம் நாமே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 11

இம்மை மறுமை யிரண்டின் பயனைச்
செம்மை மனத்தவர் தேடும் பொருளை
மும்மை யுலகிற்கு மூர்த்தியா னவனை
அம்மே யப்பா வென்று பாடுவோம்
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 12

இருந்த படியே யிருக்கும் பொருளை
அருந்த வர்கண் டர்ச்சித் தேத்தினர்
வருந்த வேண்டாம் மவுன நிலையினில்
தருஞ்சிவ யோகஞ் சச்சிதா னந்தமே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 13

# ஞானச்சுடர்



வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

உ

# ஞானச்சுடர்



வெளியீடு – 2 203ஆவது மலர்

2014 **பொருளடக்கம்** கார்த்திகை


| | | |
|---|---|---|
| அறம் வயப்பட்ட அறிவே... | கு. சோமசுந்தரம் | 01 -04 |
| போற்றித் திருவகவல் | சு. அருளம்பலவனார் | 05 -06 |
| பிட்டுக்கு மண் சுமந்த... | நா. நல்லதம்பி | 07 -09 |
| கந்தரநுபூதி | வாரியார் சுவாமிகள் | 10 -12 |
| மலையகத்தில் மண்... | சி. தில்லைநாதன் | 13 -18 |
| திருவருட்பயன் | முனைவர் ஆ. ஆனந்தராசன் | 19 -21 |
| மாண்ட குதிரை மீண்டது | அ. சுப்பிரமணியம் | 22 -25 |
| திருஞானசம்பந்தரும்... | சி.வ. இரத்தினசிங்கம் | 26 -27 |
| ஐப்பசி மலரின் அடையாளம் | கே.எஸ். சிவஞானராஜா | 28 -29 |
| சைவ சமய வினாவிடை | ஆறுமுகநாவலர் | 30 -31 |
| மார்கழியின் சிறப்பு | செல்வி பா. வேலுப்பிள்ளை | 32 -33 |
| ஸ்ரீ ரமண நினைவலைகள் | தொகுப்பு | 34 -36 |
| அகத்தை மாற்றியபின்... | செல்வி செ. ஐடா | 37 -39 |
| சித்தர்களின் ஞானம் | சிவ மகாலிங்கம் | 40 -45 |
| கல்கி அவதார மகிமை | திருமதி ப. நடராஜா | 46 -48 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 49 -50 |
| சின்னக் கதிர்காமம் | கு. சிவபாலராஜா | 51 -53 |
| சங்கடம் தீர்க்கும்... | க. ஜெயராமக்குருக்கள் | 54 -55 |
| திருகோணமலை ஈன்றெடுத்த... | பொ. கந்தையா (காந்திஜயா) | 56 -57 |
| நாவலரின் நற்பணிகள்... | க. நாகேஸ்வரன் | 58 -60 |
| ஸ்ரீ கருட புராணம் | இரா. செல்வவடிவேல் | 61 -64 |
| வாசகர் போட்டி | – | 65 -66 |
| கண்டோம் கதிர்காமம் | அன்னைதாசன் | 67 -70 |


வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)


**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம்: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்




## வெளியீட்டுரை:-

ஐப்பசிமாத ஞானச்சுடர் மலருக்கான வெளியீட்டுரையினை திரு சி. பத்மநாதன் J.P அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தனது ஆரம்ப உரையில், ஐப்பசிமாத ஞானச்சுடர் மலரை வெளியிட்டு வைப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். அத்தோடு இச்சுடரில் இடம்பெற்றுள்ள ஆக்கங்கள் யாவும் மனிதனுடைய வாழ்க்கைக்குத் தேவையான விழுமியக் கருத்துக்களைக் கூறுவனவாய் அமைந்துள்ளது.

அடுத்து அவர் தனது உரையில், ஆச்சிரமமானது பல்வேறு சேவைகள், பணிகளைச் சிறப்பாக மேற்கொண்டு வருகின்றது. அதற்கெல்லாம் மூலகாரணமாக இருப்பவர் சந்நிதி வேலன் என்று அடிக்கடி சுவாமியார் கூறுவார். இதன்மூலம் சந்நிதியான் ஆச்சிரமத்தால் மேற்கொள்ளப்பட்டுவரும் சகல பணிகளும் படிப்படியாக வளர்ச்சியடைந்து செல்வதை நாம் அவதானிக்கக் கூடியதாக உள்ளது என்று கூறித் தனது வெளியீட்டுரையை இனிதே நிறைவு செய்தார்.

## மதிப்பீட்டுரை:-

202ஆவது ஞானச்சுடர் மலருக்கான மதிப்பீட்டுரையை சைவப்புலவர் க. நித்திய தசீதரன் (ஆசிரியர்) அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தனது ஆரம்ப உரையில் ஞானச்சுடர் மலரை மதிப்பீடு செய்வது என்பது சிறியேனாகிய என்னால் இயலாத காரியம். அவ்வாறு இருப்பினும் ஒரு வரையறைக்கு உட்படுத்தி மதிப்பீடு செய்கின்றேன் என்று கூறினார்.

அடுத்து அவர் தனது உரையில், ஞானச்சுடர் மலரானது காத்திரமான கட்டுரைகள், கவிதைகள், பாடல்கள், வாழ்த்துப்பா, படங்கள் என்று நிறைய விடயங்களைத் தன்னகத்தே கொண்டு வெளிவருகின்றது என்று சபையோருக்குக் கூறினார்.

குறிப்பாக ஞானச்சுடர் மலரில் வெளிவந்த "காலியில் தேயிலை வளர்க்கும் தமிழரிடையே சமயப்பிரசாரம்" என்ற கட்டுரையின் மூலம் எமது சமயம் சார்ந்த செயற்பாடுகளின் குறைபாடுகளை நாம் அனைவரும் அறிய முடிகின்றது. இவ்வாறு நலிவடைந்து செல்வதைத் தடுக்க நாம் அனைவரும் எமது சமயம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும் என்று கூறித் தனது மதிப்பீட்டுரையை இனிதே நிறைவு செய்தார்.

# சுடர் தரும் தகவல்

நன்மை செய்வது, தர்மம் செய்வது, ஆபத்தில் உதவி செய்வது என்பன போன்ற நல்ல காரியங்கள் எமது சமூகத்தின் மேன்மைக்கும், செயற்பாட்டிற்கும் மிகவும் பயன்தரும் விடயங்களாகவே கணிக்கப்படுகின்றது. இவ்வகையான நடைமுறைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு எம்மத்தியில் நல்ல உள்ளங்கொண்ட பெரியோர்கள் இருந்துகொண்டுதான் இருக்கின்றார்கள். ஆனாலும் அவர்கள்மூலம் பயனடைந்தவர்கள் அதற்குப் பிரதியுபகாரமாக நன்றியுணர்வுடன் நடந்து கொள்ளாமையால் இவ்வகை உதவிகளைச் செய்வோர் திருப்தியற்ற நிலையில் காணப்படுகின்றனர். அதேநேரம் இவர்கள்மூலம் உதவியைப் பெற்றுக்கொண்டவர்கள் அவற்றின் தாற்பரியத்தை உணராது அலட்சியப்போக்குடன் செயற்படுகின்ற தன்மையும் காணக்கூடியதாக உள்ளது.

மற்றவர்களிடமிருந்து உதவியை அல்லது நன்மையைப் பெற்றவர்கள் தாம் உதவி பெற்றுவிட்ட காரணத்திற்காக காலங்காலமாக நன்றியுடன் நடக்கவேண்டுமா? அவர் அதைச் செய்திருக்காவிட்டால் வேறு யாராவது செய்திருப்பார்தானே எனும் பொருள்பட உரையாடுவதையும் நாம் கேட்கக் கூடியதாக இருக்கின்றது. உண்மையில் இவ்விதமான போக்குகள் சமுதாயத்தின் அடிப்படைத் தன்மைக்கும், மனிதாபிமானச் செயற்பாடுகளுக்கும் பாதிப்புக்களையே ஏற்படுத்தும்.

பரோபகார சிந்தனையை உடையவர்கள்மூலம் பயனடைந்த பலர் அதனை மதிப்பளித்து நன்றியுணர்வுடன் நடந்துகொள்ளுகின்றனர் என்பதைப் புரிந்துகொண்டு அந்த ஒரு சிலருக்காக வேனும் தாம் தொடர்ந்தும் தமது சேவையைப் பணியைச் செய்ய வேண்டும். இது இறைவன் வகுத்த வழி.

மேலும் "அன்பே சிவம்" என்ற எமது சமயத்தின் கோட்பாட்டுக்கு அமைய ஏனைய மனிதர்களிடம் அன்பு செலுத்தி அவர்களிடமிருந்து பிரதியுபகாரத்தையோ, நன்றியுணர்வையோ எதிர்பாராது நன்மைகளைச் செய்வதே பொருத்தமானது. இவ்வாறு துன்பமுறும் மனிதர்களிடம் நாம் அன்பு செலுத்தி அவர்களுக்க நன்மை செய்வதன்மூலம் இறையன்பை தாம் பெற்று இம்மையிலும், மறுமையிலும் இறையருளுக்கு பாத்திரமாக முடியும் என்பதை உணர்ந்து நன்மையைச் செய்வது சாலச்சிறந்ததாகும்.

"தர்மம் தலை காக்கும்" என்பர். நல்ல முறையில் தர்மத்தின் அடிப்படையில் வாழ்பவர்களுக்கு ஒரு பொல்லாப்புமில்லை. எவ்விதமான துன்பமும் அவர்களை அணுகா. கண்ணை இமை காப்பதுபோல நாம் செய்யும் தர்மம் நம்மைக் காப்பதோடு பிறர் வாழ்வுக்கு வழிசமைக்கின்றது. இதை அனைவரும் உணர்வோமானால் ஒரு துன்பமும் இல்லை.

# சந்நிதிமுருகன் கீர்த்தனம்

சங்கரன் மைந்தனே சந்நிதிச் செல்வனே
வந்தனை செய்துன்றனை வாழ்த்தி வணங்குவேனே

சிந்தனைக் கெட்டாத சிவசுப்ர மணியனே
எந்தனைக் கண்ணோக்கும் இனியனே குமாரனே
(சந்)

ஆணவம் கன்மம் மாயை
அகற்றிநல் லறிவூட்டும்
வேலினைக் கையேந்தி
விளங்கும் குமார சுவாமி
மாலின் மருகனாகி
வள்ளி தெய் வானை சூழ
சாலிநெல் வயல் சூழ்ந்து
தாழும் ஆற்றங் கரைக் கோயில்
(சந்)

காலமறிந்து மக்கள்
கார்த்திகை சட்டி வெள்ளி
நூலின் படியே நோற்க
நோற்கு மடியார்க் கெல்லாம்
பாலனாகத் தோன்றும்
பாலசுப்ர மணியனே
ஞாலம் எல்லாம் மயிலேறி
நாடி யருள் புரிவாய்
(சந்)

விண்ணவர் சிறை மீட்டால்
மேலவர்க் கருள் ஈந்தாய்
மன்னிச் செல்வச் சந்நிதி
மகா கோவில் வீற்றிருப்பாய்
புண்ணிய வுன்னடிக்கே
போற்றினேன் புவியின் மீதே
நண்ணி நான் பிறக்காமல்
நல்லருள் தர வேண்டினேன்
(சந்)

-முதுபெரும்புலவர் வை.க. சிற்றம்பலம்-

# கார்த்திகைமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**S. சதாசிவமூர்த்தி**
(கனடா)

**K. கனகசபேசன்**
(கனடா)

**உரிமையாளர்**
(E.S.P. நாகரெட்ணம் அன்கோ, யாழ்ப்பாணம்)

**K. கனகேஸ்வரன்**
(ஆணையாளர், தொழில் அலுவலகம், யாழ்ப்பாணம்)

**திருமதி தங்கராசா சரஸ்வதி**
(புலோலி மேற்கு)

**ச. வைத்தியநாதக்குருக்கள்**
(கந்தவனக்கடவை, பொலிகண்டி)

**திருமதி ச. சத்தியதேவன்**
(பிறவுண் றோட், யாழ்ப்பாணம்)

**T. நந்தகுமார்**
(கொழும்பு)

**ஐ. சிவானந்தம்**
(கிராமசேவையாளர், இராசவீதி, நீர்வேலி)

**மா. ஞானலிங்கம்**
(ஆசிரியர், அபிராமி மகால், அச்சுவேலி)

**க. தங்கராசா**
(ஜெயகணேசா ஸ்ரோர்ஸ், பருத்தித்துறை)

**சி.வ. முருகையா**
(ஆசிரியர், பரராஜசேகரப்பிள்ளையார் கோயிலடி, இணுவில்)

**து. நாகேந்திரம்**
(ஆனைக்கோட்டை)

**அ. அரவிந்தன்**
(G.P.S. றோட், கல்வியங்காடு)

**S. மங்களருபன்**
(கல்வளை வீதி, சண்டிலிப்பாய்)
**K.V. சிவனேசன்**
(சத்ய சாயி நிலையம், கொக்குவில்)
**ம.க. ஸ்ரீதரன்**
(சபாபதிப்பிள்ளை வீதி, உடுவில்)
**இ. தம்பிரத்தினம்**
(முருகேச பண்டிதனார் வீதி, சுண்ணாகம்)
**திருமதி P. குகதாசன்**
(K.K.S. வீதி, இணுவில்)
**சு. இரத்தினவடிவேல்**
(பழைய சோடாக் கடையடி, வல்வெட்டித்துறை)
**வ. செல்லத்துரை**
(சங்கீத கலாபூஷணம், அச்சுவேலி)
**K. கருணாநிதி**
(சாமியன் அரசடி, கரவெட்டி)
**சி. விஜயகுமாரன்**
(உரும்பராய்)
**ம. தியாகலிங்கம்**
(வியாபாரிமூலை, பருத்தித்துறை)
**செல்வநேசன் கஜன்**
(கல்வளை வீதி, சண்டிலிப்பாய்)
**க. பரராஜவிருந்தம்**
(காவில், கரணவாய்)
**சு. தில்லையம்பலவனார்**
(இளை. விவாகப் பதிவாளர், புத்தூர்)
**கந்தசாமி கதிர்காமத்தம்பி**
(மல்லியோடை, வல்வெட்டி)
**K. மகேந்திரன் J.P.**
(நவநீதபதி, இமையாணன்)
**திரு செந்தில்நாதன்**
(கொக்குவில் கிழக்கு)
**R. பத்மா**
(சுண்டுக்குளி)
**தி. தயாபரன்**
(வீரமனை, குப்பிளான் தெற்கு)

கி. பகவத்சிங்கம்
(இளை. அதிபர், நீர்வேலி)
யோகராசா குமார்
(ஆலடி வீதி, மட்டுவில் கிழக்கு)
அ. தில்லைநாதன்
(சிவன்வீதி, ஆவரங்கால்)
செ. பாலச்சந்திரன்
(K.K.S. வீதி, யாழ்ப்பாணம்)
சுபத்திரா விவேகானந்தன்
(அளகொல்லை, அளவெட்டி)
து. சிவகுமாரன்
(கணேசன் சென்ரர், K.K.S. வீதி, இணுவில்)
கனகலிங்கம் மயூரன்
(பாரதிவீதி, அச்சுவேலி)
ச. வதனி
(நீர்வேலி மேற்கு)
நா. கார்த்திகேசு
(புத்தூர் கிழக்கு)
நீ. மயில்வாகனம் J.P.
(வருணன், அச்சுவேலி)
T.N. இராஜா
(பொன்கிளர், சங்கானை)
சோதிரட்ணம் அனுஷியா
(அரசடி சந்தி, நவாலி)
செ. உமாபதி
(பிராமண வீதி, தும்பளை)
V. சந்தனத்தேவன்
(தூதாவளை, கரணவாய்)
ஐயாத்துரை நடராசா
(சிவசிதம்பரம் வளவு, கரவெட்டி)
S. செந்தூரன்
(மாருதி இல்லம், மாறாப்புலம், அல்வாய்)
செல்வி அருளம்பலம் சுசிகலா
(கொத்தியகாடு, தொண்டைமானாறு)
ப. நா. தம்பிராசா
(K.K.S. வீதி, இணுவில்)

**A. பிரதாபன்**
(சந்திரபுரம், உடுவில்)
**ந. இராசேந்திரம்**
(சோதிவாசா, இணுவில்)
**C.H. புவனேஸ்வரி**
(மானிப்பாய்)
**திருமதி ஆறுமுகம் உமாதேவி**
(பண்ணாகம், சுழிபுரம்)
**திருமதி கிருஷ்ணகுமாரி கனகசிங்கம்**
(சுகவனம், உரும்பராய்)
**V.S. மருதலிங்கம்**
(அரசடி சந்தி, மானிப்பாய்)
**அ. பாலேஸ்வரி**
(கதிரிப்பாய், அச்சுவேலி)
**த. கணபதிப்பிள்ளை**
(சாயி இல்லம், கொல்லோலை, இமையாணன்)
**மு. நவரெத்தினம்**
(வீரப்பதிராஜன், கரணவாய்)
**K. தங்கவேலாயுதம்**
(பருத்தித்துறை)
**சிவகுரு குகதாசன்**
(செல்வமதி, ஆவரங்கால்)
**வ. தம்பையா**
(கலட்டி வளவு, புலோலி மத்தி)
**சி.வ. புஸ்பராசா**
(வட்டுவனை, புலோலி தெற்கு)
**திருமதி செல்வநாயகி ஞானசுந்தரம்**
(செங்குந்தா வீதி, கரவெட்டி கிழக்கு)
**வைத்திலிங்கம் பிரபாகரன்**
(துரைவீதி, கொக்குவில்)
**S. செல்லையா**
(போதராமடம், துன்னாலை)
**வைத்திலிங்கம் உதயமலர்**
(கரணவாய் தெற்கு)

# அறம் வயப்பட்ட அறிவே ஆக்க அறிவு

– திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள் –

நாம் செலவு செய்வதில் எடுக்கின்ற சிரத்தை போன்று உழைப்பதில் எடுக்கின்றோமா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆனால் நம்மில் அநேகம்பேர், அப்படிச் செய்வதில்லை. உழைப்பின்மூலம் நாம் ஒன்றை உருவாக்குகின்றோம். ஆனால் செலவு செய்வதின்மூலம் அதனை இழக்கின்றோம். அவ்வாறு வருந்தி உழைத்துத் தேடிய ஒன்றை இழப்பதினால், தமக்கும், பிறர்க்கும் அதனால் நன்மையோ, நல்ல பயனோ ஏற்படுமானால், அந்தச் செலவு, இழப்பாகக் கொள்ளப்பட மாட்டாது. ஆனால், நன்மையை ஏற்படுத்தாத செலவு வீணானது. எனவே அதனை விரயம் என்கிறோம்.

எப்போதும், நாம் உழைத்துத் தேடிய செல்வத்தைச் சிக்கனமாகவும், விவேகத்துடனும் செலவு செய்ய வேண்டும். ஊதாரித்தனம் செய்தால், செல்வம் நம்மை விட்டுச் சென்று விடும். பணம், பொருள், பண்டம் என்பனவற்றிற்கு மாத்திரமல்ல, எம்மிடம் உள்ள அறிவுச் செல்வத்திற்கும் இது பொருந்தும். அறிவினை வீணாக்கக் கூடாது என்னும்போது இரண்டு விடயங்களைக் கருத்தில் கொள்ள வேண்டும். ஒன்று நம்முடைய அறிவைப் பிறருடன் பகிர்ந்து கொள்ளாமல், நமக்குள்ளேயே தேக்கி வைத்திருத்தல்; மற்றையது நம்முடைய அறிவைப் பிறரின் அழிவிற்காகப் பயன்படுத்துதல். இவ்விரண்டுமே அறிவின் விரயமாகக் கொள்ளப்பட வேண்டும்.

இன்று பெரும்பாலும், மனித அறிவு, மனித அழிவிற்காகவே பயன்படுத்தப்படுவதைக் காணக்கூடியதாக உள்ளது. அறிவு சாந்தியையும் சமாதானத்தையும் உலகில் ஏற்படுவதற்குப் பதிலாக, அமைதியின்மையையும் அனர்த்தங்களையுமே உருவாக்கி வருகின்றது. உலகினை ஒன்றாகக் காண்பதற்கு அறிவு இன்று உதவவில்லை. மாறாக, மனிதர்களை அநாகரிக நிலைக்கு இட்டுச் செல்வதையே இன்றைய அறிவு குறிக்கோளாகக் கொண்டு மனிதர்களைப் படுத்தாத பாடுபடுத்தி வருகிறது. அறிவு விருத்தியடையாத காலத்தில் மனிதர்களிடம் காணப்பெற்ற அன்பும், அரவணைப்பும்; ஒற்றுமையும், புரிந்துணர்வும், அறிவுப் பெருக்கம் பன்மடங்கு ஏற்பட்டுள்ள இக்காலத்தில் மனிதர்களிடம் இருந்து ஏனோ விலகிக் கொண்டன என்பதுதான் புரிந்துகொள்ள முடியாத ஒன்றாக உள்ளது. “அறிவு அற்றங் காக்கும் கருவி” என்கிறார் வள்ளுவப் பெருந்தகை. ஆனால் மனிதனிடம் அகப்பட்டுக் கொண்ட அறிவு அதன் பணியை இன்று மறந்து வருகிறது.

இந்த நூற்றாண்டில், அறிவுப் பெருக்கத்தினால் மனித குலத்திற்குக் கிடைத்த நன்மைகளை விடத் தீமைகளே பன்மடங்கு அதிகம். அல்பிறட் நொபெல், பெருங்கற்பாறைகளை உடைத்து நொருக்குவதற்காகவே, தனது அறிவைப் பயன்படுத்தி “டைனமற்” என்னும் வெடிமருந்தை அறிமுகம் செய்தார். அதற்கு முன்னர், கற்பாறைகளை உடைப்பதற்கு மனித சக்தியும், நேரமும் பெருமளவில் செலவு செய்யப்பட்டன. இக் கண்டுபிடிப்பினால், சக்தியும் நேரமும் உழைப்பும் விரயமாவதில் இருந்து தவிர்க்கப்பட்டன. ஆனால் இன்று நடப்பது என்ன? அல்பிறட் நொபெல் என்பவரின் அறிவு மனிதகுல நாசத்திற்கு இட்டுச்சென்று விட்டமையைக் காண்கின்றோம். அறிவு அற்றங் காக்கும் கருவியாக அமையவில்லையே. அணுசக்தி ஆக்கத்திற்காகவே கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால்

**தூரப் பயணம் செய்பவன் பலவற்றையும் அறிவான்.**

அழிவிற்காகவே பெரும்பாலும் பயன்படுத்தப் பட்டு வருகிறது; வருங்காலத்தில் இன்னும் அதிகமாகவே, அணுசக்தி, அழிவுகளை உலகளாவிய நிலையில் ஏற்படுத்தக்கூடும் என அஞ்சப்படுகிறது. அணுசக்திப் பரி சோதனை நடக்கப்போகிறது என்று அறிந்த வுடன் அகில உலகமுமே அஞ்சி நடுங்கு கின்றது. எதிர்ப்புக் குரலை எழுப்புகின்றது. அணுசக்திப் பரிசோதனையினால் நல்ல விளை வுகள் ஏற்படக்கூடும் என்று உலக மக்கள் நம்ப ஆயத்தமாகவில்லை.

அணுசக்தியினால் மனிதகுலத்திற்கு எவ்வளவோ ஆக்கபூர்வமான நன்மைகளை ஏற்படுத்த முடியும். ஆனால் அணுசக்தி அழி வைத்தான் செய்யும் என்று மக்கள் திடமாக எண்ணுகின்றனர். கடந்த காலத்தில் கண்ட கசப்பான அனுபவங்களே இதற்குக் காரணம். அறிவு பெருகிவிட்ட போதிலும், மனித குலத்தை, அறிவு காப்பாற்றும் என்ற நம்பிக்கை இன்று படிப்படியாகக் குறைந்து வருகிறது.

உண்மையில், அறிவு, மனித குலத்தை வாழ்விக்க வேண்டியது; அறிவு பெருகப் பெருக மனித குலத்தின் வாழ்வு மேலும் மேலும் செழிப்பும் வளமும் மேன்மை யும் பெற்று இலங்க வேண்டும். மனித குலத் தின் பாதுகாப்பும், வளர்ச்சியும் மேலும் மேலும் உறுதியாக வேண்டும். ஆனால் அறி வின் வளர்ச்சியைக் கண்டு அதற்கு அஞ்சி வாழ வேண்டியவர்களாக இன்று உலகத்தவர் உள்ளனர். இதுவே மனித குலத்திற்கு அறிவு செய்துவரும் கைங்கரியம். இன்றைய இக்கட் டான காலகட்டத்திலாதல் நாம் ஓர் உண் மையை உணர்ந்து கொள்ளுதல் அவசியம். வெறும் அறிவு வளர்ச்சி மட்டும் உலகத் திற்கு நன்மையை ஏற்படுத்திவிடாது. அறிவு தூய்மையின் அடிப்படையில், மனுதர்மத்தின் ஆதாரத்தில், மனித விழுமியங்களின் உடன் பாட்டுடன் வளர்ச்சிபெற வேண்டும். அப் பொழுதுதான், அந்த அறிவு வளர்ச்சி, உலக நன்மையின் பொருட்டு நல்ல விளைவுகளை ஏற்படுத்தும். அமைதியையும், ஆக்கத்தை யும் நிலை நாட்டும். இன்றைய அறிவு வளர்ச் சியில் மனிதாபிமானம் செறியவில்லை; மனிதப் பண்புகள் விரவவில்லை. அதனால் அறிவு அற்றங் காக்கும் கருவியாகவும் இல்லை; சுற்றம் பேணும் நிலையிலும் இல்லை. குற்றம் புரிவதையே, அறிவு ஊக்கு வித்து வருகிறது. தெரியாமல் செய்யும் குற்றம்; தெரிந்து செய்யும் குற்றம் எனக் குற்றம் இரண்டுவகையாக உள்ளது. இதில் தெரிந்து செய்யும் குற்றம், அது குற்றம் என்று அறிந்த பின்னர் புரியப்படும் குற்றம் ஆகும். அறிவினால் உந்தப்பட்டு அறிவின் உதவியோடு அக்குற்றம் செய்யப்படுகின்றது. கொலை செய்தல் கொடிது என்று தெரியும்; கூடா ஒழுக்கம் தவறு என்று நன்கு தெரியும்; பிறரை இம்சித்தல், வஞ்சித்தல், நம்பிக்கைத் துரோகம் செய்தல், சதி செய்தல் என்பன பாதகங்கள் என்பது யாருக்குத்தான் தெரி யாது? பஞ்சமா பாதகங்கள் எவை என்று கேட்டால், அவற்றை ஒன்றும் விடாமல் பட்டி யல்படுத்திக் கூறுவார்கள். ஆனால், இந்தக் குற்றங்கள் சமூகங்களில் மலிந்தே காணப் படுகின்றன. இவற்றை அறியாமல் செய்த குற்றங்கள் என்று கொள்ள முடியுமா? ஆய்வு செய்து பார்த்தால், சமூகங்களில், கற்று அறிவு பெற்றவர்கள் எனக் கணிக்கப்படுவோர் மத்தியிலேயே குற்றங்களும், கூடா ஒழுக்கங் களும் தாராளமாகக் காணப்படுதலை அறிய முடியும். கற்றதனால் என்ன பயன்? அறிவு பெற்றதனால் என்ன புண்ணியம்? என்று கேட் கத் தோன்றுகிறதல்லவா? இன்று அறிவு ஆனது குற்றங்கள் செய்வதற்கும், கூடா ஒழுக்கம் புரிவதற்கும், அவற்றுக்கான திட் டங்கள் வகுப்பதற்கும், அவற்றை மறை வாகச் செயற்படுத்துவதற்கும், தெரிய வந் தால் நியாயப்படுத்துவதற்கும் துணைபோகின்ற நிலைக்குக் கேவலம் கீழிறங்கிவிட்டது.

நற்பண்பு தனக்குத்தானே பரிசாகும்.

எனவேதான், இன்றைய மனிதர்கள் தமது அறிவை, வீணாக்குகின்றனர்; விரயமாக்கு கின்றனர் என்று கூறவேண்டியுள்ளது.

நமது அறிவு பிறரை வாழ்விக்க வேண்டும் அத்தகைய அறிவையே வள்ளுவர் அற்றங்காக்குங் கருவி என்று குறிப்பிட்டார்.

"அறிவினான் ஆகுவதுண்டோ பிறிதின் நோய்
தந்நோய் போற் போற்றாக் கடை"

பிற உயிர்களுக்கு நேருகின்ற துன்பங்களைத் தமக்கு ஏற்பட்ட துன்பங்களாகக் கொண்டு, அத்துன்பங்களைப் போக்குவதற்கு ஒருவனுடைய அறிவு துணை செய்யாவிட்டால், அவனின் அறிவு வீணாகிவிடுகின்றது. அறிவு இருந்தும் அத்தகைய ஒருவன் அறிவிலியே. அது பயனற்ற அறிவு ஆகிவிடுகிறது. இன்று, அறிவைத் தம் நலத்திற்காகவே, மனிதர்கள் பயன்படுத்துவதைக் காணக்கூடியதாக உள்ளது. பிறர்நலத்திற்காக, அறிவு பயன்படுத்தப்படல் பெரிதும் அருகி வருகிறது. சமுதாயத்தில் தோன்றியுள்ள பல்வேறு பிரச்சினைகளுக்கும், முரண்பாடுகளுக்கும் இந்தத் துர்ப்பாக்கிய நிலையே காரணம்.

"பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்"

என்பது குறள்.

"முற்பகல் செய்யில் பிற்பகல் விளையும்"
"தினை விதைத்தவன் தினை அறுப்பான்
வினை விதைத்தவன் வினை அறுப்பான்"

என்பன ஆன்றோர் வாக்குகள். அவை பொய்ப்பதில்லை. முழுதும் உண்மை. நாம் பிறர்க்கு இழைக்கும் அநீதிகள், துன்பங்கள், தொல்லைகள் என்பன நாம் நமக்கே இழைப்பதாக எவன் ஒருவன் கருதுகிறானோ, அவன் அறிவாளி ஆகின்றான். அவன் தனது அறிவைச் செவ்வையாகப் பயன்படுத்துகின்றான். அறிவு விரயமாவதைத் தடுத்து நிறுத்திவிட்ட பெருமைக்குரியன் ஆகிவிடுகின்றான்.

இன்று உலகில் அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் விரவிக் காணப்படுகின்ற போர் எத்தனங்கள், வன் செயல்கள், குழப்பங்கள், கொந்தளிப்புகள் யாவுமே, இக்கால மனிதர்கள் தாம் பெற்றுள்ள அறிவு ஆற்றல்களை வீண்விரயம் செய்தவற்குச் சான்றுகளாகும்.

நாம் அறிவைப் பயன்படுத்துவதன் மூலம். அறிவைச் செலவு செய்வதன்மூலம் ஒன்றை ஆக்கவேண்டும்; எதனையும் அழித்துவிடல் ஆகாது. சுருங்கக் கூறின், அறிவுடையார் யார் என்றால், தமது அறிவை வீணாக விரயம் செய்யாதார் என்று கூறலாம். அறிவிலார் என்போர், தமது அறிவை விரயம் செய்வோர். அவர்கள் அறிவு வாணிபம் நடத்துபவர்கள்; அறிவை விலைகூறி விற்பவர்கள். இலாபம் ஒன்றே அவர்களுக்கு முக்கியம். இத்தகைய "அறிவு வியாபாரி"களாலேயே இன்றைய உலகில் அமைதியின்மையும், வன்செயல்களும், அடக்கு முறைகளும் பல்கிப்பெருகியுள்ளன.

அறிவு, ஆராய்ச்சி என்பன பெரும்பாலும், இன்று தமக்கு ஆதாயத்தையும்; பிறர்க்கு அழிவையும், இம்சையையும் ஏற்படுத்துவனவாகவே உள்ளன. முன்னர்க் காலங்களில் உடல் வலிமை கோலோச்சியது. உடல் பலம், ஆட்பலம் கொண்டவர்கள் ஏனையோரை அடக்கி ஆண்டனர். ஆனால் இக்காலத்தில் அறிவு வன்மையும் விவேக நுட்பமும் கோலோச்சுகின்றன.

**குறைவாகப் பேசி நிறையப் பணி செய்.**

அறிவும், விவேகமும் தூய்மையை இழந்த நிலையில்; மனிதாபிமானமற்ற முறையில்; அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல், போட்டா போட்டி என்பவற்றுடன் கைகோர்த்து உறவாடும் நிலையில், கீழ்நிலைக்கு வந்து விட்டன. அத்தகைய அறிவும் விவேகமும், உலகில் சமாதானத்தையும் நீதியையும் நிலைநாட்டுமென்று எப்படி எதிர்பார்க்க முடியும்?

முன்னரைக் காட்டிலும், தற்காலத்தில் அறிவு பன்மடங்கு வளர்ச்சி பெற்றுள்ளமையை மறுப்பதற்கில்லை. ஆனால் அந்த அறிவு வளர்ச்சி, மனித சமுதாயத்தில் ஏற்படுத்தியுள்ள தாக்கம் எதிர்மறையான தாகவே உள்ளது. அது அறிவின் குற்ற மன்று; அறிவைப் பிழையான முறையில் பயன்படுத்துவோரின் குற்றம் ஆகும். அறிவினைத் தூய்மையின் அடிப்படையில் வளர்ச்சிபெறச் செய்ய, மனிதர்கள் முயல வேண்டியது இன்றைய நிலையில், மிக அவசியமானதாகும். அதேவேளை தாம் பெற்ற அறிவைப் பிறருடன் பகிர்ந்து கொள்ளாமல் தம்முள்ளே பதுக்கி வைத்திருப் போரும் உளர். இவர்கள் குடத்துள் விளக்குப் போன்றவர்கள். இவர்களின் அறிவும் எவருக்கும் பயனற்றதாகி, விரயமாகி விடுகின்றது. "ஈதல் அறம்" என்பர். நல்லறிவைப் பிறருக்கு ஈதலும் அறம் ஆகும். அதனால் பிறர் நன்மையடைகின்றனர். அறிவை அறம் ஆக்குவோம். அறிவு வீண்விரயமாவதைத் தவிர்ப்போம். மனித அறிவு, அறம் வயப்படும் போதுதான் மானுடம் தழைக்கும், உலக மாந்தர் அனைவரும் இன்பமாக வாழ்வர்; உலக அமைதி எய்தப்படும்.

## சந்நிதிக் கந்தன்
## கழற்கோர் கவிமாலை - 58

பல்லவி

நாமஇசை பாடும் நல்வரந்தா – முருகா – எழில்
மாமயில் வாகனாவுன் மகிமையெலாம் பகரும்

அநுபல்லவி

தேமலர்ப் பொழில்சூழும் செல்வச்சந்நிதிக் கந்தா!
பூமலர்ச் சேவடியைப் போற்றிநின்றே இனிக்கும்

சரணம்

காமனை எரித்தசிவன் கண்ணிருந் துதிசெல்வா
கோமளப் புன்னகையால் கொடுவினை களைமுதல்வா!
சாமளை யாளளித்த சக்தியுடை வடிவேலா!
தாமரை மலர்ப்பாதா! சண்முக நாதா!

வாமனின் மருகா! வரமருளும் முருகா!
மாமயிலேறி வலம் மாநிலம்வரு மழகா!
சேமமெலாம் அருளும் செல்வச் சந்நிதிக் கந்தா!
சோமசுந்தரன் மைந்தா! சொக்கிடுந் தமிழாலுன்

-இராசையா குகதாசன்-

நல்ல வேலை ஒருபோதும் வீண் போவதில்லை.



# போற்றித் திருவகவல்

சகத்தினுற்பத்தி

(தில்லையிலருளிச் செய்யப்பட்டது)

நிலைமண்டிலவாசிரியப்பா

மறைந்த
சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள்
(யாழ்ப்பாணம் - காரைநகர்)



ஐயா போற்றி யணுவே போற்றி
சைவா போற்றி தலைவா போற்றி
குறியே போற்றி குணமே போற்றி
நெறியே போற்றி நினைவே போற்றி
வானோர்க் கரிய மருந்தே போற்றி
ஏனோர்க் கெளிய விறைவா போற்றி

**பதவுரை:-**

ஐயா போற்றி- வழிபாட்டிற்குரியவனே நினக்கு வணக்கம்; அணுவே போற்றி- துகள்போல நுண்ணியனே நினக்கு வணக்கம்; சைவா போற்றி- சைவாசாரியனே நினக்கு வணக்கம்; தலைவா போற்றி- எவ்வகை மேம்பாட்டினர்க்கும் தலைவனே நினக்கு வணக்கம்; குறியே போற்றி- லிங்க வடிவினனே நினக்கு வணக்கம்; குணமே போற்றி- எண்குணமுடையவனே நினக்கு வணக்கம்; நெறியே போற்றி- வீட்டு நெறியை அருள்பவனே நினக்கு வணக்கம்; நினைவே போற்றி- நினைத்தற் குரியவனே நினக்கு வணக்கம்; வானோர்க்கு அரிய மருந்தே போற்றி- தேவர்களுக்கும் கிடைத்தற்கரிய மருந்துபோல்பவனே நினக்கு வணக்கம்; ஏனோர்க்கு எளிய இறைவா போற்றி- வானவரல்லராயினும் அன்பரான ஏனோர்க்கு எளிவந்தருளும் இறைவனே நினக்கு வணக்கம்.

ஐயன்- வழிபாட்டிற்குரியவன். பருப்பொருள்களுக்கெல்லாம் பருப்பொருளாயுள்ள இறைவனே நுண்பொருள்களுக்கெல்லாம் நுண்பொருளாயுமிருத்தலின் "அணுவே" என்றார். "அணு அணுவி லிறந்தாய்" (சத25) என அடிகள் பிறாண்டு அருளியமையுங் காண்க. "அணுவை" "பரமாணுவாய்" "அணுவாகி யாதியாய் நின்றான் கண்டாய்" எனத் தேவாரத்து (நாவு 214:1, 240:6; 253:7) வருவனவுங் காண்க.

அடிகள் "ஐயா றதனிற் சைவ னாகியும்" (கீர்த்தி 85) எனப் பிறிதோரிடத்து அருளுமாற்றல் சைவா என்பதற்கு ஈண்டுச் சைவாசாரியனே எனப் பொருளுரைக்கப்பட்டது. இனி, இறைவன் அநாதி சைவனாதலின் "சைவா போற்றி" என்றார் எனினுமாம். "தழலிலங்கு

விவேகிக்கு ஒரு சொல் போதும்.

திருவுருவச் சைவனே" (ஞான 367:7) "மான்மறி மழுவொன்றேந்தும் சைவனே" (நாவு 62:4) எனத் தேவாரத்து வருவனவுங் காண்க.

குணங்குறி கடந்த முழுமுதலிறைவன் அன்பர் வழிபாட்டின் பொருட்டுக் கண்மசாதாக் கியமாகிய சிவலிங்கவுருவாக அமைந்தமையின் "குறியே" என்றார். குறி- லிங்கம்; அடையாளம்.

தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை என்னும் எண்வகை இறைமைக் குணங்களை இயல்பாகவுடைமையின் "குணமே" என்றார். "எட்டுக்கொலாமவற்றில் பெருங்குணம்" "எட்டுவான் குணத்தீசன்" எனத் தேவாரத்து (நாவு 18:8; 203:8) வருவனவுங் காண்க.

நெறி- வீட்டு நெறியைக் கூறும் நூல், "பொறிவாயிலைந்தவித்தான் பொய்த்தீ ரொழுக்க நெறி" (குறள்) என்றார் திருவள்ளுவரும். வீட்டு நெறியைக் கூறும் நூலை அருள்பவனாதலின் "நெறியே" என்றார். எக்காலத்தும் நினைத்தற்குரியவன் இறைவனாதலின் "நினைவே" என்றார். "நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினை, என்றும் சிவன்றாள் இணை" எனப் பிறரும் அருளியமை காண்க.

இறைவன், அமுதுண்ட தேவர்களுக்கும் கிடைத்தற்கரிய வீடுபேற்றினை அருளும் அருமருந்தாயிருத்தல்பற்றி "வானோர்க்கரிய மருந்தே" என்றார். ஏனோர் எனப் பொதுவகையாற் கூறினும் அது மெய்யன்பரையே குறிக்கும். "முக்கண துடையெந்தை. தன்னை யாவரும் அறிவதற்கரியவன் எளியவன் அடியார்க்கு" (அதிசய 3) "யாவராயினு மன்பரன்றி யறி யொணா மலர்ச் சோதியான்" (சென்னி1) என அடிகள் பிறாண்டு அருளியமையுங் காண்க.

(தொடரும்...

## சந்நிதியின் பாத்திரமே ஆச்சிரமம்

எல்லாம் அவனென்று எதையும் தொடங்கி விட்டால்
நல்லவை யாவும் நனிசிறக்கும் - வெல்லவே
அப்பாலும் உன்னை அறம் செய்யத்தூண்டுமே
செப்பிடும் சந்நிதி என்றறி.

ஆவன யாவுமே அவனென்று சொல்லியே
மோகன சுவாமிகள் பணிசெய - ஓவென
ஊருளோர், உலகிலோர் உவந்தனர் பேறென
தேர்ந்தனர் தொண்டைமானாற்றை.

சந்நிதியின் சுகத்தை யாரறிவர்? முருகனின்
சௌபாக்கியத்தை யார் அனுபவிப்பார் - மன்னிய
சேத்திர மகிமையால் செல்வச் சந்நிதிக்கு
பாத்திரமாய் அமைந்ததே ஆச்சிரமம்.

–கே.எஸ். ராஜா–

மனதின் சக்தியே எண்ணத்தின் சக்தி.

# பிட்டுக்கு மண்சுமந்த பெருமான்

– திரு நா. நல்லதம்பி அவர்கள் –

தென்னவன் பிரமராயன் என்ற பெயரோடு பாண்டிய மன்னனுக்கு முதன்மந்திரியாகிப் பணி செய்தவர் திருவாதவூர் அடிகள் என்னும் மாணிக்கவாசகர்.

ஒருமுறை, திருவாதவூரரிடம் பொன்னும் பொருளும் ஏவலாளரும் கொடுத்துக் குதிரைகள் வாங்கத் திருப்பெருந்துறைக்கு அனுப்புகிறான் பாண்டிய மன்னன்.

மந்திரிப் பதவியில் இருந்தாலும் பக்திமார்க்க நெறியில் நின்றவர் திருவாதவூரடிகள். இவரை ஆட்கொள்ளும் வண்ணம், இவர் போகும் வழியிலே, ஒரு குருந்தமரச் சோலையிலே, சிவபெருமான், சிவனடியார்கள் புடைசூழ வீற்றிருந்து உபதேசஞ் செய்கின்றார்.

இதனை அவதானித்த திருவாதவூரர், கற்றாவைக் கண்ட கன்றுபோல ஓடிச்சென்று அந்த அடியார் கூட்டத்தில் கலந்து விட்டார்.

குதிரைக்காகக் கொண்டு சென்ற பொன்னும் பொருளும் அங்குள்ள அடியார்களோடு செலவு செய்தார். இது கண்ட ஏவலாளர், திரும்பிப் போய் அரசனிடம் முறையிட்டார்கள். சினங்கொண்ட பாண்டியன், வாதவூரரை ஊர் திரும்பும்படி கட்டளையிட்டான்.

ஆவணிமாதம் மூல நட்சத்திர தினத்தில் குதிரைகள் வரும் என கூறி அனுப்புகிறார் குருந்தமர நிழலிலிருந்த சிவபெருமான்.

அதன்படி வந்துசேர்ந்த குதிரைகள், அன்றிரவு நரிகளாகிக் காட்டுக்கு ஓடிவிட்டன. நரிகளைப் பரிகளாக்கித் திருவிளையாடல் புரிகிறார் சிவபெருமான். ஆனால் திருவாதவூரரை வைகைக் கரைச் சுடுமணலில் நிறுத்தும்படி தண்டனை வழங்கினான் பாண்டியன்.

வைகை ஆற்றைப் பெருக்கெடுக்க வைத்து, வாதவூரரின் பாதங்களைக் குளிரச் செய்கிறார் தில்லையம்பலவாணர். மன்னனுக்கு விளங்கிவிட்டது. “ஆம் பொருள் நமதேயானால் அறம் பிறர்க்கு ஆவதுண்டோ” திருவாதவூரர் செலவு செய்த பணம் பாண்டியனுடையது. ஆகவே அதனால் வரும் புண்ணியமும் அரசனை (தன்னை)ச் சேரும் என எண்ணினான். வாதவூரரை மன்னித்து விட்டான். வைகை ஆற்றுக்கு அணை கட்டும் பணியில் ஈடுபடும்படி வேண்டினான்.

பாம்பணி செய்யவேணிப் பரம்பரன் அடியார் கையில்
ஆம்பொருள் நமதேயானால் அறம்பிறர்க் காவதுண்டோ?
தேம்படும் அலங்கல் மார்பீர்! செயலிதற்கு, உமது மேனி
சாம்பியது அவமே; யான்செய்தண்டமே தகவிலாமை

என வருந்தினான் அரசன்.


ஆக, விருப்பும் வெறுப்பும் இல்லாத மனத்தராகிய மணிவாசகர், வைகையாறு ஊரை அழிக்கவிடாமல் இறைவனை வேண்டிக்கொண்டு,

“விருப்பொடு வெறுப்பிலாத மெய்ம்மையார், தம்மையாண்ட
திருப்பதம் நினைந்தார் வைகைச் செழும்புனல் ஊர் கொளாமல்”

வாதவூரர், அணைகட்டும் வேலையைப் பொறுப்பேற்றார். ஆற்றுக்கு அணைகட்ட வரும்படி ஊர்மக்களுக்கு அழைப்பு அனுப்பி, அவரவர் பங்கு அளந்து விடப்பட்டது.

அவ்வூரிலே பிட்டு விற்றுச் சீவிக்கும் சிவபக்தையான வந்தியென்னும் செம்மனச் செல்வியை உலகறியச் செய்யும் நோக்கில், தனது இந்தத் திருவிளையாடலோடு இணைக்கிறார் சிவபெருமான்!

செம்மனச் செல்வி தனக்குக் கூலியாள் இல்லையே என்று சிவபெருமானிடம் முறையிட்டு அழுதார். அடியார்க்கெளியாரான இறைவன், அம்மூதாட்டிக்கு உதவும் பொருட்டுப் பெரும்பசி உடையவர்போல் வந்து கூலியாள் தேவையா எனக் கேட்டு அத்தெருவில் போனார்.



இடப வாகனம் இல்லை; புலித்தோலாடையின்றிக் கந்தைத் துணி; முடிமேல் வெண்பிறையும் கங்கையும் இல்லை, சும்மாடும் கூடையுமாக வந்த கூலியாளை அணுகிய அம்மையார், "மகனே! இப்போது யான் தரும் பிட்டை உண்டுவிட்டுப் போவாயானால், மாலையில் கூலி தருகிறேன்; எனது பங்கை அடைப்பாயா? எனக் கேட்டார்.

அதற்கு உடன்பட்ட கூலியாள், தமது கந்தைத் துணியில் கொஞ்சம் பிட்டையும் முடிந்துகொண்டு போகிறார். அங்கு ஒருமுறை மண் சுமந்து கொட்டுவதும், பின் பிட்டை மென்று சுவைத்து மூதாட்டிக்கு அருள் சுரப்பதுவுமாகத் திருவிளையாடல் புரிகின்றார். இதனை அவதானித்த வந்தி அம்மையார், வழுதியின் சேவகன் வந்து தண்டிப்பானே என்று வருத்தமுற்றுக் கூறுகின்றார். அம்மா நீங்கள் வருந்த வேண்டாம்; வீட்டுக்குப் போங்கள்; நான் செய்து முடிப்பேன் என நயம்படக் கூறி அனுப்பிவிட்டுக் கூலியாள் மரநிழலில் படுத்து உறங்கிக் கிடக்கிறார்.

மேற்பார்வை செய்ய வந்த சேவகன் இதனைக் கண்டுகொள்கிறான். அவரை எழுப்பியபோது, பயந்து நடுங்குபவர்போல் நடித்தார் இறைவன். ஆனால், தண்டலாளன் உமையாள் பங்கனை ஓங்கி அடிக்கிறான். அடி படுமுன்னரே அவர் மறைந்து போகிறார். அந்த அடியானது,

தார்மேல் நின்றிலங்கு புய வழுதிமேலும்,
தன்மனை மங்கையர் மேலும், அமைச்சர் மேலும்,
ஆர்மேலும் சென்றுபெருஞ் சேனைமேலும்,
அயன் மேலும் மால்மேலும், அறவோர் மேலும்,
தேர்மெல்வெம் பகல் மேலும், மதியின் மேலும்,.
சிறந்துளஇந் திரன்மேலும், தேவர்மேலும்,
பார்மேலும் கடல்மேலும், மரங்கள் மேலும்
பட்டது அரன் மெய்யிலடி பட்டபோதே.

என்கிறார் கடவுள் மாமுனிவர். மேலும் அவர்,

"........................
ஆயவுயிர்க் குயிராகி நிற்குந்தன்மை
அவனிதலத் தஞ்ஞானர் அறிந்து பாதச்
சேய மலர் வழுத்துதற்கோ கூலியாளாய்ச்
சென்றுமுடி மண்சுமந்தார் தில்லைநாதர்"

என்றும் சிவனது திருவிளையாடலின் பயன்பாடு கூறுவது காண்போமாக.

பண்சுமந்த பாடல் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான், பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன் மண்டலத்து ஈசன்,
கண்சுமந்த நெற்றிக் கடவுள், கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண்டு அக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதும்காண் அம்மானாய்.

-திருவம்மானை.

திருச்சிற்றம்பலம்

## சந்நிதியான் திருப்பதிக்கு வாருங்கள்

தொண்டை மானாற்றங்கரையில் கோயில்கொண்ட
தொந்திக்கணபதியின் தம்பியே!
தோத்தரித்தோம் சந்நிதியானே - எங்கள்
தொல் வினைகள் தீர்த்திடப்பா!
ஆனைமுகன் சகோதரா ஆறுமுகக் கந்தா!
ஆதி நாராயணன் மருகா வெற்றிவேலவா!
சிவசக்திமைந்தா தமிழ்த் தலைவா!
சிறுவனாய்த் தந்தையின் செவியில் உபதேசித்தவா!
சிறையில் வைத்துப் பிரமனைச் சித்தம் கலக்கியவா!
செல்வச்சந்நிதியில் அன்னதானக் கந்தனாய்
அமர்ந்தே அருள்பாலிக்கும் வித்தகனே!
அடியவர் உன்பால் உருகி நின்றோம்
நிம்மதி வாழ்வு எமக்குத் தந்திடுவாய்!
நத்துகின்ற பணம் பரிசுவேண்டேன்!
நாளும் நின்மலர் பாதம் கண்டுதொழ
சித்தமது தெளிந்து இருள் அகலஅருள்
தந்து பொருளாக எனைக்கண்பார்!
மெத்தவும் படித்தோர்போல் வித்தகம் பேசும்
வீணர் முகம் காணாதிருக்க வழிசெய்!
வித்தாரமான சந்நிதி பதியுறையும் வேலவா!
இத்தருணம் என் பிறவிப் பிணிக்கு மருந்தாகிவா!
சந்நிதியான் திருப்பதிக்கு வாருங்கள்!
சாந்திபெற வேலன் துதிபாடுங்கள்!!
ஆலயச் சூழல் எங்கும் அன்னதான மடங்கள்
அவன் பன்னிரு விழிகளில் என்றும் வழிந்தோடும் அருட்கடாட்சம்!!

-திருமதி நாகேஸ்வரி கந்தசாமி-

# அருணகிரிநாதர் அருளிய கந்தரநுபூதி

(தொடர்ச்சி...

– வாரியார் சுவாமிகள் –



45. கரவாகிய கல்வியுளார் கடைசென்
றிரவாவகை மெய்ப்பொருள் ஈகுவையோ
குரவா குமரா குலிசாயுதகுஞ்
சரவா சிவயோக தயாபரனே.

## பதவுரை

குரவா- சற்குருநாதரே! குமரா- குமரக் கடவுளே! குலிச ஆயுத - வச்சிரப்படையையுடையவரே! குஞ்சரவா- தெய்வயானைக்கு நாயகரே! சிவயோக தயாபரனே- பக்குவப்பட்ட அடியார்கட்குச் சிவயோக நிலையைப் பாலிக்கும் கருணா மூர்த்தியே! கரவு ஆகிய கல்வி உளார் கடை சென்று- தாம் கற்ற கல்வியை பிறருக்குச் சொல்லாமல் ஒளித்து வைக்கின்ற புலவர்களிடம் போய், இரவா வகை- அக் கல்வி ஞானத்தை அடியேன் யாசிக்காத வண்ணம், மெய்ப்பொருள் ஈகுவையோ- உண்மைப் பொருளை உபதேசித்து அருள் புரிவீரோ? (அருள் புரிவீராக)

## பொழிப்புரை

சற்குருநாதரே! குமாரக் கடவுளே! வச்சிராயுத மேந்தியவரே! தெய்வ யானையின் கணவரே! அடியார்க்குச் சிவயோகத்தை அருள் புரிபவரே! தாம் கற்ற கல்வியைச் சொல்லாமல் ஒளித்து வைக்கும் புலவர்களிடம் போய் அக்கல்வி ஞானத்தை அடியேன் யாசிக்காத வண்ணம் உண்மைப் பொருளைத் தந்தருள மாட்டீரோ! (தந்தருளும்)

## விரிவுரை

**கரவாகிய கல்வியுளார்:-**

கரவு- திருட்டுத்தனம்.

கற்ற கல்வியைப் பிறருக்கு உதவுதல் வேண்டும். அதற்குக் கல்விதானம், அறிவுதானம் என்று பேர். அங்ஙனம் பிறருக்கு அறிவிக்காமல் தம்முடனேயே அந்த வித்தைகளை மறைத்து வைத்துக்கொள்வார்கள். இத்தகைய புலவர் பலர் நம் நாட்டில் உண்டு. அதனால் அநேக கலைகள் மறைந்தொழிந்தன.

**கிடைக்காத ஒன்றுக்காய் கவலைப்படாதே.**

**கடைசென்று இராவகை மெய்ப்பொருள் ஈகுவையோ:-**

கடை- வீட்டு வாசல் முன்புறம். கல்வியில் உலோபத்தனம் படைத்த புலவர்களின் வீடுகளின் முன் சென்று கல்விப் பொருளை யாசிக்கா வண்ணம் உண்மை ஞானத்தைத் தனக்கு உபதேசித்தருளுமாறு இப்பாடலில் அடிகளார் வேண்டுகின்றார். ஆனால் அடிகளார் உண்மை ஞானம் கைவரப் பெற்றவர். இப் பாடலைத் தன் பொருட்டு அவர் பாடவில்லை. ஞானத்தைப் பெற விரும்பும் மற்றவர் பொருட்டு பாடியருளினார் என வுணர்க.

**குரவா:-**

குரவன்- ஆசான். முருகன் ஞானகுருநாதன் ஆதலின் "குரவா" என்றார்.

**குலிசாயுத:-**

குலிசம்- வச்சிராயுதம். முருகப்பெருமானுடைய வலக்கரத்தில் விளங்குவது வச்சிராயுதம். சிங்கமுகனை முருகன் குலிசாயுதத்தால் வதைத்தருளினார்.

"வீறு கேதனம் வச்சிரம் அங்குசம் விசிகம்
மாறிலாத வேல் அபயமே வலம்"

-கந்தபுராணம்.

வித்ருமப்ரப மேகமுகம் விபும் வஜ்ரசக்திவரதாபய பாணிம்
தேவலோக ரிபுக்ன மவிக்நதம் நௌமி
ருத்ரபவம் சிகிவாஹும்.

-குமாரதந்த்ரம்.

**குஞ்சரவா:-**

குஞ்சரம்- யானையினால் வளர்க்கப்பட்ட தெய்வயானையைக் குறிக்கும்.

குலிசாயுத குஞ்சரவா- எனச் சேர்த்து வஜ்ராயுதனாகிய இந்திரனுடைய யானையால் வளர்க்கப்பட்டவள் என்றும் பொருள் கொள்ளலாம்.

குஞ்சரவா- என்பதற்கு யானை வாகனத்தை உடையவனே எனவும் பொருள் கூறலாம். முருகன் யானை வாகனமும் உடையான் ஆதலின்.

ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி

-திருமுருகாற்றுப்படை (247)

பிணிமுகம்ஊர்ந்த வெல்போர் இறைவா

-பரிபாடல் (17-49)

சேயுயர் பிணிமுகம் ஊர்ந்து -பரிபாடல் (5-2)

மயில்- ஆணவ மலம். யானை- கன்ம மலம், ஆடு- மாயா மலம். இந்த மூன்றையும் முருகன் வாகனமாகக் கொண்டது மும்மலங்களையும் அடக்குகின்றார் என்ற உண்மையை உணர்த்துகின்றது.

வள்ளிநாயகியைப் பற்றிக் கந்தரநுபூதியில் பன்னிரண்டு பாடல்களில் கூறியிருக்கின்றார். தெய்வயானையம்மையை இந்த ஒரு பாடலில் மட்டும் அடிகளார் கூறுகின்றார்.

**சிவயோக:-**

முருகன்- யோகமூர்த்தி. யோகத்தை உபதேசிக்கின்றவர்.

"யோகத்தாறுபதேசிக" -(சேமக்கோமள) திருப்புகழ்

"யோக விதச் சல்லாப விநோதன்" -அநுபூதி (2)

ஈ- என்பது கீழோர் மேலோரிடம் இரப்பதைக் குறிக்குஞ் சொல்.

தா- தனக்கு ஒப்பானவனிடம் கேட்கும் சொல்.

கொடு- மேலோர் கீழோரை நோக்கிக் கேட்கும் சொல்.

ஈ, தா, கொடு எனும் மூன்றும் முறையே
இழிந்தோன் ஒப்போன் மிக்கோன் இரப்புரை.

-நன்னூல் (407)

அதனால் அருணகிரிநாதர் "ஈகுவையோ?" என்ற சொல்லைச் சொன்னார் எனவுணர்க. தயாபரன் ஆதலின் மெய்ப்பொருளை ஈந்தருள் என்றார்.

புலவர்கள் தாமறிந்த ஒன்றைப் பிறருக்குச் சொல்லிக் கொடுக்காமல் மறைத்துக் கொள்வர். ஆனால் இதற்கு நேர்மாறான நிகழ்ச்சி ஒன்றுளது.

துரோணரைக் கொல்லும் பொருட்டே வேள்வியில் பிறந்த திருஷ்டத்துய்ம்னன், துரோணாசாரியாரிடம் சென்று கலைப் பயிற்சி வைக்குமாறு வேண்டினான். துரோணர், அவனை அன்பாக வரவேற்றார். "என் மரணத்துக்கு இவன் காரணன் அல்லன்; விதிதான் காரணம்" என்று கருதி அசுவத்தாமாவைப் போல அவனையும் அன்புடன் தன்னிடம் இருத்தி எல்லாக் கலைகளையும் போதித்தார். அதனால் துரோணர் புகழ் ஓங்கியது.

தாமறிந்த கலைகளைப் பிறருக்குப் போதிப்பது ஞானதானமாகும். அன்னதானம் மூன்றுமணி நேரத்தில் செமித்துவிடும். ஞானதானம் பிறவியெழுந் தோறும் பின் சென்று உதவும். ஆதலால் எல்லோரும் அறிவுதானம் புரிதல் வேண்டும். ஈகுவை- முன்னிலை வினைமுற்று. ஓ- வினா.

**கருத்துரை**

தெய்வயானை நாயகனே! நான் கல்வியில் உலோப குணமுடையாரிடம் சென்று இரக்காமல் உண்மைப் பொருளைத் தந்தருள்.

(தொடரும்...

**பல்லாண்டு பல்லாண்டு**

வளங்கும் ஆன்மீகப்பணி அன்ன
தானப்பணி மருத்துவ சேவை
துலங்கும் ஞானச்சுடர் அறிவுப்
பணியென இன்னாரின்ன பணிகள்
இலங்கா இரத்ன ஜோதிப் பட்டம்
பெற்ற ஆற்றங் கரையான் அருள்
விளங்கும் மோகனதாஸ் சுவாமிகள்
பணிகள் பல்லாண்டு பல்லாண்டு வாழியவே!


-பஞ்சாமிர்தபாலன்-

எதையும் தேடாமல் கண்டுபிடிக்க முடியாது.

# மலையகத்தில் மண் சரிவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும், மண் சரிவு அபாயத்தை நோக்கிய மக்களுக்கும் ஆன்மீக, சமூகப் பணிகளை மேற்கொண்டதுடன் மலையகத்திலும் சந்நிதியான் ஆச்சிரமம் தனது பணிகளை நீடித்துள்ளது.

– திரு சி. தில்லைநாதன் அவர்கள் –


இம்மக்களின் நிலைமையை நேரில் பார்வையிட்டு, சந்நிதியான் ஆச்சிரமம் என்னென்ன பணிகளை மேற்கொள்ளலாம் என்பதைத் தெரிந்துகொள்வதற்காக சந்நிதியான் ஆச்சிரம மடாதிபதி உயர் சைவத்திரு செ. மோகனதாஸ் சுவாமிகள், சைவமகா சபைத் தலைவர் சிவத்திரு இ. கலியுகவரதன், Dr ப. நந்தகுமார் சகிதம் பதுளை, பூனாகலை, பண்டாரவளை, அப்புத்தளை ஆகிய இடங்களுக்குச் சென்று இடம்பெயர்ந்து பாடசாலைகளில் தங்கியுள்ள மக்களைச் சந்தித்துப் போஷாக்குப் பொதிகள், பருத்தித்துறை வடை, கடலைமா கொண்ட பொதிகள் வழங்கி அவர்களுடன் கலந்துரையாடினார்கள்.



இடம்பெயர்ந்தோருக்கு எல்லா வசதிகளையும் நாட்டில் உள்ள பொது அமைப்புக் களும், அரசும் உதவி வருகின்றபோதும் உற்றார் உறவுகளை இழந்ததினால் மன ஆறுதல் இன்றிக் காணப்பட்டனர். அத்துடன் எல்லாம் கிடைத்தும் சொந்தமாக பாதுகாப்பான வீடுகள் தமக்குக் கிடைக்கவில்லையே என அவர்கள் ஆதங்கப்பட்டதோடு நின்றுவிடாமல் பிள்ளைகளின் கல்விநிலை குறித்தும் கவலை கொண்டிருந்தனர்.

பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் மன ஆறுதலை ஏற்படுத்த வேண்டும் என உடனடியாகத் தோன்றியதால் சந்நிதியான் ஆச்சிரமத்துடன் இணைந்த ஏனைய சைவத் தமிழ் அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஒன்றிணைந்து, பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியிருந்த பூனாகலை தமிழ் வித்தியாலயம் அப்புத்தளை, காளுஎல்ல தோட்டப் பாடசாலை, பண்டாரவளை அலெஸ்பி தமிழ் வித்தியாலயம், மற்றும் ஆதரவற்ற பெண்பிள்ளைகள் தங்கிவாழும் பதுளை மலையக பெண்கள் இல்லம் ஆகியவற்றில் பஜனைகள் செய்து ஆம் மக்கள் மத்தியில் ஆன்மீகத்தின் மூலமாக அவர்களை ஆறுதல் அடைய வைத்தனர். சந்நிதியான் ஆச்சிரம சுவாமியுடன் ஏனைய சைவத்தமிழ் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் இணைந்து நடத்திய பஜனைகளின்போது பாதிப்புக்குள்ளான மக்களும் ஒன்றிணைந்து பஜனையைப் பாடினார்கள். பஜனைப் பாடல்களைப் பாடியதன்மூலம் தமது உள்ளம் தூய்மையடைந்து மன ஆறுதல்கள் ஏற்பட்டுள்ளதாக அம்மக்கள் தெரிவித்தனர். பஜனைப் பாடலைக்கேட்ட கஹஎல்ல தோட்டப் பாடசாலையில் தங்கியிருந்த கிறிஸ்தவர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் இப்பிரார்த்தனை எம்மை அமைதிப்படுத்திவிட்டது. நான் ஒரு கிறிஸ்தவனாக இருந்தாலும் இதனை உணரக்கூடியதாக இருக்கின்றது. இறைவன் அருள் பெறத் தூய்மை வேண்டும். அன்பு இருந்தால் தூய்மை வரும். மனத்தூய்மையையும், தெளிவையும் பிரார்த்தனைமூலம் பெற்றுள்ளோம் என்றார்.


இப்பாடசாலையில் தங்கியுள்ள மக்களுக்கு இணைப்பு அதிகாரியாகப் பணியாற்றும் செல்வி டி.ஜி. சந்திரலதா கருத்துத் தெரிவிக்கையில்; நான் ஒரு பௌத்த சிங்களப் பெண்.




**தேவைகள் இல்லாதவனே பெரிய பணக்காரன்.**

இருந்தபோதும் இப்பஜனை என் உள்ளத்தை உருக்கி விட்டதுடன் சாந்தியையும் தந்துள்ளது. மனதில் சந்தோஷமும் குடிகொண்டுவிட்டது. பொன் பொருள்களைப் பலரும் தரலாம். ஆனால் கடவுளுக்காக பிரார்த்திப்பதை இங்கு யாரும் தரவில்லை. அப்பிரார்த்தனையை இன்று பெற்றுள்ளோம். ஏக்கம், துன்பம், இழப்புக்கள் மத்தியில் பிரார்த்தனையால் மனத்திருப்தி ஏற்படுகின்றது. இந்தச் சில நிமிடங்களில் இறைவனிடம் எம்மை அழைத்துச் சென்றமைக்காக நன்றிகளைச் சமர்ப்பிக்கின்றோம் என்றார்.

மண்சரிவு ஏற்பட்ட மீரியபெத்த பகுதியை நேரில் சென்று பார்க்கவோ அங்கு உயிரிழந்தோருக்கு அஞ்சலி செலுத்த முடியாதநிலையில் இக்குழுவினர் பண்டாரவளை அலெஸ்பி தமிழ் வித்தியாலயத்தில் பிரார்த்தனை மேற்கொண்ட பின்னர் அங்கு தங்கியுள்ள மக்களை ஒன்றிணைத்து வித்தியாலய மைதானத்தில் உயிரிழந்தோரின் ஆன்ம ஈடேற்றத்திற்காக சுடர்கள் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. நூறு சுட்டிகளில் தீபம் ஏற்றி அஞ்சலிக்கும் நிகழ்வை சந்நிதியான் ஆச்சிரம சுவாமிகளும், சைவ மகாசபைத் தலைவர் சிவத்திரு இ. கலியுகவரதனும் ஆரம்பித்துவைக்க, நிகழ்வில் பங்கேற்ற மக்களுடன் அப்பகுதிக்கான கிராம சேவையாளர் செல்வி எஸ். செல்வமலர், இ.தொ. காவின், பண்டாரவளைப் பிரதேச மகளிர் இணைப்பாளர் செல்வி ஆர். விஜயகுமாரி, சைவ மகாசபைச் செயலாளர் டாக்டர் ப. நந்தகுமார் ஆகியோரும் தீபம் ஏற்றி வைத்தார்கள். தொடர்ந்து அனைவரும் மலர் அஞ்சலி செலுத்தி தேவார திருவாசகம் பாடப்பட்டன. இந்த அஞ்சலி நிகழ்வு அனைவரதும் உள்ளத்தையும் நெகிழ வைத்ததை உணரக்கூடியதாக இருந்தது.




பதுளை நகரில் உள்ள மலையகப் பெண்கள் இல்லத்தில் மலையகத்தைச் சேர்ந்த தாய் தந்தையரை இழந்த 33 பெண்பிள்ளைகள் பராமரிக்கப்பட்டு, கல்வி பயின்று வருகின்றார்கள். இந்த இல்லத்தின் இயக்குனர் பி. கிருஸ்ணசாமியின் அழைப்பின் பேரில் இச் சைவத்தமிழ் அமைப்புக் குழுவினர் சென்று அவர்கள் மத்தியில் பஜனை மேற்கொள்ளப் பட்டது. சைவ சமய அறிவு குறைந்த இப்பெண்பிள்ளைகள் பஜனை பாடியதன்மூலம் உள்ளம் நெக்குருகி விட்டார்கள். பெற்றோரை இழந்த இப்பெண்பிள்ளைகள் பஜனையின் மாண்பையும், மகிமையையும் உணர்ந்து கொண்டார்கள். அவர்களாகவே பஜனைப் பாடல்களை முன்னெடுக்க போதிய ஆலோசனைகள் வழங்கப்பட்டதுடன், பஜனை பாடப்புத்தகங்கள், பாடுவதற்கான பக்கவாத்திய உபகரணங்களை வழங்க சந்நிதியான் ஆச்சிரம சுவாமி முன்வந்துள்ளதுடன் அதற்கான பயற்சிகளையும் கொடுக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என சுவாமி உறுதி அளித்தார்.



இதேவேளை பதுளை, பண்டாரவளை, அப்புத்தளைப் பகுதிகளில் அறநெறிப் பாடசாலைகள் அங்குள்ள கோவில்களின் நிர்வாகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றுவருகின்றன. சில அறநெறிப் பாடசாலைகள் குறிப்பாக கோணா முட்டி தோட்ட அறநெறிப் பாடசாலை மிகவும் சிறப்பாக இயங்கி வருகின்றது. அச்சிறப்புக்கு அங்குள்ள முத்துமாரி அம்மன் கோவில் நிர்வாகமே பிரதான காரணமாகும். இதேநேரம் பதுளை நகரத்தில் உள்ள கதிரேசன் கோவில் அறநெறிப் பாடசாலையில் கற்பிக்கப் போதிய சமய நூல்கள் இல்லை.

பிறமதத்தினரின் மதமாற்றத்துக்கு மத்தியில் அறநெறிப் பாடசாலையை முன்னெடுத்துச் செல்வதாகவும், இப்பாடசாலைக்கு போதிய சமய நூல்களும் சமயச் சொற்பொழிவாளர்களின் தேவையும் இருப்பதாகக் குறித்த அறநெறிப் பாடசாலை ஆசிரியை சந்நிதியான் ஆச்சிரம சுவாமியிடம் கோரிக்கை விடுத்தார். இக்கோரிக்கையை அங்கே வருகை புரிந்த சைவ அமைப்புக்களோடு கலந்துரையாடியபின் இச்செயற்பாட்டினை முன்னெடுப்போம் என்று சுவாமி கூறினார்.

இடம்பெயர்ந்தவர்கள் மத்தியில் உயர் சைவத்திரு மோகனதாஸ் சுவாமிகள் பேசுகையில் நாங்களும் 30 ஆண்டுகளாக இடம்பெயர்ந்து கஷ்ரப்பட்டோம். அக்கஷ்டங்கள் எங்களுக்குப் புரியும். ஆன்மீக ரீதியில் இறைசிந்தனை மூலம் மக்கள் மனதில் ஆறுதல்களைக் கொண்டுவர முயற்சிக்கின்றோம். இம்மக்களின் ஆன்மிக, சமூக, கல்வி மேம்பாட்டுக்கு என்றென்றும் உதவுவோம் எனக் குறிப்பிட்டார்.



சந்நிதியான் ஆச்சிரமத்துடன் இணைந்து, அளவெட்டி அழகொல்லை விநாயகர் ஆலயம், கிளிநொச்சி மலையாளபுரம் கற்பக முத்துமாரி அம்மன் ஆலயம், யாழ் சிவத்தமிழ் மானிட விடியற்கழகம், யாழ் வன்னிப் பிராந்திய சிவதொண்டர் அமைப்பு, திருகோணமலை சிவன் மானிட மேம்பாட்டு நிறுவனம், அம்பாறை சிவநெறிக்கூடம், அம்பாறை சைவநெறிக்கூடம் ஆகிய அமைப்புக்களின் ஒத்துழைப்புடன் இலங்கை சைவ மகாசபை இப்பணியில் பெரும் பங்களித்தன. இலங்கை சைவ மகாசபையின் பொதுச் செயலாளர் டாக்டர் ப. நந்தகுமார் இடம்பெயர்ந்த மக்களுக்கு சுகாதாரம், வைத்தியம், கல்வி தொடர்பான ஆலோசனைகளை வழங்கியதுடன், இடம்பெயர்ந்த மக்களின் பிள்ளைகளின் உயர் கல்விக்கு வேண்டிய வசதிகளையும் வாய்ப்புக்களையும் பெற்றுத் தருவோம் என உறுதி அளித்தார்.

இச் சைவத்தமிழ் அமைப்புக்கள் வழங்கிய நிவாரணப் பொதிகளில் சுமார் ஆயிரத்து இருநூறு போஷாக்கு உணவுப் பைக்கற்றுக்களும் அடங்கியிருந்தன.

மண் சரிவினால் பாதிக்கப்பட்ட மக்களின் துன்ப துயரங்களையும், மன உளைச்சல் களையும் இரண்டு நாள் விஜயத்தின்போது உணர்ந்து கொண்ட இச் சைவத்தமிழ் அமைப்புக்கள் அவர்களின் ஆன்மீக, சமூக, கல்வி மேம்பாட்டுக்கு உதவ திட்டமிட்டுச் செயல்படுவதென இறுதியில் தீர்மானித்துள்ளது. இப்பணிகளில் சந்நிதியான் ஆச்சிரமமும் உயரிய பங்களிப்பை சந்நிதி முருகனின் அருட்கடாட்சத்துடன் மேற்கொள்ள திடசங்கற்பம் பூண்டுள்ளதாக சந்நிதியான் ஆச்சிரம சுவாமி உயர் சைவத்திரு செ. மோகனதாஸ் சுவாமிகள் தெரிவித்தார்.

சைவத் தமிழ் அமைப்புக்களின் இரண்டுநாள் ஆன்மீக சமூக எழுச்சிக்கான பணிகள் மூலம் இடம்பெயர்ந்து வாழும் மலையக உறவுகள் மத்தியில் ஆன்மீக எழுச்சியும், ஆன்மீகப் பலமும் ஏற்பட்டிருந்ததை உணர்ந்துகொள்ளக் கூடியதாக இருந்தது. ஆன்மீக பலமும், எழுச்சியும் அம்மக்களின் தூய்மையான, அமைதியான வாழ்வுக்கு வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை.

## உட்கார்ந்த நிலையில் உணவருந்த வேண்டும் என்பது ஏன்?

உணவருந்தும் கலாச்சாரம் மாறிவர இன்று நம்நாட்டில் நடந்தும் நின்றுகொண்டும் உணவருந்துகின்றோம். குழந்தைகளுக்கும் அவ்வாறே உண்ணப் பழக்குகின்றோம்.

சாணம்பூசிய தரையில் பனையோலைத் தடுக்கில் சப்பணமிட்டு உட்கார்ந்து முன்பக்கப் பார்வையுடன் உணவருந்தவேண்டும் என்பது தொன்றுதொட்டுள்ள பழக்கம். தரையில் பலகையிட்டு அதில் சப்பணமிட்டு அமர்ந்தும் நம் நாட்டினர் உணவருந்துகின்றனர். ''பாதணி''களைக் கழற்றாமல் காலின்மேல் கால் வைத்து சாப்பாட்டு மேசைக்கு முன்னிலிருந்து தொலைக்காட்சி நிகழ்ச்சியை ரசித்துக் கொண்டே உணவருந்துவதைவிட நம் முன்னோர்கள் பாணி அழகுள்ளது. அவ்வாறு அமர்ந்து உண்பதில் உடலுக்குச் சில பயன்கள் உள்ளதாக நம் முன்னோர்கள் அறிந்திருந்தனர். ஆனால் சுகபோகங்களின் நடுக்கடலில் அலைந்து திரியும் நவீன மக்கள், இந்த வாழ்க்கை இறைவன் அருளியது என்பதை உணர்வதில்லை.

நாம் உணவருந்தும்போது உடலின் மூட்டுகளில் அசைவு ஏற்படுகின்றது என்று இன்றைய சாஸ்திரம் அறிவிக்கின்றது. இந்த அசைவு முட்டுக்களுக்கு அதிகபாரம் உண்டாக்கும். அமர்ந்த நிலையில் உணவருந்தினால் இந்தப் பாரத்தைக் குறைக்க இயலும். மேலும் நின்றுகொண்டு உணவருந்தினால் மிதமிஞ்சி உணவருந்த வாய்ப்புண்டு. அதிகமாக உண்ணுவதும் உடல் நலத்திற்குத் தீங்கு விளைவிக்கும் என்பதும் நாம் அறிவோம். வயிறு நிரம்ப உண்ணாதவர்கள் பல நோய்களிலிருந்து விலகியிருப்பார்கள் என்று மருத்துவத்துறை பல வழியில் அறிவித்துள்ளது.

-ஓலைச்சுவடி-

பழிக்குப்பழி ஒருபோதும் காயத்தை ஆற்றாது.

(தொடர்ச்சி...

# உமாபதி சிவம்
## அருளிய
# திருவருட்பயன்

(விரிவான பொருளுரையும் தெளிவுரையும்)

முனைவர் ஆ. ஆனந்தராசன்



### 14. உயிருக்குத் தன்வயமான செயலில்லை

கண்டவற்றை நாளும் கனவில் கலங்கியிடும்
திண்திறலுக்கு என்னோ செயல்.

**பொருள்:**

நாள்தோறும் நனவில் தெளிவாகக் கண்டு பழகிய பொருள்களைக் கனவில் மாறுபடக் கண்டு மயங்குகிற, இந்த அற்பமான உயிருக்கு என்ன சுதந்திரமான செயல் இருக்கிறது?

**சொற்பொருள்:**

நாளும் கண்டவற்றை- பல நாளும் பார்த்துப் பழகித் தெளிவாக உணர்ந்த பொருள்களை, கனவில்- கனவு காணும்போது அக்கனவில், கலங்கியிடும்- மாறுபடக் கண்டு மயங்குகின்ற, திண்திறலுக்கு- பெருவலிமை உடையதாகிய உயிருக்கு, செயல் என்னோ- சுதந்திரமான செயல் என்ன இருக்கிறது?

**விளக்கம்:**

உயிருக்குத் தன்வயம் எனப்படும் சுதந்திரம் இல்லை என்பதைக் கனவு நிகழ்ச்சியில் வைத்துக் காட்டுகிறார் ஆசிரியர்.

நனவில் தாம் தெளியக் கண்டறிந்த உண்மைகளுக்கு மாறானவற்றைக் கனவுலகில் காணும்போது சிலர் திடுக்கிட்டுக் கண்விழிப்பார்கள்; சிலர் அச்சத்தினால் வாய் வெருவுவார்கள். இதற்கு எடுத்துக்காட்டாக ஒரு நிகழ்ச்சியைக் கூறலாம்.

ஒருவர் பட்டப்பகலில் ஒரு குட்டித் தூக்கம் போடுகிறார். தூக்கத்தில் ஒரு துன்பக் கனவு காணுகிறார்; தமது உயிர் நண்பரே கத்தியை ஏந்திக் கொண்டு தம்மைக் கொல்ல வருவது போலக் கனாக்கண்டு துணுக்குற்றுக் கண் விழிக்கிறார். அந்த நேரத்தில் அறைக் கதவைத் தட்டும் ஓசை கேட்கிறது. அவர் எழுந்து போய் திறக்கிறார். வாசலிலே கனவில் தம்மைக் கொல்ல வந்த அந்த நண்பரே கண்ணெதிரில் நிற்கிறார்! “என்ன பகலிலேயே உறக்கமா? கனவு கண்டீரா?” என்று கேட்கிறார். கண்ட கனவை எப்படிச் சொல்வார் அவரிடம்?

இந்தக் கனவு அவர் விருப்பப்படியா வந்தது? இல்லையே. இப்படிக் கனவில் நடக்கும் என்று அவர் சிறிதேனும் எதிர்பார்த்தாரா? இல்லையே. இஃது எதைக் காட்டுகிறது?

கனவு என்பது அவர் வசத்தில் இல்லை. கனவு காண்பதற்குக் காரணமாகிய மனம் முதலிய கருவிகளும் அவர் வசத்தில் இல்லை என்பதைத்தானே காட்டுகிறது.

முத்தொள்ளாயிரம் என்ற பழைய இலக்கியத்தில் ஒரு சுவையான நிகழ்ச்சி வருகிறது. மன்னன் வீதி வழியாகத் தேரில் சென்றான். வீரமும் அழகும் நிறைந்த அவனது தோற்றம் ஒரு நங்கையைக் கவர்ந்தது. அவளையறியாமலே அவளது உள்ளம் அவனிடத்தில் சென்றது. எப்பொழுதும் அவனைப் பற்றியே நினைவு. நிறைவேறக் கூடிய காதலா இது? வெளியே சொல்லக்கூடிய செய்தியா இது?

ஒருநாள் இரவில் அவள் ஓர் இன்பக் கனவு கண்டாள். மன்னனாகிய காதலன் தன்னிடம் நெருங்கி வருவது போலவும் கொஞ்சிப் பேசுவது போலவும் கனவிற் கண்டாள். அந்த நிலையில் விழிப்பு வந்துவிட்டது. அந்தக் கனவை உண்மையென்றே நம்பி விட்டாள் அந்தப் பேதை! அன்பிற்குரியவன் தன் அருகில் இருப்பதாக எண்ணிக் காந்தள் மலர் போன்ற கைகளால் படுக்கையைத் தடவிப் பார்க்கிறாளாம்!

இதுபோன்ற, நடப்பியல் உண்மைக்கு மாறான இன்பக் கனவுகளைக் கண்டு கொண்டிருக்கும் போது சிலர் இடையே விழித்துக் கொள்வர்; இந்த விழிப்பு வந்து கெடுத்து விட்டதே என்று நொந்து கொள்வர். அந்தக் கனவு மேலும் தொடராதா என்ற ஆசையில் மீண்டும் உறங்க முயல்வர்! ஆனால், உறக்கமும் வராது. போன கனவும் வராது. தாம் விரும்பியபோது விரும்பிய வண்ணமே கனவு காணும் திறன் உயிர்களுக்கு ஏது?

உயிர் நனவிலே கண்டபடி கனவிலே காண இயலாது. வினை வசத்தால் வருந்த வேண்டியதாயின், உயிரோடிருப்பவரை இறந்தவர்போலக் கனவிற் காணும்; மகிழ வேண்டியதாயின், இறந்தவரை உயிரோடு இருப்பவர்போலக் கனவிற் காணும். இதுபோலப் பல வகையில் கனவில் மாறுபடக்கண்டு மயங்குவதால் உயிர் சுதந்திரமற்றது என்பது விளங்கும்.

**திண்திறல்:**

உயிர்கள் யாவும் இறைவனது ஆணைக்கு உட்பட்டு வினை வழியே செல்லுகின்றவை; ஆனால், இதை உணராமல் "என் செயல்" என்செயல் என்று எண்ணிச் செருக்குருகின்றன. உயிருக்கென்று என்ன செயலிருக்கிறது? என்ன வலிமை இருக்கிறது? சிற்றறிவும் சிறு தொழிலும் உடைய இந்த அற்பமான உயிர் தன்னைப் பேராற்றல் உடையதாகக் கருதிக் கொள்கிறது.

நனவில் கண்ட பொருள்களைக் கனவில் மாறிக் காணுகிற இந்த உயிர் அடடா! திண்ணிய வலிமை உடையதுதான்! என்று கேலி செய்வார் போலத் "திண் திறல்" என்று உயிரைக் குறிப்பிடுகிறார் ஆசிரியர்.

### 15. உயிருக்குச் சித்து என்ற பெயர் பொருந்துமோ?

பொறியின்றி ஒன்றும் புணராத புந்திக்கு
அறிவுஎன்ற பேர்நன்று அற.

**பொருள்:**

ஐம்பொறிகளின் துணையின்றி ஒன்றையும் அறியமாட்டாத உயிருக்குப் போய் "சித்து" என்று பெயர் வைத்திருக்கிறார்களே. அந்தப் பெயர் மிக நன்றாய் இருக்கிறது! என்று இகழ்ச்சிக் குறிப்போடு கூறுகிறார் ஆசிரியர்.

**சொற்பொருள்:**

பொறி இன்றி- ஐம்பொறிகளின் உதவியில்லாமல் ஒன்றும் புணராத- ஒன்றையும் அறிய மாட்டாத, புந்திக்கு- உயிருக்கு, அறிவு என்ற பேர்- சித்து (அறிவுடையது) என்று ஆன்றோர் கூறி வைத்த பெயர், அறநன்று- மிகமிக நன்றாய் இருக்கிறது!

**விளக்கம்:**

உலகை அறிந்து வரும் உயிரைச் சித்து என்ற சொல்லால் குறிப்பிடுவர். சித்து என்பதற்கு அறிவுடையது என்பது பொருள். ஆனால், சைவ சித்தாந்தம் சில தடைகளை எழுப்பும். உயிர் சித்துப் பொருளாயின் அதற்கு அறியாமை என்பது இருத்தல் கூடாது. ஆனால், உயிர் அறியாமையால் கவரப்பட்டு அறிவையிழந்து நிற்கிறதே. அதனைச் சித்து என்று எவ்வாறு கூறுவது?

மேலும், உயிர் சித்துப் பொருள் எனின், தானே அறிதல் வேண்டும்; கருவி கரணங்களைத் துணைக் கொள்ளாமலே அறிதல் வேண்டும். கண்கள் இன்றியே காணுதல் வேண்டும். செவிகள் இன்றியே கேட்டல் வேண்டும். இவ்வாறு உயிர் தானே தனித்து நின்று அறிதல் வேண்டும். இங்ஙனம் தானே விளங்குகிற அறிவு சுயம்பிரகாசம் எனப்படும். இத்தகைய இயற்கையறிவு உயிருக்கு இல்லையே. ஐம்பொறிகள், மனம் முதலிய அகக் கருவிகள், நூல்கள், தாய், தந்தையர், ஆசிரியர் முதலியோரால் அல்லவா உயிருக்கு அறிவு நிகழ்கின்றது. அதனைச் சித்து என்று எவ்வாறு கூறுவது?

இன்னும், உயிர் சித்துப் பொருளாயின் அதன் அறிவு என்றும் ஒரு தன்மையாய் இருத்தல் வேண்டும்; ஒரு நிலைப்பட்டதாய் இருத்தல் வேண்டும். ஆனால் உயிருக்கு உணர்வு மாறி மாறியல்லவா நிகழ்கிறது. ஐம்பொறிகள் செயற்படும்போது உணர்வு நிகழ்தலையும், பொறிகள் அடங்கியபோது உணர்வு ஒழிதலையும் அனுபவமாகக் காணலாம். ஒரு நிலைப்படாமல் அலையும் ஐம்பொறிகளின் வயப்பட்டதாகிய உணர்வு எவ்வாறு ஒருநிலைப்பட்டு நிற்கும்? ஐம்புலன்களாலும் தம் உணர்வு அலைக்கப்படுவதற்கு உவமையாக யானைப் போரிடை அகப்பட்ட சிறிய செடியைக் கூறினார் மாணிக்கவாசகர். மதம் பிடித்த யானைகள் ஒன்றோடொன்று தாக்குங்காலை அவற்றின் காலடியிற்பட்ட சிறு செடி மிதிபட்டுச் சிதைந்து அலைதல் போலப் புலன்களின் தாக்குதலால் அறிவு கலங்கி நிலைபேறின்றித் தவிக்கிறேன் என்கிறார். இங்ஙனம் ஒருநிலைப்படாத உணர்வுடைய உயிரைச் சித்து என்று எவ்வாறு கூறுவது?

இக்கருத்துக்களையெல்லாம் உள்ளடக்கியே ஆசிரியர் இச்செய்யுளைச் செய்துள்ளார். தானே அறிய மாட்டாமல் ஐம்பொறிகளின் துணைக் கொண்டே அறிவதாய், அங்ஙனம் அறியும் போதும் ஒரு நிலைப்பட அறியாமல் மாறிவரும் உணர்வுடையதாய் உள்ள உயிருக்குச் சித்து என்ற பெயர் பொருந்தாது என்பது கருத்தாகும். உயிருக்குச் சித்து என்ற பெயர் பொருந்தாது எனில், அதனை அசித்து அல்லது சடம் என்று அழைக்கலாமா? என்ற வினா எழும். அதற்குரிய விடையை அடுத்த செய்யுளிற் காணலாம்.

முந்திய செய்யுளில் உயிர் கனவிலே திரிவுபட உணரும் என்பது கூறப்பட்டது. இச்செய்யுளில் நனவிலேயும் அது மற்றொரு பொருள் உணர்த்தவே உணரும் என்பது கூறப்பட்டது. இதனால் உயிருக்குத் தன்வயம் என்பது கனவு நிலையிலும் இல்லை, நனவு நிலையிலும் இல்லை என்பது வலியுறுத்தப்பட்டது. (தொடரும்...

**கைக்கு வராததைக் கணக்குப் பார்க்காதே.**

# மாண்ட குதிரை மீண்டது

– திரு அ. சுப்பிரமணியம் அவர்கள் –

அது ஒரு அழகு மிளிரும் குருகுலம். "ஆனந்த ஆச்சிரமம்" என்பது அதன் பெயர். ஆச்சிரம முதல்வர் உள்ளும் புறமும் தூய முனிசிரேஷ்டரை நிகர்த்த ஆசிரியர் அரங்க பாலன். அவர் தமது மாணவச் செல்வங் களை அன்போடு அரவணைத்துக் கல்வியை வாரி வழங்கும் வள்ளல். வற்றாத ஜீவநதி. "தொட்டனைத் தூறும் மணற்கேணி" அங்கு பல்வேறு இடங்களில் இருந்தும் மாணவர் வந்து தங்கியிருந்து உணவுண்டு கல்வி கற்றுச் சமய கலாச்சார பண்பாட்டு நெறி பேணி வாழ்வர். அங்கு அறிவுப் பசியகலும். ஆன்மீகம் வளரும். அரசகுமாரர்களும் பாகு பாடின்றிக் கற்று வந்தனர்.

சில வேத பாடசாலைகள் அவற்றின் தாபகரின் தாய் தந்தையரதோ பேரன் பேர்த்தியாதியோரது நினைவிடமாகவே உரு வாகியுள்ளன எனலாம். தாய் வாழ்ந்து அமரத் துவம் எய்திய இல்லம் பின்பு மகனாகிய காஞ்சிப் பெரியவரால் வேத பாடசாலையாக் கப்பட்டிருப்பது கண்கூடு. ஸ்ரீ இராமகிருஷ்ண ஆசிரமம், சுவாமி விபுலானந்தர் ஆச்சிரமம், சிவானந்த ஆச்சிரமம் ஆகியவை கல்வி கலாசார சமயத் தொண்டாற்றுவது நாமறிந்த தேயாம். இத்தகையதே ஆனந்த ஆச்சிர மமுமாகும். அங்கு பல மாணவர் படித்தனர். அவருள்ளே தொண்டை மண்டலத்தில் சைவ வேளாண்குடியில் தோன்றிய குகபாதாசிருதர் சக்திவேல் அம்மையார் தம்பதியரின் மகனும் ஒருவன்.

இவன் அங்கு கற்கும் ஏனைய மாணாக்கரில் வயதிலும் தோற்றத்திலும் சிறியவன். ஆனால் அறிவிலும் ஆற்றலிலும் பெரியவன். அதனால் யாவரதும் அன்புக்கும் அரவணைப்புக்கும் ஆளானவன். பெயருக் கமைய பொய்யாத மொழியன்.

ஆச்சிரமத்தின் அருகில் ஆசிரியரால் சோளக் கொல்லையும் தினைப்புனமும் அமைக்கப்பட்டிருந்தது. கொல்லையில் வளர்ந்து முற்றி நின்ற கதிர்களை குதிரை ஒன்று தினமும் வந்து மேய்ந்தது. அது கண்டு பொறுக்காத மாணாக்கர் வரிசையாகக் கிரமமாக கொல்லையைக் காத்து வந்தனர். அதன்படி ஒருநாள் பொய்யாமொழியின் முறை வந்தது. அவனும் சந்தோஷமாகத் தடியுடன் போய்க் காவலில் ஈடுபட்டான். ஆனால் சிறுவன் இரவு முழுவதும் விழித்திருக்கமுடியாது உறங்கி விட்டான். அப்போது ஒரு கனவு கண்டான். குதிரை வருகிறது. கொல்லையில் நுழைகிறது. கதிர்களைக் கடிக்கிறது கனவு முடிகிறது. சிறுவன் கண்விழிக்கிறான். எழுந்து கொல்லையைப் பார்க்கிறான். குதிரை மேய்ந்து கொண்டு நிற்பதைக் காண கின்றான். எழுந்து தடி கொண்டோடுகிறான். குதிரை பெரியது முரடானது. சிறுவன் தடி யால் அடிக்க அது இடிக்கவும் வாயைத் திறந்து கடிக்கவும் வந்தது. சிறுவனுக்கு அழுகை வந்து அழுதான். அரற்றினான்.

துடித்துப் போய் அழுகையை நிறுத் திய பொய்யாமொழி ஆசிரியரிடம் நித்திரை யாகிய உண்மையை உரைக்கப் பயந்து அருகிலுள்ள மாகாளி கோயிலையடைந்து காளிதேவியிடம் சரணடைந்தான். தனது மனக்குறையை நீக்கியருளுமாறு வேண்டி நின்றான். உலக மாதாவாகிய காளிகாம்பாள்

தனது குழந்தையின் வேண்டுதலைப் புறக் கணிப்பாளா? மாட்டாள். தாயான மாகாளி சிறுவனுக்கு அருட்காட்சி தந்து திருவருள் ஞானம் பெற வைத்தாள். அதன் மூலம் அருட்பாடல் பாடும் திறமை பெற்றுத் தினைப் புனம் நோக்கி ஓடி வந்தான். அங்கு குதிரை பயிரை மேய்வதைக் கண்டு ஆத்திரம் கொண்டான். மேய்வதோ மன்னவனின் குதிரை என்பதை மறந்தான். காளியருளால் பாடல் வெளிவந்தது. "வாய்த்த வயிரபுர மாகாளி அம்மையே ஆய்ந்த மணலில் அணி வரையில் - காய்ந்த கதிரை மாளத் தின்னும் காலிங்கன் எனும் குதிரை மாளக் கொண்டுபோ என்று பொய்யாமொழி பாடி முடிக்குமுன்னரே தினைக்கொல்லையில் மேய்ந்து கொண்டு நின்ற குதிரை மாகாளியருளால் விழுந்து மாண்டது. இது கண்டு அயலில் நின்றவர்கள் அதிர்ச்சியடைந்து ஓடிச்சென்று ஆசிரியரிடம் கூறினர். பதறிப்போன ஆசிரியர் ஐயோ குதிரை மன்னவனுடையதாயிற்றே அதனால் சிறுவனுக்கு அரசனால் ஏதும் இடர் வருமோ? என்று பயந்து ஓடோடி வந்தார். இதனிடையே சிறுவன் குதிரைக்குரிய அரசனால் தனது ஆசிரியருக்கு ஏதும் தண்டம் கிடைக்குமோ வெனப் பயந்து அவ்விதம் நிகழாதிருக்க முன்பு பாடிய பாடலின் இறுதி அடியை "குதிரை மீளக் கொண்டு வா" என்றலுமே "மாண்ட குதிரை மீண்டது" இது கண்ட யாவரும் ஆச்சரியமுற ஓடிவந்த ஆசிரியர் மாணவனின் அருள் ஆடல்கண்டு மகிழ்ந்து ஆரத்தழுவி "பொதியில் அகத்தியனாய்ப் பொய்யாமொழியாகச் சிதையில் புலவர் சிகா மணியாய்- துதிசேரும் செங்காட்டங் கோட்டத் துறையூர் எனுந் தலத்தில் தங்காட்டங் கொண்டிருப்பாய்தான்" என்று புகழாரம் சூட்டினார். இதன்பின்பு பொய்யாமொழி புலவ ராகினார். சிறுவனது அரும்பெரும் செயலைக் கேள்வியுற்ற காலிங்கராஜ மன்னன் பொய்யா மொழியாரைத் தனது அரசவைக்கழைத்துச் சிறப்புச் செய்து பரிசுகள் வழங்கிப் பெரும் புலவர் என்னும் சிறப்புப் பட்டமும் வழங்கிக் கௌரவித்தான். காளிதேவியின் அருளால் கவிச்சக்கரவர்த்தியாகிய பொய்யாமொழிப் புலவர் சிவபெருமானிடம் பக்தியுடையவராய் நாளடைவில் அவரை மட்டுமே பாடும் நியமம் பூண்டிருந்தார். சிவனையன்றி வேறெந்தத் தெய்வங்களையும் பாடுவதில்லை என்ற மனவுறுதி பூண்டிருந்தார். இம்மனவுறுதியை உடைக்க முருகப் பெருமான் விளையாட லானார்.

ஒருநாள் முருக பக்தர் ஒருவர் பொய்யாமொழியாரைத் தேடி வந்தார். அவரிடம் முருகப் பெருமானைப் புகழ்ந்து ஒரு பாடல் எழுதித் தரும்படி வேண்டினார். பொய்யாமொழி மிடுக்காகக் "கோழியைப் பாடும் வாயால் குஞ்சைப் பாடுவனோ"? என்று மறுத்து விட்டார். கவலையுற்ற முருக பக்தர் முருகப் பெருமானிடம் முறையிட்டார். இது எமக்கு M.K. தியாகராச பாகவதர் நடித்து வெளிவந்த "சிவகவி" எனும் திரைப்படத்தை நினைவூட்டுகிறது. அதில் சிவனை மட்டுமே பாடும் நியமம் பூண்ட பாகவதர் முருகப் பெருமானைப் பாட மறுத்து "அப்பனைப் பாடும் வாயால் ஆண்டி சுப்பனைப் பாடு வனோ" என்றவருக்கு முருகப் பெருமான் காட்சிதர மகிழ்ந்து பாதம் தொழுது பரவச மாகி "சொப்பன வாழ்வில் மகிழ்ந்து சுப்ர மண்ய சாமி உனை மறந்தேன்" என்று பாடி நிம்மதி பெற்றார்.

பொய்யாமொழியாருக்கு மதுரைக்குச் சென்று பழைய தமிழ்ச் சங்கத்தை உரு வாக்குமவா ஏற்பட்டதனால் மதுரை நோக்கிப் புறப்பட்டார். வழியில் திருச்சியில் அமைந் துள்ள தாயுமானவப் பெருமாளைப் போற்றிக் கலித்துறைவெண்பா ஒன்று பாடியபின் மதுரைக்குப் புறப்பட்டார். அப்போது கடுங் கோடை. அத்துடன் முருகப்பெருமானுடைய அருளும் நன்கு சுட்டது. வெண்பரற் கற்களும்

வேல மர முட்களும் படர்ந்து அனல் பறக்கும் நெடுங்காட்டிடையே புலவர் இட்டவடி நோவ எடுத்தவடி கொப்பளிக்க ஓடிக்கொண்டிருந்தார். அப்போது வழியில் நின்று மறித்த வேடன் ஒருவன் "எனது அனுமதியின்றி எனது வனத்துக்குள் ஓடிவரும் நீயார்? என்று அதட்டும் முறையில் கேட்டான். "நான் ஒரு புலவர்" என்றார் பொய்யாமொழி. "ஓ! நீ புலவராகில் என்மீது ஒரு பாட்டுப் பாட முடியுமா?" என்றான். "ஆம்: உமது பெயரைச் சொன்னால் பாட முடியும்" என்றார் பொய்யாமொழி. "எனது பெயர் முட்டை" என்றார் வேடுவனாக வந்த முருகப்பெருமான். உடனே பாடல் பிறந்தது. "பொன்போலும் கள்ளிப் பொறி பறக்கும் கானனிலே என்பேதை செல்லற் கியைந்தனளே- மின்போலும் மானவேல் முட்டைக்கு மாறாய தெய்வர்போம் கானவேல் முள் தைக்கும் காடு" எனும் வெண்பாவைப் பாடினார். உடனே முருகன் "புலவரே உமது பாடலில் பொருட்குற்றம் உள்ளது. அதாவது கள்ளிச் செடியே வெந்து பொரிந்து நீறாகி அதன் பொறி பறக்கும் கானலில் வேலமுட்கள் எரிந்து போகாது காலில் தைப்பது விந்தைதான். அவ்வாறு வேலமுள் இருந்தாலும் காலில் தைக்க இயலாது" எனவே பாடலைத் திருத்தி. நான் பாடுகிறேன். உமது பெயர் யாது? என்ன பொய்யாமொழி" என்றார். "ஓ கோழியைப் பாடும் வாயால் குஞ்சைப் பாடமாட்டேன் என்று மிடுக்குப் பேசி இப்போ முட்டையைப் பாடிக் குட்டுப்பட்டு, நிற்கும் நீயா? அந்தப் பொய்யாமொழி. "வீழ்ந்ததுளி அந்தரத்தே வேமென்றும் வீழின் எழுந்து சுடர் சுடுமென் றேங்கி- செழும் கொண்டல் பொய்யாத கானகத்தில் பெய்வளையும் போயினளே பொய்யாமொழிப் பகைஞர் போல்" என்று பாடினார். அத்தோடு "நீர் முன்பு குஞ்சைப் பாடேன் என்று கூறிய வாயால் இப்போது! முட்டையைப் பாடியது வியப்புக் குரியது" என்று நகையாடினார். புலவர் உண்மையை உணர்ந்தார். தன்னுடன் திருவிளையாடல் புரிபவர் முருகப்பெருமானே என்பதை உணர்ந்து கொண்டார். தன்பிழை பொறுக்குமாறு வேண்டினார். கந்தப்பெருமானும் தன் திருக்கோலம் காண்பித்துத் தமது திருக்கை வேல் கொண்டு புலவரது நாவில் சடாட்சர மந்திரம் எழுதி வைத்தார்.

மகா காளிகாம்பாளால் அருளப் பெற்ற திருவருள் ஞானத்தோடு முருகப் பெருமான் கிரியா சக்தியாம் வேல் கொண்டு நாவில் பதித்த மந்திரமும் சேர ஞானம் கைவரப்பெற்ற பொய்யாமொழிப் புலவர் பாண்டி நாடு சென்றார். அவர் பழைய தமிழ்ச் சங்கத்தை மீள நிறுவவேண்டுமென்ற ஆசையை அரசனிடம் சொன்னார். மன்னன் "நீர் பாடல் பாடி இங்கு கல் உருவிலிருக்கும் புலவரின் தலை அசையவும் கை தட்டவும் செய்தால் தமிழ்ச் சங்கம் தொடங்குவது பற்றிச் சிந்திக்கலாம்" என்றான்.

பொய்யாமொழி ஒரு பாடல்பாட அன்னை மீனாட்சியம்மை கோவிலில் சிலை வடிவில் இருந்த சங்கப்புலவரின் தலை அசைத்துக் கை தட்டியதைப் பார்த்த மன்னன் அதிசயமுற்றான். வேந்தன் மறுகணமே "பொற்றாமரைக் குளத்தில் மூழ்கிப் போயுள்ள சங்கப் பலகை மிதக்கப் பாடுக" என்றான். புலவர் பாடவும் சங்கப் பலகை மிதந்தது. ஆயினும் மன்னன் சங்கம் அமைப்பதில் விருப்பம் இன்றி இருப்பது உணர்ந்து கொண்ட பொய்யாமொழியார் அவ்விடம் விட்டகன்று குறுநில நாடுகளில் ஒன்றாய மாறை நாட்டைச் சேர்ந்த தஞ்சாக்கூர் எனுமூரையடைந்தார். அங்கு புலவர்களை ஆதரித்துப் போற்றும் சந்திரவாணன் என்னும் வேளாண் செல்வந்தரைச் சந்தித்தார். அங்கு தங்கியிருந்த நாட்களில் நாற்கவி ராசநம்பி அகப்பொருள் இலக்கணத்திற்கு இலக்கியமாகக் கோவை ஒன்று பாடினார். அதன்

பாட்டுடைத் தலைவன் சந்திரவாணன் என்ப தால் அதற்குச் "சந்திரவாணன் கோவை" எனப் பெயரிட்டுத் தன்னை ஆதரித்த வள்ள லைக் கௌரவித்தார். பாடல் அரங்கேற்றிய போது புலவரது ஒவ்வொரு பாடலுக்கும் பொன் தேங்காய் ஒவ்வொன்றினதும் மூன்று கண்களிலும் மூன்று முத்துக்கள் பதித்து வழங்கிச் சந்திரவாண வள்ளல் பரிசளித்துப் பொய்யாமொழிக்குப் பாராட்டுச் செய்தார்.

பின்பு பொய்யாமொழியார் சோழ நாட்டிலே பண்பாளராக விளங்கிய சீனக்க முதலியாருடன் நட்புப் பூண்டு ஈருடலில் ஓர் உயிர்போல் வாழ்ந்து வந்தார்கள். ஒருநாள் பொய்யாமொழியார் வெளியூர் போயிருந்த போது முதலியாரின் உயிர் உடலை உதறி விட்டது. நடந்த முதலிச் சிவம் கிடந்த சவமானது. உறவுகள் சூரையங் காட்டுக்குப் பிணத்தினைக் கொண்டு போய் சிதையில் கிடத்தினர். தீ மூட்ட ஆயத்தம் ஆகினர். ஓடோடி வந்த பொய்யாமொழிப் புலவர் சிதை யின் அருகில் சென்று நின்று "அன்று நீ செல்லக் கிட என்றாய்" என்று தொடங்கி ஒரு வெண்பா பாடினார். சிதையில் கிடந்த முதலியாரது உடல் ஒருபக்கமாக ஒதுங்கி யது. உறவினர் ஆச்சரியமுற்று நிற்க மறுபக்கலில் தன் நண்பனது அருகில் புல வரும் படுத்து உயிர் விட்டார். என்னே? நட்பின் மகிமை.

பொய்யா மொழிப்புலவர் வாழ்ந்த காலம் 12ஆம் நூற்றாண்டென அறிய முடிகிறது. கோழியைப் பாடிக் குஞ்சைப் பாடாது முட்டையைப் பாடிய முத்தமிழ் முரு கனின் உத்தம தொண்டன் வாழ்க.

## உன்னையே நீ தெளிவாய்!

பலாப்பழத்தை அறுப்பதற்கு முன் கை, கத்தி எல்லாவற்றிலும் எண்ணெய் பூசிக்கொள்ள வேண்டும். இல்லையென்றால் பழத்தின் பிசின் கையெல்லாம் ஒட்டிக்கொள்ளும். அதைப்போல நம்மைத் தெளிந்த சிந்தனை, போதிய அறிவு போன்றவற்றால், நினைத்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் இறைவனைப் பற்றி அறியும் ஞானம் பெறமுடியும். இல்லையென்றால், உலக நிகழ்ச்சிகள் நம் கவனத்தைக் கவர்ந்து, நம்மை மயக்கத்தில் ஆழ்த்திவிடும்.

இறைக்கின்ற ஊற்றுத்தான் சுரக்கும், சுரக்கிற நீர் நல்ல நீராக இருந்தால்த்தான் இறைக்கின்ற நீரும் நல்லநீராக இருக்கும். சுரப்பது சாக்கடை நீராக இருந்தால், இறைப்பதும் சாக்கடை நீராகவே இருக்கும். அதுபோல மனத்தில் எந்த எண்ணங்கள் தோன்றுகின்றனவோ, அந்த எண்ணங்கள்தான் செயலில் வெளிப்படும். மனத்தில் அழுக்கு இருந்தால் வெளியிலும் அந்த அழுக்குத்தான் வெளிப்படும். இந்த மன அழுக்கிற்கு மருந்து ஆன்மீக ஈடுபாடுதான். ஆன்மீகத்தில் ஈடுபாடு வைத்துக்கொண்டு மௌனம், தியானம், வழிபாடு, தொண்டு முதலியவற்றைக் கடைப்பிடிப்பதன்மூலம்தான் மன அழுக்குகளை நீக்கிக்கொள்ள முடியும்.

ஆன்மீகச் சாதனைகளுடன் இணைந்த தெய்வபக்தி, புண்ணிய காரியங்களைச் செய்தவர்கள், தியாகம், தொண்டு, ஒழுக்கம் என வாழ்பவர்கள் இந்த வகையைச் சேர்ந்தவர்களும் மரணத்திற்குப் பயப்படவேண்டியதில்லை. தூய எண்ணங்கள் மனதில் தோன்றுவதற்கு, தெய்வபக்தி இன்றியமையாது. தெய்வீக எண்ணங்கள் கொண்ட மனதில் தீய சிந்தனைகள் தோன்றமாட்டாது. நம் வாழ்க்கை ஆன்மீகம் சார்ந்ததாகவும், அறிவு சார்ந்ததாகவும் இருக்கவேண்டும். தெய்வீகச் சிந்தனைகள் கொண்ட மனதில் உயர்ந்த சிந்தனைகள் ஊற்றெடுக்கும்.

"மனதை மிகத் தூய்மையாக வைத்திருக்கவேண்டும். உள்ளம் உருகி இறைவனிடம் பிரார்த்தனை செய்வதன்மூலம் மனம் தூய்மையடைகின்றது. மனம் தெய்வத்தையும் நற்பண்புகளையும் பற்றிக்கொண்டால், அது ஆன்மீகச் சுரங்கம் ஆகிவிடும். அதே மனம் தீயவற்றைப் பற்றிக்கொள்ளும் போது அசுத்தக் கிடங்காகி விடும்.

**மனத்தின் இருளே அறியாமை.**

(தொடர்ச்சி...

# திருஞானசம்பந்தரும் சைவமும்

– திரு சி.வ. இரத்தினசிங்கம் அவர்கள் –

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் பல திருத்தலங்களைத் தரிசித்துத் தேவாரத் திருப்பதிகங்களைப் பாடியருளியுள்ளார். அனேகமான பதிகங்கள் கிடைக்காமல் போய்விட்டன. இருந்தும் 206 தலங்கள்மீது (ஒருசில தலங்களுக்குப் பல நாமங்கள் உள்ளன.) இந்த 206 தலங்கள்மீது சுவாமிகளால் 384 திருப்பதிகங்களில் பாடியருளிய 4158 தேவாரத் திருப் பாடல்கள் மாத்திரமே இப்பொழுது நம் கைகளுக்குக் கிடைத்துள்ளன.

வேதங்கள் ஓதி, வேத நெறியில் பல்வேறு சாதனைகளை இயற்றிய சம்பந்த சுவாமிகளுக்கு 16ஆம் வயதானதும் அவர் அவதரித்த குல கோத்திர நியமங்களுக்கு அமைவாக இல்லற அறத்தைப் பேணவேண்டித் திருநல்லூர்த் திருப்பெருமணத்தில் நம்பியாண்டார் நம்பியின் திருமகளை மணம்பேசி முடித்தார்கள். வேத ஒலி எழும்ப வேள்வித்தீ வான்முட்ட "அரஅர" ஒலி பரக்க வானவர்கள் பூமாரி பொழிய நன்மங்கையை நாயனார் கைபிடித்தார். திருநீல நக்கர் வேள்விச் சடங்கைப் புரிய நாயனார் மணமகளின் கைப்பிடித்து வேள்வித்தீயை வலம் வந்தார். அவ்வேளை நாயனார்

"கல்லூர் பெருமணம் வேண்டா கழுமலம்
பல்லூர்ப் பெருமணம் பாட்டுமெய் யாய்த்தில்
சொல்லூர்ப் பெருமணஞ் சூடல ரேதொண்டர்
நல்லூர்ப் பெருமண மேயநம் பாலே"

என்ற பதிகம்பாடி இறைவன் பாத நீழலில் சேரும் பருவம் இதுவே என்றருளினார். இதைச் சேக்கிழார் சுவாமிகள் பெரிய புராணத்தில்.....

"காதல்மெய்ப் பதிகம் நல்லூர்ப்
பெருமணம் எடுத்துக் கண்டார்
தீதுறு பிறவிப் பாசம்
தீர்த்தல்செம் பொருளாக் கொண்டு
'நாதனே நல்லூர் மேவும்
பெருமண நம்ப னேயுன்
பாதமெய்ந் நீழல் சேரும்
பருவம் ஈது' என்றுபாட"

என்ற பாடல் வரிகளால் அழகாக எடுத்து இயம்பியுள்ளார்.

தவநெறி காத்துவந்த சம்பந்த சுவாமிகள் சிவபிரான் எழுந்தருளியுள்ள "திருப்பெருமணம்" புண்ணிய தலத்தை நண்ணி வணங்கினார். சிவபிரான் அருளால் ஆங்கு ஒரு சோதி எழுந்தது. "நீயும் உன் மனையாட்டியும் சுற்றத்தாரும் அடியார்களும் மற்றும் திருமணங் காணவந்த அன்பர்களும் இச்சோதியுட் புகுந்து எம்மை சேருவீராக" எனச் சிவபிரானின் ஆணை அசரீரியாக எழுந்தது. காழிவேந்தரும் "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி" என்ற நமச்சிவாயப் பதிகத்தைப் பாடியருளிச் சோதியை வலம் வந்து அங்கிருந்த சகலரையும் சோதியுட் புகவைத்து இறுதியில் தானும் தன் துணைவியுடன் சோதியுட் புகுந்து இறைவனுடன் கலந்தார்.

திருஞானசம்பந்தர் தமிழுக்கும் சைவத்துக்கும் ஆற்றிய தொண்டுகளை ஏற்றிப் பணிந்தோர் பலர் வடலூர் வள்ளலார் இராமலிங்க சுவாமிகளின் திரு அருட்பா 5ஆம் திருப்பாடலில்

"சைவம் தழைக்கத் தழைத்தாண்டி - ஞான
சம்பந்தப் பேர்கொண்டு அழைத்தாண்டி
பொய்வந்த உள்ளத்திற் போகாண்டி - அந்த
புண்ணியன் பொன்னடி போற்றுங்கடி"

என்று அருளியுள்ளதை நோக்கற்பாலது.

சுவாமிகளுடன் சமகாலத்தில் வாழ்ந்து பெருமை பெற்ற நாயன்மார்கள் பதினொருவர். அவர்கள் பெயர் விபரம் வருமாறு: அப்பூதியடிகள், முருகநாயனார், சிறுத்தொண்டர், நெடுமாறன், குலச்சிறையார், மங்கையர்க்கரசியார், குங்கிலியகலய நாயனார், திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார், திருநீலநக்க நாயனார், திருநாவுக்கரசு நாயனார் என்ற பதினொருவராவர். அவர் முத்தியடைந்த தினம் வைகாசித் திங்கள் மூல நட்சத்திர நன்னாள். வாழ்ந்த காலம் கி.பி. 7ஆம் நூற்றாண்டு.

### திருஞானசம்பந்தர் துதி

பெருஞானப் பாலுண்டு பேரா
யிரங்கொள்ளும் பிஞ்ஞகனின்
ஒருஞானப் பிள்ளையாய்க் கோள்நீக்கி
நோய்நீக்கி ஓதரிய
குருஞான வள்ளலாய்க் காக்கும்
திருவாய்க் குணம்பெருக்கும்
திருஞான சம்பந்த மூர்த்திநற்
பாதமென் சென்னியதே"

(முற்றும்)

## காலியில் தேயிலை வளர்க்கும் தமிழரிடையே சமயப் பிரசாரம்

**யாழ்ப்பாணத்தில் சைவப் பேருரை நிகழ்த்தும் திரு ச. லலீசன் அவர்கள் எவ்வளவோ கஷ்டத்தின் மத்தியில் காலி மாவட்டத்தில் உள்ள தலங்கா பிரதேசத்திற்குச் சென்று தமிழ் மக்களைக் குறிப்பாக சைவ மக்களைச் சந்தித்து கலந்துரையாடி சொற்பொழிவு ஆற்றி வந்தமைக்கு யாழ் சைவ மக்கள் சார்பில் நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.**

**இந்நிகழ்வை 2014ஆம் ஆண்டு ஐப்பசிமாத 202ஆவது மலரில் வெளியிட்டு சைவ மக்களுக்கு ஒரு எழுச்சியையும், வேதனையையும், உத்வேகத்தையும் தந்து சைவ சமய ஸ்தாபனங்கள் முன்னின்று செயற்பட உதவிய சந்நிதியான் ஆச்சிரமத்திற்கு நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.**

**இதேவேளை இப்படியான சைவத்தமிழ் மக்கள் சைவசமயத்தைவிட்டு வேறு சமயத்திற்கு மாறுவதற்கு ஏற்படும் காரணங்களைக் கண்டறிந்து அதனைத் தடுப்பதற்கு ஞானச்சுடர் வழிவகுக்கும் என எதிர்பார்க்கின்றேன்.**

**– இளை. ஆசிரியர் க. நல்லையா –**

**திருப்தி என்பது மனமகிழ்ச்சியே.**

# ஐப்பசி மலரின் அடையாளம்

– திரு கே.எஸ். சிவஞானராஜா அவர்கள் –

சுடரின் தகவலாகச் சொல்லப்பட்ட விடயம்- சைவசமயத்தைப் பின்பற்றுகின்ற தமிழர்கள் கடந்த காலங்களில் ஏற்பட்ட அசம்பாவிதங்களால், தாம் விரும்பியோ, விரும்பாமலோ, **தமது அடையாளங்களை இழந்து வருவதை** நாம் காண முடிகின்றது. இதனை வடகிழக்குப் பகுதிகளில் வாழுகின்ற சைவ சமயத்தவர்கள் உணர்ந்து, அவர்களை நாடிச்சென்று அவர்களுக்கு வேண்டிய உதவிகளை வழங்கி, **அவர்கள் தமது அடையாளத்தை இழந்து போகாது பாதுகாப்பது** மிகவும் அவசியமானதாகும். இது இலங்கை முழுவதற்கும் பொருந்துவதாகும். இக்கருத்தினை வலியுறுத்துமாற்போல **“காலியில் தேயிலை வளர்க்கும் தமிழரிடையே சமயப் பிரசாரம்”** என்ற கட்டுரை அமைந்துள்ளது. திரு ச. லலீசன் அவர்களது நேரடி அனுபவம், யாழ்ப்பாணச் சிவானுபவத்தை நுகரவைத்தது. நாம் சுற்றிச் சுற்றி யாழ்ப்பாணத்துக்குள்ளே எல்லாவற்றையும் சாதிக்க நினைக்கின்றோம். அதற்கப்பால் சிந்திக்க முடிவதில்லை. சிலாபம், புத்தளம், ஹேவாகெட்ட, எனசல் கொல்ல, தெல்தோட்டை ஆகிய இடங்களில் சைவத்தையும், தமிழையும் தோற்கவிடாது 1972, 1973, 1976, 1977, 1978, 1979, 1980, 1981 ஆகிய “8” ஆண்டுகளில் வெல்ல வைத்த பாக்கியத்தை யான் எனது கடமையின்போது பெற்றுக்கொண்டதைப்போல, திரு ச. லலீசன் அவர்களும் காலியில் பெற்றுக்கொண்டார்.

காலி, “தலங்கா” சரஸ்வதி வித்தியாலயம் எப்படியோ வெளிச்சத்திற்கு வந்துள்ளது. ஞானச்சுடருக்கும், லலீசனுக்கும் பணிவான நன்றிகள். “நாக்கியாதெனிய” பிரதேசத்திற்கான ஒரு துரும்பு கிடைத்து விட்டது. இதனை இறைவன் தந்த கரும்பாக நாம் ஏற்றுக்கொண்டு விட்டால் சைவ சமயத்தினையும், தூய தமிழினையும் ஓரளவு உயிரோடு வைத்திருக்க முடியும்.



**மரியாதை விலைமதிப்பற்றது.**

திரு லலீசன் அவர்கள் கூறும்போது, "தலங்ககாவில் தீவிர மதமாற்றம் இடம்பெறுகின்றது. மற்றைய சமயம் சார்ந்த பிரசாரகர்கள் அடிக்கடி இங்கு வந்து பிரசாரம் செய்கிறார்கள். இந்து சமயம் சார்ந்தவர்கள் யாரும் வருவதில்லை. எமது சமயம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தித் தாருங்கள்" என்பதாக, ஆசிரியர் சுப்பையா இராஜேந்திரன் அவர்களின் வேண்டுகோளை முன்வைத்தமை, நாம் ஒவ்வொருவரும் கூர்ந்து அவதானிக்கத்தக்கதாகும்.

தலங்ககாவில் சுவாமி என்ற எதிர்பார்ப்போடு வரவேற்கின்ற பண்பாடும், "சத்தியமாக எனக்கு சுவாமி என்ற அப்படி ஒரு நினைப்பும் இல்லை" என்ற லலீசனின் சிந்தனையும் வரவேற்கத்தக்கது. லலீசன் அவர்களின் "சத்தியத்திற்கு ஒரு சபாஷ்" கொடுக்கலாம். எமது சமயத்தில் பலர் மேடைகளோடும், பட்டங்களோடும் வாழ்ந்து முடித்துவிடுகிறார்கள். ஒரு சமூகத்தின் அடித்தளத்திற்குச் சென்று சைவத்தின் ஊற்றுக்களைத் திறந்து விடுபவர்கள் மிகமிகச் சொற்பமானவர்களேயாவர். சைவத்தின் ஊற்றுக்களைத் திறந்து அதை பிரவாகிக்கச் செய்த இடங்கள் இரண்டாகும். ஒன்று சந்நிதி. மற்றையது நல்லூர். இது பற்றி அதிகம் விளங்கப்படுத்தவேண்டிய அவசியம் இல்லை.

தலங்ககா சரஸ்வதி தமிழ் வித்தியாலயம் 311 மாணவர்களை அரவணைத்து சைவத்தையும், தமிழையும் காப்பாற்றி வருவதனாலும், அல்லாமலும், "எங்களைத் தேடி முதன் முதலாக இந்து சமயம் சார்ந்து செய்தி சொல்ல வந்தவர் லலீசன் ஐயாவென்று" ஆசிரியர் இராஜேந்திரன் கூறியதனாலும் "ஆச்சிரம சமூகம்" பிரயோசனமான ஏதாவதொன்றைச் செய்வதற்கு சந்நிதியான் ஆவன செய்வான் என்பது எனது திண்ணம். இக்கருத்தினை யாருமே சுமையாகக் கருதவேண்டாம். ஏனெனில் சந்நிதியான் ஆச்சிரம சுவாமிகள், என்னதான் கஷ்டங்கள், தட்டுப்பாடு வந்தாலும் நாளாந்த, வாராந்த, மாதாந்த, வருடாந்த, தர்ம காரியங்களில் குறைவிடுவதில்லை. முன்பள்ளியிலிருந்து, பல்கலைக்கழகம் வரை, சிறுவரிலிருந்து முதியோர்வரை, அனர்த்தங்களிலிருந்து அகதிவாழ்வுவரை, அன்னதானத்திலிருந்து அறிவுத் தானம் வரை, ஆடைத்தானம் தொடக்கம் மேடைத்தானம் வரை (மேடைத்தானம் என்பது-அனைவருக்கும் நிகழ்ச்சி செய்வதற்கான சந்தர்ப்பம்) ஆச்சிரம தர்மங்கள் குறைவில்லாமல் நடைபெற்றுக்கொண்டே இருக்கின்றன. தலங்ககாவைப் பொறுத்த வரையில், பிறசமய நிறுவனங்களே உதவி செய்வதாக அறியத்தந்துள்ளனர். இந்த விடயத்தில் இந்துசமயம் சார்ந்த நிறுவனங்களின் பார்வை தலங்ககாவின்மீது இன்னும் விழவில்லை. அறநெறிப் பாடசாலையில் ஆசிரியப் பணியாற்றியவரையும் (மதமாற்றப் பிசாசு) விட்டுவைக்கவில்லை-என்றால் பார்த்துக் கொள்ளுங்கோ!

நாங்கள் அதிகம் விரும்பிக் குடிக்கும் வட்டவல, செஸ்ரா தேயிலை இங்குதான் பயிரிடப்படுகிறது. எவ்வளவு சுவை. இதில் தமிழ் மணக்கவில்லையா? சிவம் தெரியவில்லையா? நாம் உயிர் பெறவில்லையா?

ஆம்! அவர்கள் இந்துவாக வாழ, தமிழோடு வாழ, பயனோடு வாழ, அவர்கள் மாறாமல் வாழ, அவர்கள் தோற்காமல் வாழ, தமிழ், சமயம், பண்ணிசை, பண்பாடு, வாசிப்பு, நூலகம், நாடகம், நடனம், சித்திரம் சார்ந்த நிபுணர்குழு அங்கு செல்ல திரு லலீசன் அவர்களும், ஆச்சிரம சமூகமும் குறிப்பாக ஆச்சிரம சுவாமிகளும் கருணை வைப்பார்களானால் சைவம் காலியில் ஒருபோதும் காலியாகாது!.

**கருணை இல்லா அழகு பயனற்றது.**

நாவலர் பக்கம்: (தொடர்ச்சி...

# சைவ சமய வினா விடை

– ஆறுமுகநாவலர் –

**348. குருவுக்கும் சிவனடியாருக்கும் செய்யத் தகாத குற்றங்கள் யாவை?**

கண்டவுடன் இருக்கைவிட்டெழாமை, அவர் எழும்பொழுது உடனெழாமை, அவர் திருமுன்னே உயர்ந்த ஆசனத்திருத்தல், காலை நீட்டிக்கொண்டிருத்தல், சயனித்துக் கொள்ளுதல், வெற்றிலை பாக்குப் புசித்தல், போர்த்துக் கொள்ளுதல், பாதுகையோடு செல்லல், சிரித்தல், வாகனமேறிச் செல்லல், அவராலே தரப்படுவதை ஒரு கையால் வாங்குதல், அவருக்குக் கொடுக்கப்படுவதை ஒரு கையாற் கொடுத்தல், அவருக்குப் புறங்காட்டல், அவர் பேசும்போது பராமுகஞ் செய்தல், அவர் கோபிக்கும்போது தாமுங் கோபித்தல், அவருடைய ஆசனம், சயனம், வஸ்திரம், குடை, பாதுகை முதலியவைகளைத் தாம் உபயோகித்தல், அவைகளைத் தம் காலினாலே தீண்டல், அவர் திருநாமத்தை மகிமைப் பொருள்படும் அடைமொழியின்றி வாளா சொல்லல், அவரை யாராயினும் நிந்திக்கும் பொழுது காதுகளைப் பொத்திக்கொண்டு அவ்விடத்தினின்று நீங்கிவிடாது கேட்டுக்கொண்டிருத் தல் முதலியவைகளாம்.

**349. குரு முன்னும் சிவனடியார் முன்னும் எப்படி விண்ணப்பம் செய்தல் வேண்டும்?**

வஸ்திரத்தை ஒதுக்கிச், சரீரத்தைச் சற்றே வளைத்து, வாய் புதைத்து நின்று அவரை சுவாமீ என்பது முதலிய சொற்களினாலே உயர்த்தியும், தன்னை அடியேன் என்பது முதலிய சொற்களினாலே தாழ்த்தியும், மெல்ல விண்ணப்பம் செய்தல் வேண்டும்.

**350. கடவுளையும் குருவையும் சிவனடியாரையும் தாய் தந்தை முதலாயினவரையும் நமஸ்கரிக்கும்போது கால் நீட்டத்தக்க திக்குகள் எவை?**

மேற்கும் தெற்குமாம். கிழக்கினும் வடக்கினும் கால் நீட்டி நமஸ்கரிக்கலாகாது.

**351. குருவையும் சிவனடியார் முதலாயினவரையும் நமஸ்கரிக்கலாகாத காலங்களும் உண்டா?**

உண்டு. அவர் கிடக்கும்பொழுதும், வழி நடக்கும்போதும், பத்திரபுஷ்பம் எடுக்கும்போதும், வெற்றிலை பாக்கு உண்ணும்போதும், ஸ்நானம், சந்தியாவந்தனம், பூசை, ஓமம், சிரார்த்தம், போசனம் முதலியன பண்ணும்போதும், இராச சபையிலே போய் இருக்கும்போதும் அவரை நமஸ்கரிக்கலாகாது.

**352. தீக்ஷாகுரு, வித்யாகுரு முதலாயினார் திருமுகம் விடுத்தருளின், அதை யாது செய்தல் வேண்டும்?**

பீடத்தின்மீது எழுந்தருளப் பண்ணிப் பத்திர புஷ்பங்களால் அருச்சித்து, நமஸ்கரித்து இரண்டு, கைகளாலும் எடுத்து இரண்டு கண்களிலும் ஒற்றிச், சிரசின்மேல் வைத்துப் பின்பு திருக்காப்பு நீக்கி வாசித்தல் வேண்டும்.

**பிரார்த்தனை என்பது நம்பிக்கையின் குரல்.**

353. தான் வழிபட்டு வந்த ஆசாரியன் பெரும் பாவங்களைச் செய்வானாயின் அவனை யாது செய்தல் வேண்டும்?

தானே பூசித்து வந்த சிவலிங்கம் அக்கினியினாலே பழுதுபடின், அதனை இகழாது மனம் நொந்து கைவிட்டு வேறொரு சிவலிங்கத்தைக் கைக்கொள்வது போலத் தான் வழிபட்டு வந்த ஆசாரியன் சிவநிந்தை, சிவத்திரவிய அபகாரம் முதலிய பெருங்கொடும் பாதகங்கள் செய்து கெடுவானாயின், அவனை இகழாது மனம் நொந்து கைவிட்டு வேறொரு ஆசிரியனை அடைந்து வழிபடல் வேண்டும்.

354. குருவினிடத்தே சிவசாத்திரம் எப்படிப் படித்தல் வேண்டும்?

நாடோறும் ஸ்நானம் முதலிய நியதிகளை முடித்துக் கொண்டு, கோமயத்தினாலே சுத்தி செய்யப்பட்ட தானத்திலே பீடத்திலே வைத்து, அதன்மீது பட்டுப் பரிவட்டத்தை விரித்து, அதன்மீது சிவசாத்திரத் திருமுறையை எழுந்தருளப்பண்ணிப் பத்திர புஷ்பங்களால் அருச்சித்து, நமஸ்கரித்துப் பின்பு ஆசாரியாருடைய திருவடிகளையும் அருச்சித்து, நமஸ்கரித்து, அவர் கிழக்கு முகமாகவேனும், வடக்கு முகமாகவேனும் இருக்க அவருக்கு எதிர்முகமாக இருந்து படித்தல் வேண்டும். படித்து முடிக்கும்பொழுதும் அப்படியே நமஸ்கரித்தல் வேண்டும். இப்படிச் செய்யாது படித்தவர், படித்ததனால் ஆகிய பயனை இழப்பர்; அம்மட்டோ! நரகத்திலும் விழுந்து வருந்துவர்.

355. சிவசாத்திரம் படிக்கலாகாத காலங்கள் எவை?

பிரதமை, அட்டமி, சதுர்த்தசி, அமாவாசை, பௌர்ணிமை, உத்தராயணம், தக்ஷிணாயனம், சித்திரை விஷு, சந்தியாகாலம், ஆசௌச காலம், மகோற்சவ காலம் என்பவைகளாம்.

356. எடுத்துக்கொண்ட சிவசாத்திரம் படித்து முடித்தபின் யாது செய்தல் வேண்டும்?

சிவலிங்கப்பெருமானுக்கும், சிவசாத்திரத் திருமுறைக்கும் வித்தியாகுருவுக்கும் விஷேச பூசை செய்து அவர் திருமுன் இயன்ற தக்ஷிணை முதலியன வைத்து நமஸ்கரித்து அவரையும் தீக்ஷா குருவையும் மாகேசுவரர்களையும் குருடர், முடவர் முதலானவர்களையும் பூசித்து அமுது செய்வித்தல் வேண்டும்.

357. சிவசாத்திரத்தைக் கைம்மாறு கருதிப் படிப்பிக்கலாமா?

அச்சம், நண்பு, பொருளாசை என்பவை காரணமாகச் சிவசாத்திரத்தை ஒருவருக்கும் படிப்பிக்கலாகாது. நல்லொழுக்கமும் குருலிங்க சங்கம பத்தியும் உடைய நன்மாணாக்கர் களுக்கு அவர்கள் உய்வது கருதிக் கருணையினாலே படிப்பித்தல் வேண்டும். அவர்கள் விரும்பித் தரும் தக்ஷிணையைத் தாம் செய்த உதவிக்குக் கைம்மாறெனக் கருதி ஆசையால் வாங்காது, அவர்கள் உய்யுந் திறம் கருதிக் கருணையால் ஏற்றுக் கொள்ளல் வேண்டும்.

358. மாணாக்கர்கள் தாங்கள் குருவுக்குக் கொடுக்கும் தக்ஷிணையை அவர் செய்த உதவிக்குக் கைம்மாறெனக் கருதலாமா?

தாங்கள் குருவுக்கு எத்துணைப் பொருள் கொடுப்பினும், தங்களை அவருக்கு அடிமையாக ஒப்பித்து விடுதல் ஒன்றையேயன்றி, அப்பொருளைக் கைம்மாறெனக் கருதிவிடலாகாது.

(தொடரும்...

காலம் தவறாமை தொழிலின் ஆத்மாவாகும்.

# மார்கழியின் சிறப்பு

–செல்வீ பா. வேலுப்பிள்ளை அவர்கள்–

மார்கழி பீடை பிடித்த மாதம்; மார்கழி மாதம் எந்த நல்ல காரியங்களும் செய்யக்கூடாது என மக்கள் பேசிக்கொள்வார்கள். ஆனால், "மாதங்களில் நான் மார்கழி" எனக் கிருஷ்ணபரமாத்மா பகவத்கீதையில் சொல்லியுள்ளாரெனில் அதன் உயர்வுக்கு வேறு சான்றுகள் வேண்டாம்.

மார்கழிமாதம் முழுவதும் மழை, பனி, கூதல் என இரவில் போர்வையை இழுத்து மூடிக்கொண்டு தூங்குவர். எங்களுடைய ஒரு வருடம் தேவர்களுக்கு ஒரு நாள். மார்கழி மாதம் முழுவதும் தேவர் கட்குப் பிரம்ம முகூர்த்தம், வைகறைப் பொழுது. தைமுதல் ஆனி மாதம்வரை உத்தராயணம். தேவர்களின் பகல் நேரம் என்றும், ஆடிமுதல் மார்கழி மாதம் வரை தட்சிணாயனம் என்றும் சொல்லப்படுகிறது. சோதிட சாஸ்திரத்தில் மார்கழியைத் தனுர் மாதம் எனக் கூறப்படுகிறது. மார்கழிக்கு மார்க்கசிரம் என்பது சாஸ்திரப் பெயர். மார்க்க சிரம் மிருகசீரிடத்தைக் குறிக்கும். சந்திரன் மிருகசீரிடத்தில் பிரவேசிக்கும் நாளில் பௌர்ணமி வருவதால் மார்கழி எனவும், சூரியன் தனுராசியில் பிரவேசிக்கும் மாதம் மார்கழியானமையால் தனுர்மாதம் எனப்படுகிறது.

நட்சத்திரங்கள் இருபத்தேழில் திரு என அடைமொழியுடன் வருவது திருவாதிரை, திருவோணம் இரண்டுமே. திருவாதிரை சிவனுடைய நட்சத்திரம், திருவோணம் திருமாலின் நட்சத்திரம். மார்கழி நோன்பு திருவாதிரைக்குரிய இறைவனது விழா. திருவாதிரை என்பது வடமொழியில் ஆர்த்ரா எனப்படும். அந்நாளில் விடியற்காலையில் ஆருத்ரா தரிசனம் செய்வது பெரும்பேறாகும். மார்கழித் திருவாதிரையன்று நடைபெறும் "ஆர்த்திரா" தரிசனம் இறைவனின் திருநடனத்தைக் குறிக்கும். ஆர்த்ரா என்ற சொல்லின் பொருள் நனைதல். அதாவது இறைவனின் கருணையாகிய திருவருள் வெள்ளத்தில் நனைதல் என்பது பொருள்.

மாசிமாதம் தேய்பிறையில் வரும் சிவராத்திரியில் இறைவன் அழல் உருவாக நின்ற லிங்கோற்பவகாலம், அதேபோல் மார்கழி திருவாதிரை நாளில் உலகோரை மகிழ்விப்பதற்காக ஆனந்த நடனம் புரிகின்றார். இந்த ஆனந்த நடனம் இறைவனின் ஐந்தொழிலைக் குறிக்கின்றது.

மாரிகாலம் பனி, குளிர், கூதல் மிகுந்த நாள்களில் மக்கள் அதிகாலையில் எழுந்து நீராடி திருப்பள்ளி எழுச்சி, திருவெம்பாவைப் பாடல்கள் பாடி விரதம் அனுஷ்டிப்பர். மார்கழித் திங்கள் மதிநிறைந்த நல்நாள் நீராடுவதில் ஓர்சுகம். கிராமங்கள்தோறும் அதிகாலையில் மணியோசை, சங்கொலியுடன் வீதி வீதியாகப் பஜனை பாடிப் போவர். கன்னிப்பெண்கள் ஒவ்வொரு வீட்டு வாயிலில் நின்று திருவெம்பாவைப் பாடல்கள் பாடி மற்றப் பெண்களையும் அழைத்துப் போவதும் ஓர் காட்சியே. நாட்டில் நல்ல மழை பொழிய வேண்டும், தமக்கு நல்ல கணவர் வாய்க்க வேண்டும் என்பதே கன்னிப்பெண்களின் அவா.

திருவாசகம் அருளிச்செய்தவர் மணிவாசகர். திருவாசகத்தில் இருபது பாடல்கள் இறுதியில் "எம்பாவாய்" என முடியும் பதிகம் திருவெம்பாவை. திருவெம்பாவையில் முதலில் வரும் எட்டுப்பாடல்களும் ஒரு கன்னிப்

பணம் இல்லையேல் பணியாளனும் இல்லை.

பெண் வந்து ஒருவளை துயிலுணர்த்தி எழச் செய்து, இருவரும் சேர்ந்து "படிற கடைதிற வாய்" எனச் சொல்லி கதவைத் திறவாய் எனப்பாடி ஒவ்வொரு பெண்ணாக அழைத்துப் போய் பொய்கையில் நீராடச் சேர்கிறார்கள். "முன்னைப் பழம்பொருள்...." என்னும் பாடலில் "உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம் அன்னவரே எம்கணவர் ஆவார்" என இறைவனிடம் விண்ணப்பிக்கின்றனர். அதாவது இறைவனே எங்கள் தலைவர்; அவருடைய அடியார்களே எமது கணவராக கிடைக்குமாயின் எங்கட்கு எந்தவிதமான குறையுமில்லை எனக் கேட்கின்றனர். "அண்ணாமலையான்....." எனவரும் பாடலில் அண்ணாமலையான் ஆணாகிப் பெண்ணாகி, வேறாகி உடனாகி உயிர்கட்கு அருள் வழங்குவதுபற்றிப் பேசப்படுகிறது. இறுதியாக இறைவனின் ஆதி, அந்தம், தோற்றம், நிலை, இறுதி ஆகிய ஐந்தும் நடராசப் பெருமானின் திருவடியே திருவருளாகும் என முடிகிறது.

மார்கழிக்குரிய சிறப்பு மார்கழி நோன்பு. அதிகாலையில் திருப்பள்ளி எழுச்சி, திருவெம்பாவை பாடுவார்கள். இறுதிநாள் ஆருத்திரா தரிசனம் நடைபெறும். அது இறைவனது திருநடனம். திருவாதிரைத் திருநாள் (விழா) அருளல் (அனுக்கிரகம்) தொழிலைக் குறிக்கிறது. பஞ்சகிருத்திய நடனம் பார்ப்பது கண்கொள்ளாக் காட்சி.

மார்கழி மாதம் ஆண்டாள் நாள் தோறும் அதிகாலை எழுந்து திருப்பாவை பாடிப் பரந்தாமனை வணங்கி அவனையே நாயகனாக வரித்து மணம்புரிந்து அவனுடன் ஐக்கியமான காலம். இந்திரன் கோபர்கள் மீது சினம்கொண்டு பெருமழையைப் பொழியச் செய்தபோது கிருஷ்ணன் கோவர்த்தன கிரியைக் குடையாகப் பிடித்துக் காப்பாற்றியதும் மார்கழியே.

திருப்பாற்கடலைக் கடைந்தது, மணிவாசகர் குருந்தமர நிழலில் ஞானாசாரியராகிய சிவனிடம் ஞானதீட்சை பெற்றது, பாரத யுத்தம் நடந்தது மார்கழி மாதத்தில்.

மார்கழி மாதம் முழுவதும் மகா விஷ்ணுவை நோக்கி அனுஷ்டிக்கும் விரதம் திருப்பாவை. வைஷ்ணவப் பெண்கள் ஒருவரை ஒருவர் துயில் எழுப்பி பொய்கையில் நீராடி, மண்ணில் பாவை செய்து தமக்கு நல்ல கணவர் கிடைக்க வேண்டும், நாட்டுக்கு நல்ல மழை வேண்டும் என வழிபட்டு, நெய், பால் உண்ணாது, மையிட்டு எழுதாது, மலரிட்டு முடியாது, தீய சொற்கள் பேசாது, ஐபமும் பிச்சையுமிட்டு மார்கழி மாதம் முப்பது நாட்களும் விரதம் அனுஷ்டித்ததாக ஆண்டாள் பாடிய திருப்பாவை கூறுகிறது.

மகாவிஷ்ணுவுக்குரிய விசேட நாள் மார்கழி வைகுந்த ஏகாதசி, நடராசருக்குரியது மார்கழித் திருவாதிரை. மார்கழி மாதத்தில் திருப்பாவை, திருவெம்பாவை பாடினால் வீட்டில் மகாலட்சுமி வாசம் செய்வாள். இறைவன் அருள் கிடைக்கும்.

கன்னிப்பெண்கள் இம்மாதத்தில் பாவை நோன்பு நோற்று விரதம் இருப்பின் மனம்போல் மாங்கல்யம் கிட்டும் என்பது ஆண்டாள் வாக்கு.

## ஆன்மீகச் சிந்தனை

அழியாத பரம்பொருள் உள்ளத்தில் இருக்கிறது. எனவேதான் தியானம் செய்யும்போது ஆனந்தம் உண்டாகின்றது. தியானம் படிப்படியாக ஆழமாகும்போது. இறையுணர்வு அனுபவம் கிடைக்கும். அது மெதுவாகத்தான் வரும். அதனை ஒரேநாளில் எதிர்பார்க்க முடியாது. தியானத்தின்போது ஆனந்தம் பெறுவதென்பது ஒரு சாதாரண விடயமல்ல. தியானம் தீவிரமாகும்போது இறைவனின் கருணையும் உன்னைத்தேடி வருகிறது.


**நன்மதிப்புடன் சமாதானம் செய்.**

# ஸ்ரீ ரமண நினைவலைகள்

## 15. சர்வக்ஞ ரமணன்

ஸ்ரீ பகவானின் அடியார்கள் பலர் சம்சாரிகளே. குடும்பத்தில் மனைவி, மக்களுடன் வசித்துக்கொண்டு பகவானைச் சரணடைந்தவர்கள். வேலை செய்வதையும், ஞானத்தை நாடுவதையும் பரஸ்பரம் முரண்பட்டதாக அவர்கள் நினைப்பதில்லை. லௌகிகக் கடமைகளை வழுவாமல் நிறைவேற்றிக் கொண்டே பகவானின் உபதேசங்களைத் திடமாகப் பின்பற்றி, பெரும் பயனடைகின்றனர்.

நடராஜ ஐயர் (ஸ்டேசன் மாஸ்டர் என்றும் N.N. ராஜன் என்றும் குறிப்பிடப்படுபவர்) 1935இல் தனது இருபத்து ஒன்பதாவது வயதில் பகவானிடம் வந்தவர். முதல் பார்வையிலேயே பகவான் அவர் மனதில் அழுந்தப் பதிந்துவிட்டதால் திருவண்ணாமலை ரயில்வே ஸ்டேஷனுக்கு மாற்றல் வேண்டி மனுக் கொடுத்தார். அற்புதம் என்று எண்ணத் தூண்டும் வகையில் சீக்கிரமே அவருக்கு மாற்றலும் கிடைத்தது. விரும்பியது கிடைத்ததும் “டியூட்டி”யில்லாத சமயங்களிலெல்லாம், ஆச்ரமத்துக்கு வந்து பகவான் சந்நிதியில் அமர்ந்து விடுவார். உணர்ச்சிப் பெருக்கில் அவருடைய கண்களில் நீர் திரளும். எனினும் அவருடைய ரமண பக்தியோ, ஆன்மீக முயற்சிகளோ, அவருடைய குடும்பக் கடமைகளையும், தொழிலையும் பாதிக்கவில்லை. உண்மையில் அவர் மனைவி கமலா அவரை விட தீவிர பக்தையானாள். குழந்தைகளும் அன்பு வலையில் அகப்பட்டவர்களே. வேலை நாட்களில் ஆச்ரமத்தில் சற்று தாமதமாகிவிட்டால், பகவானே, “ஸ்டேஷனுக்கு நேரமாகிறதே என்று நினைவுபடுத்தும். தன் அடியார்கள் தங்கள் கடமைகளில் வழுவாமல், அவற்றைக் குறித்த நேரத்திலும், பொறுப்பாகவும் நிறைவேற்ற வேண்டுமென்பது பகவானின் ஆதேசமாக இதைக் கொள்ளலாமல்லவா! N.N. ராஜன் சுறுசுறுப்பாக ஆச்ரமத்துக்கு அடிக்கடி வரும்போதெல்லாம் கிரி பிரதக்ஷிணம் செய்வார். ஒரு சமயம் ஆச்ரமத்தில் தங்கியபொழுது பகவானின் பெருமையை ஆசைதீர என்னிடம் சொல்லி மகிழ்ந்தார்.



“நாம் அதை வெறும் மரியாதைக்காகவோ, வேறு எதனாலோ ‘பகவான்’ என்றழைக்கவில்லை பிறப்பிறப்பின் ஆதியும், அந்தமும் அறிந்தவனெவனோ, எல்லாரிலும் எவன் ‘தன்னை’க் காண்கிறானோ, ஆனந்தமயமான சுத்த சத்துவத்தில் எவன் திடமாக நிலைத்து நிற்கிறானோ, அவனே பகவான், அவன் மாத்திரமே பகவான். பேச்சில் நாம் பகவானை ‘அது’ என்றே குறிப்பிடுகிறோம். ஏனெனின் ஜீவன் முக்தனான பரமஞானி. ‘தத்வமசி’ என்ற மகா வாக்கியத்தின் பொருளாகும். பகவான் நம்முடன் அமர்ந்து உண்டு உறங்கி இருந்தாலும் அது பரம்பொருளே மனித உருத்தாங்கி நம்மிடையே உலவுகிறது. இதை நாம் மறக்கக்கூடாது. அதன் வாழ்வு சுத்த தெய்வீக இன்னிசை. சொல்லனைத்தும்

பளிங்கெனப் பரிசுத்தமும் குற்றமற்ற பூர்ண மானவை. சதா ஆன்மாவிலேயே கலந்திருப் பதால் அதன் சந்நிதியில் சாந்தியும், ஆனந் தமும் அழகுடன் நிலவும். பகவான் தன்னை 'பணி லேனிவாடு' (வேலையற்றவன்) என்று விளையாட்டாகக் குறிப்பிட்டாலும், அதன் செயல் ஒவ்வொன்றும் பழுதற்றதும், துல்லிய மாக, நுட்பமாக, முழுமைபெறும். சமை யலோ, புத்தகம் பைண்டு செய்வதோ, கைத் தடி செய்வதோ, புருப் திருத்துவதோ, எதுவா னாலும் லவலேசமும் அதில் குறை இருக் காது. பக்தர்கள் பொருத்தமாக பகவானை 'அது' என்று குறிப்பிட்டாலும், பகவான் தன்னை எளிமையாக சகஜமாக எல்லோரையும் போல் நான் செய்தேன், வந்தேன், அமர்ந் தேன் என்றுதான் சொல்வது வழக்கம். இதி லும் சமத்துவம். பார்வைக்கு நம்மைப்போல் தோன்றினாலும் பகவான் ஞானி மட்டுமல்ல. சகஜ நிஷ்டர், இயற்கையாக சாசுவத நிலை யில் உறையும் பரப்பிரம வஸ்து அதுவே!

"பகவான் இரவில் நீண்டு நிமிர்ந்து படுப்பதேயில்லை. உறங்குவதுண்டா என்பது யாருக்குமே தெரியாது. காலை மூன்று மணிக்கு சோபாவிலிருந்து எழுந்து சுத்தி கரித்தபின், காய்கறி நறுக்கி வைத்துவிட்டு சமையலறையில் நுழைந்து சமையலுக்கு வேண்டிய முன்னேற்பாடுகளெல்லாம் செய்து வைத்துவிட்டு, அரைக்க ஆரம்பித்தால் ஒரே சீராக, நிதானமாக ஒரே கதியில் அரைக்கும். சில சமயம் பகவான் உப்புமா தயாரிக்கும். அமிர்தம் தோற்றது, அத்தனை ருசி!

கோடையில் சமையலறை மிக வெப் பமாக இருக்கும். ஆனால் யாராவது பகவா னுக்கு விசிறியால் விசிற முயன்றால், "உனக்குத்தான் வியர்க்கிறது, உனக்கே விசிறிக்கொள்" என்று சொல்லித் தடுத்து விடும். பகவான் நறுக்கிய காய்கறிகளின் துண்டுகள் எல்லாம் ஒரே சீராக, அழகாக இருக்கும். விதவிதமான காய்கறிகளின் தயாரிப் பும் விதவிதமான முறைகளில் அமையும். பகவான் சமைக்கும் முறையில், வீணாவது என்ற பேச்சுக்கே இடமில்லாதபடி காய்களின் எல்லாப் பாகங்களும் சமையலில் ஏதாவ தொரு தயாரிப்பில் கலந்து உபயோகமாகி விடும். மிஞ்சினவை வேலைக்காரருக்கு என்பது கிடையாது. எல்லோருமே சமம். வீணாவது என்பதில்லாததால், தூர எறிவது என்பதுமில்லை. அதற்காக, இரவு மிச்சமான வற்றை எல்லாம் மறுநாள் காலை சேர்த்துக் கொதிக்க வைத்து இட்லிக்குத் தொட்டுக் கொள்ளும், ருசியான குழம்பாக மறுபிறவி கொடுத்துவிடுவார். அதன் சுவையே அலாதி. ஆரஞ்சு, ஆப்பிள், பூசணிக்காய் முதலிய வற்றின் தோல்களெல்லாம் சட்னி அவதார மெடுத்து வாய்க்கும் வயிற்றுக்கும் விருந்தாக வும் மருந்தாகவும் ஆயின. பகவான் சமையல் கலையில் நளனேயானாலும், அது உண் ணும் விதமோ நிகரற்றது. இத்தனை சிரத்தை யுடன் தயாரிக்கப்பட்ட எல்லா உணவு வகை களும் பகவான் இலையில் ஒரேயடியாக ஒன்றாகக் கலக்கப்பட்டு ஒரே மாதிரியாக உட்கொள்ளப்படும். அப்படியானால் பக வானுக்கு எது பிடிக்கும். எது விலக்கு என்று எப்படிக் கண்டுபிடிப்பது? அப்படி ஏதாவது இருந்தால்தானே கண்டுபிடிப்பதற்கு? அதிலும் சமநிலை - அத்வைதம்தான்! ஆறுமணிக்கு ஹாலுக்கு திரும்பிய பின் ஸ்நானம், காலை ஆகாரம். அதன்பின் ஒரு அரைமணி நேர நடை மலைமேல். இவைதான் பகவானின் தினசரி காலை நியமம்.

நடராஜன் மேலும் சில நிகழ்ச்சிகளை எனக்கு எடுத்துரைத்தார். "எனக்கு சற்று வேடிக்கையான ஒரு சம்பவம் ஞாபகம் வரு கிறது. ஆச்ரமத்தில் சில சமயம் எல்லோ ருக்கும்- பகவானைச் சேர்த்து - வயிறிளக்கக் கொடுப்பார்கள். ஏதோ சில வேர்கள், இலைகள் எல்லாம் சேர்த்துக் காய்ச்சப்பட்டுக் கஷாயமாக தயாரிக்கப்பட்டிருக்கும். அது எல்லோருக்கும்

வினியோகிப்பதில் பகவானுக்குத் தனி அக்கறை. T.P.R. (ராமச்சந்திரய்யர்) ஒரு சமயம் என்னிடம் சொன்னார். அவர் சென்னையில் வழக்கறிஞராக வேலை பார்த்து வந்தார். அக்காலத்தில் அங்கிருந்து திருவண்ணா மலைக்கு பஸ் வசதி கிடையாது. அதனால் அவர் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் இரவு ரயிலில் புறப்பட்டு ஆச்ரமம் வந்து இங்கிருந்து ஞாயிறு இரவு ரயிலில் திரும்புவார். ஒரு வெள்ளிக்கிழமை பகலிலும் இரவிலும் சாப்பிடாமல், சனிக்கிழமை காலை அகோரப் பசியுடன் ஆச்ரமம் வந்து சேர்ந்தார். ஹாலில் நுழைந்தவுடன் அவரை பகவான் முகமலர்ந்த புன்னகையுடன் வரவேற்று, நேரே சமைய லறைக்கு அனுப்பி வைத்தது. ஆனால் அங்கு அவரை எதிர்கொண்டதோ அந்தப் "பிரசித்தி" பெற்ற கஷாயமே. பகவான் தன்னை அனுப்பி வைத்ததால், T.P.R. அதனை உடனே விழுங்கி வைத்தார். திரும்பி நேரே பகவானிடம் வந்து, தன் "சோகக் கதை"யைச் சொல்லி அவர் சிரித்த சிரிப்பில் பகவானுடன் எல்லோரும் கலந்து கொண்டனர். அவையெல்லாம் பொன்னான நாட்கள்! எல்லாம் இன்பமயம்!

"அன்றாடம் வரும் தபாலை பகவான் கவனமாகப் படிக்கும். எல்லாவற்றுக்கும் அன்றைக்கே உடனுக்குடன் பதில் அனுப்பிவிட வேண்டும் என்பது மீறாத விதிமுறை. இவையெல்லாம் ஒழுங்குமுறை என்பதைத் தவிர பகவான் அடியாரிடம் செலுத்தும் பரிவும், கருத்தும் இதில் தெளிவாகின்றன. யாராவது பக்தர் குறிப்பிட்ட தேதிக்கு வரவிருப்பதாக எழுதியிருந்தால், பகவான் அதை நினைவில் வைத்திருந்து, அந்த நாளில் சம்பந்தப்பட்ட ஆட்களுக்கு நினைவூட்டிவிடும். ஒரு சமயம் சிலோனில் (ஸ்ரீலங்கா) இருந்து அடியார் ஒருவர் தான் ஆச்ரமத்துக்கு கொழும்பில் இருந்து இன்ன தேதிக்கு புறப்படுவதாகக் குறிப்பிட்டு எழுதியிருந்தார். ஆனால் எப்பொழுது திருவண்ணாமலை வந்து சேருவாரென்பதைக் குறிப்பிடவில்லை. அதனால் பகவான் என்னிடம், அகப்பட்ட ரயில், கப்பல் அட்டவணை எல்லாம் அலசிப் பார்த்து, கப்பல் சிலோனிலிருந்து புறப்படும் சமயம், தனுஷ்கோடியை அடையும்நேரம், சுமாராக திருவண்ணாமலைக்கு வந்து சேரக்கூடிய நேரம் ஆகிய தகவலெல்லாம் சேகரிக்கச் சொல்லியது. நான் அதையெல்லாம் கண்டு பிடித்து, அவர் திருவண்ணாமலை வந்து சேரும் நேரமும் தினமும் பகவானுக்குத் தெரிவித்த பின்னரே பகவான் அவரைப் பற்றிய கேள்விகளை நிறுத்தியது. குறை வற்ற பூரணம்! அந்த சிலோன் நண்பரிடம் பகவான் காண்பித்த கருணை என் கண் களைக் குளமாக்கியது. சில சமயம் சமைய லறையிலிருந்து பகவானுக்கும் அன்பர்களுக்கும் வினியோகிப்பதற்காக கொண்டு வரப் படும் தின்பண்டங்களைக் குரங்குகள் பிடுங்கிக்கொண்டு ஓடிவிடும். பகவான் குரங்குகள் தரப்பு வக்கீல்! நீங்கள் அஜாக்கிரதையாக இருந்தீர்கள். யாரைத் தண்டிப்பது? என்று பரிந்து வரும். ஒருநாள் சமையலறையிலிருந்து ஒரு பெரிய திறந்த பாத்திரத்தில் பட்சணங்கள் கொண்டு வந்து கொண்டிருந்தேன். பசு லக்ஷ்மி என்னைத் தொடர்ந்து பாத்திரத்திலிருந்த பட்சணங்களைத் தின்றுகொண்டே என்பின் வந்துகொண்டிருப்பதை நான் கவனிக்கவில்லை. பகவான் "போதும் லக்ஷ்மி போதும், எங்களுக்கும் கொஞ்சம் விட்டு வை" என்று சொல்லி, மேலும் அதற்குக் கொஞ்சம் பட்சணம் கொடுத்து அனுப்பி வைத்தது. தொண்டர்கள் என்னைக் கேலி செய்து, கோபித்ததும் பகவானுக்குக் கருணை பொங்கியது. "பாவம், அவர் கபடமற்றவர். இதையெல்லாம் கவனிக்க மாட்டார்" என்றது. குருநாதனின் திருவாக்கால் "கபடமற்றவன்" என்று மகுடம் சூட்டப்பெற்றேன். இவ்வாழ்வில் வேறென்ன வேண்டுமெனக்கு?"

(தொடரும்...

# அகத்தை மாற்றியபின் புறத்தைப் பார்

– செல்வி செ. ஜடா அவர்கள் –

இந்து சமயம் சனாதன சமயம். நாங்கள் "சிவம்" ஆவதற்கு இன்னும் எத்தனையோ படிகள் தாண்டவேண்டும். எமக்கு முந்தி முந்தி என்று பார்த்துக்கொண்டு போகப் போக அங்கே ஒன்றேயொன்று மட்டும்தான் இருந்தது. அதுவே பின்னர் பலவானது. திரும்பவும் அங்கு ஒன்றாக மாறுவதே இனி எமது முயற்சியாகட்டும். மாறும் முயற்சி சுலபமானதல்ல.

அறிவு வளர வளர அதனோடு கூட அகம்பாவமும் வளரும். அகம்பாவம் என்கின்ற இந்த Ego (Edging God Out) உடைக்கப்பட்ட பின்புதான் உள்ளேயுள்ளது "ஆத்மா" என உணரப்படும். எல்லோரும் ஆத்மாக்கள் என்பது இப்போது தெளிவாயிற்று. இதே ஆத்மா விரிந்து பரந்து இருக்கும் நிலையே "பரமாத்மா" என்பதும் புரிகிறது. இது எந்தளவுக்கு விரிந்துள்ளது என்பதை எமது ஊனக்கண்களால் பார்க்க முடியவில்லையே தவிர அதனை உணரமுடிகிறது.

படைப்பின் நோக்கம் விதம் விதமான பாதைகளில் வெவ்வேறு கோணங்களில் அதைப் பார்க்கவேண்டுமென்பது. இது ஒரு தனித்துவமான பார்வை. ஆனால் வெவ்வேறானதல்ல. ஒன்றிலிருந்தே பிரிந்து பிரிந்து திரும்பவும் ஒன்றாகுவது. இந்தத் தெளிந்த அறிவு ஞானமாகி அன்பே உருவாய் அன்பை விதைத்து ஒன்றாகிறது. வன்முறை இதற்கு எதிரானது. சாத்தான், பாவி, பாவம் என்பதெல்லாம் நாளாந்த வாழ்க்கையில் பாவப்பட்ட சொற்கள். இவைதான் இப்போது, "கர்மா" எனவும் கர்மாவே எம்மை மீண்டும் மீண்டும் பிறக்கச் செய்வதென்றும் புரியுமளவுக்கு ஞானம் ஏற்பட்டுள்ளது.

இப்போது ஞானத்துக்குக் கட்டுப்பட்டு சுயத்தின் பலத்தின் வாழும் முயற்சி நடந்து கொண்டிருக்கிறது. சனாதன தர்மமும் எல்லோரும் ஏற்கத்தக்க வகையில் வளர்ச்சியையும், மாற்றத்தையும் கண்டுள்ளது. ஆத்ம ஒருமைப்பாட்டைத் தவிர இங்கே பிரிவுக்கு இடமில்லை. புரிந்து கொள்ளும் தன்மை வலுத்திருப்பதால் எதுவும் நிராகரிக்கப்படுவதுமில்லை. சுயநலம் என்பது பிரபஞ்ச ரீதியானது. கடவுள் என்பதற்கு வேறு அடையாளம் தேவையுமில்லை. பரிணாம உந்தல். ஆன்மீக ஞானத்தை அறியும்படி செய்ததுமல்லாமல் அன்பினால் அதை அனுபவிக்கவும் செய்துள்ளது.

ஆன்மீகமாக வாழ்வது எப்படி? என்ற கேள்வி எழக்கூடும். நின்றும், இருந்தும், கிடந்தும், நடந்தும் என்றுமே சுயத்தைப் பற்றிய சிந்தனையோடு இனி வாழ்தலே முறையானது. சிந்தனைக்கேற்ற சூழலை அமைக்க முதலில் "வீடு" கோயிலாதல் வேண்டும். இல்லங்களில் தெய்வீக அலைகள் அதிர்வுகள் நிறைந்திருக்கக் கூடியதாக அங்கே அமைதி, சாந்தம், சாந்நித்யம் நிலவ வேண்டும். வீடுகளுக்கு இப்படியான ஒழுங்குகளைக் கொண்டு வருவதில் பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபா அவர்கள் பெரிதும் முயற்சித்தவர். சிறுவர்களுக்கு ஆன்மீகப் பள்ளிகளும் வயது வந்தோருக்குப் பஜனை மண்டபங்களும் பூஜை ஒழுங்குகள், தியான ஒழுங்குகள் எல்லாமே நடைபெறுவதற்கு வழிசெய்துள்ளார்.

எந்தச் சந்தர்ப்பத்திலும் மனம் தடுமாறாதே.

இல்லங்களில் மனச் சமநிலையைக் கட்டிக்காக்குமளவுக்கு நாளாந்த வாழ்வில் அவர்களின் நடை, உடை, பாவனை, பேச்சு, செயல் எல்லாமே அமைவது வரவேற்கத்தக்கது. வீட்டில் வயது வந்த அங்கத்தவர்கள் மற்றவர்களுக்கு அறிவுரை கூறுவதோடு நின்றுவிடாமல் தாம் சொன்னவற்றை தம் வாழ்க்கையில் கடைப்பிடிக்கும் உதாரண புருஷர்களாக வாழ்ந்து காட்டவேண்டும்.

காலை, மாலை, பூஜைகள், பஜனைகள், வணக்கங்கள், வீட்டில் புனிதம் பேணப்படல் ஆகியவற்றை மற்றவர்களை எதிர்பார்க்காமலும், அவர்களை சீறிச் சினக்காமலும் தாமே செய்துவர இளையோரும் நாளடைவில் அவற்றைப் பின்பற்றுவர். கட்டாயப்படுத்திச் செய்தால் முரண்பாட்டில் முடியும்.

ஆத்ம சக்தி ஞானத்தாலும் தியானத்தாலும் விரிவு பெற்று அநாகத சக்கரத்தை ஆத்மா (Heart) அடையும் நிலையில் அன்பும், பக்தியும் மேலிடும். மனம் விழிப்பு நிலை, கனவு நிலை, ஆழ் உறக்கநிலை, தூய நிலை என்ற நான்கு நிலைகளிலும் இயங்குகின்றது. இந்த மனம் பற்றி எல்லாச் சமயங்களுமே சொல்லுகின்றது. ஆறுமுகமான முருகன் ஒரு முகமான தத்துவம். மன ஒருமைப்பாட்டைக் குறிக்கும் விழிப்பு நிலையும் கனவு நிலையும் கடந்தது ஆழ் உறக்க நிலை. இதுவும் கடந்த நிலை பரமாத்மாவுடன் ஒன்றிய துரியநிலை. நானே பிரம்மம் என்றுணர்ந்த பின் அதனைத் தக்க வைப்பதும் அதன் தூயநிலையைக் காப்பதும் இங்கே சொல்லப்பட்டது.

பாவம், அகம்பாவம் என்ற தன்மைகளிலிருந்து விடுபடுவது அகமாற்றம். கர்மாக்கள் எவை, எவை என அறிந்தபின் அவற்றைக் களைந்து சுயத்தை அறிய முற்படவேண்டும் உள்ளொளி கண்டோம் அதுவே ஆத்மா என்றுணர்ந்தோம். எல்லாமே பரிசுத்த ஆத்மாக்களாக பிரபஞ்ச மனதில் மலர்கின்ற போது அதுவே பரமாத்மாவாக விரிந்து வியாபித்துள்ளதை உணர்ந்தோம். இந்த அகமாற்றம் கர்மா மேற்கொண்டு உள்நுழைவதைத் தடுக்கும் அங்கியாகக் கொண்டால் அதன் நுழை பாதை மூடப்பட்டுவிடும்.

எதனை விதைக்கின்றோமோ அதனையே அறுவடை செய்கின்றோம். செயலுக்குத் தக்க விளைவை அனுபவித்துத்தான் ஆகவேண்டும். கர்ம விதைகள் இல்லை என்றால் பிறவியும் இல்லை.

எல்லாவற்றுக்கும் ஆதியும் முதலும் ஒன்றே. ஒன்றிலிருந்தே உற்பத்தி தொடங்கியது. இது எப்பவோ நிருபணமாகிவிட்டது. இது பற்றி விஞ்ஞானிகள் இப்போதுதான் அணுவிலிருந்து ஆராயத் தொடங்கியுள்ளனர். ஞானிகளின் உயிர்த்துவ உணர்வு காலத்துக்கும் அப்பாற்பட்டது. கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலர்.

மூச்சுப் பயிற்சி, ஞானம், தியானம் எல்லாமே பிராண சக்தியைக் கூட்டும். இதனால் சூடும், குளிரும் ஒழுங்குபடுத்தப்படுகிறது. நியூரோன்கள் சாவதில்லை. ஒழுங்காக பஜனை பிரார்த்தனைகளில் ஈடுபடுதலும், உண்ணும் போது பிரம்மார்ப்பணம் செய்தலும் யோக சாதகர்கள் கடைப்பிடிக்கவேண்டியவை. ஆத்மீக நிலையில் உச்சக்கட்டத்தை அடைந்தாலும், அன்பினால் மற்றவர்களுக்கு சேவை செய்தலும் அவசியமானதே. தனது படைப்பு வியக்கத்தக்கதாக இருக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் எனக்குள்ளால் தனது படைப்பைப் பார்த்தபடியே உள்ளது. எனவே எதைச் செய்யும்போதும் அங்கே தெய்வீக உணர்வு வெளிப்பட வேண்டும். துளசி மாலை, உருத்திராட்ச மாலை, படிகமணி மாலை ஆகியவற்றை முறைப்படி அணிதல் பிராண சக்தியைக் கூட்டுவதோடு சக்கரங்களையும் சுத்தப்படுத்தும். இவை ஒருவருடைய ஆளுமையை வெளிப்படுத்துவதாக அமையும். எல்லா நிலையில் உள்ளவர்களுக்கும் இந்து

**பொறுமை சொர்க்கத்தின் திறவுகோல்.**

சமயம் இடமளிக்கின்றது. எத்தனையோ பிறவிகளைத் தந்து படிப்படியாக பிரம்மம் தன்னைக் காட்டியது கடவுள் இருக்கிறாரா என்ற கேள்விக்கு விடை காண வைத்தது. இதுவும் பரிணாம உந்துதலாலேயே உள்ளுணர்வு எப்போது வேலை செய்யத் தொடங்கியதோ அப்போதிருந்தே பரிணாமம் உங்களைச் சும்மா இருக்க விடாது. ஜீவப் பிரம்மம் ஐக்கியமாகும்வரை உங்கள் முயற்சி தொடர்ந்தவண்ணமிருக்கும்.

# ஆசைப்படு

உலகில் உத்தமனாகி
உழைத்து வாழ ஆசைப்படு
பலவித கல்வி கற்று
கற்றாங்கொழுக ஆசைப்படு
அடிதடி ஏதுமில்லா
அமைதி வாழ்விற் காசைப்படு
கடிதென வந்து மற்றோர்
கவலை தீர்க்க ஆசைப்படு
பொறாமை அகற்றி நீயும்
புகழ் பெற்று வாழ ஆசைப்படு
கறாராய் நின்று கணக்கு
காட்டிடவே ஆசைப்படு
பெற்றோர்க்கு மனம் மகிழும்
பிள்ளையாக ஆசைப்படு
மற்றோர்க்கு மகிழ்வு தரும்
மனிதனாக ஆசைப்படு
ஆலயம் சென்று
அமைதிபெற ஆசைப்படு
மாலயனும் தேட நின்ற
மகேசனருளுக் காசைப்படு
செய்யும் தொழிலே தெய்வமென்று
நினைத்து வாழ ஆசைப்படு
பொய்மை அகற்றி வாழ்ந்து
புகழ் பெறவே ஆசைப்படு
நாட்டிற்கு நன்மை செய்யும்
நற்பிரஜையாக ஆசைப்படு
மீட்டிவ்வுலகில் வந்து
பிறவி பெறாது ஆசைப்படு
ஆசைப்படு ஆசைப்படு
அளவோடு ஆசைப்படு
அளவோடு ஆசைப்பட்டு
வளம் பெறவே ஆசைப்படு.

– யூ.பி. ஆனந்தம் –

**கோபம் அறிவைக் கெடுக்கும்.**

(கட்டுரைத்தொடர் - 02

# சித்தர்களின் ஞானம்

– திரு சிவ மகாலிங்கம் அவர்கள் –

## 01) சித்தர்களின் கடவுட் கொள்கை

சித்தர்களின் கடவுட் கொள்கை தெளிவானது திட்டவட்டமானது. இவர்கள் கடவுள் இல்லை என நாத்தழும்பேறக் கூறும் நாத்திக வாதிகள் அல்லர். தவயோகி திருமூலநாயனார் கூறுவதுபோல "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற கோட்பாட்டினை உடையவர்கள். "ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு" என்றே பட்டினத்தடிகளும் கூறுகின்றார்.

"ஒருவனென்றே தெய்வத்தை வணங்க வேணும்
உத்தமனாய் பூமி தனிலிருக்க வேணும்"

என்று அகத்தியரும் உலக மாந்தர்க்கு அறிவுரை கூறுகின்றார். பாம்பாட்டிச் சித்தரோ தெய்வம் உண்டு. அதனை வணங்க வேண்டும் என்பதுடன் நில்லாது இன்னும் ஒரு படிமேலே சென்று

"வீறு பெருங் கடவுளை எங்களுடனே
விளையாடச் செய்குவோமென்று ஆடு பாம்பே"

எனக் குறிப்பிடுகின்றார்.

சித்தர்களிடம் பன்மைத் தெய்வம் இல்லை; பகைமைக் கொள்கையும் இல்லை. எங்கள் தெய்வம், உங்கள் தெய்வம் என்ற பிரிவினையும் இல்லை. எல்லா இடமும் வியாபித்திருக்கும் தெய்வம் ஒன்றே என்ற கருத்தைச் சித்த புருஷராகிய சிவவாக்கியர் முன் வைக்கிறார்.

"எங்கள் தேவர் உங்கள் தேவரோ என்றிரண்டு தேவரோ
இங்குமங்குமாய் இரண்டு தேவரே இருப்பரோ
அங்கும் இங்கும் ஆகிநின்ற ஆதிமூர்த்தி ஒன்றலோ"

இறைவனை அறிவதற்கும் அடைவதற்கும் வேதங்கள், சாத்திரங்கள், ஆகமங்கள், தத்துவங்கள், தந்திரங்கள், புராணங்கள், மந்திரங்கள், சடங்குகள் மட்டும் உதவமாட்டாது. இவற்றை ஓதுவதால் மட்டும் இறைவனை அறியவும் முடியாது, அடையவும் முடியாது.

சாமம் நாலு வேதமும் சகல சாத்திரங்களும்
சேமமாக ஓதிலும் சிவனை நீர் அறிகிலீர்

-சிவவாக்கியர்.

அண்ட சராசரமெல்லாம் வியாபித்திருக்கின்ற பரம்பொருளாகிய இறைவனைப் பிண்டமாகிய தமது உடலிலே கண்டவர்கள் சித்தர்கள். இறைவன் குடிகொண்டிருக்கும் பொருள் கல்லும் செம்பும் அன்று. அகத்துறையும் அழகனாக இறைவன் நம் உள்ளே குடிகொண்டு இருக்கிறான். "உள்ளம் பெருங் கோயில் ஊனுடம்பு ஆலயம்" என்பது தான் சித்த புருஷர்களில் மூலவராகிய திருமூலரின் கொள்கை. "மனமது சுத்தமானால் மந்திரம் செபிப்பதுண்டோ" என்றே தாயுமானவரும் கூறுகின்றார். கோயில் குளங்களுக்குச் செல்வதாலோ, கங்கை, யமுனை, சரஸ்வதி, காவேரி, நர்மதா எனப் புண்ணிய தீர்த்தங்களில்

மூழ்கி எழுவதாலோ இறைவனை எய்திட முடியாது. மனத்தை மாசுபடாமல் வைத்துக் கொள்வதுதான் இறைவனை அடைவதற்குரிய வழி என்பதே சித்தபுருஷர்களின் சிந்தனையாகும்.

கோயிலாவது ஏதடா குளங்களாவது ஏதடா
கோயிலும் குளங்களும் கும்பிடும் குலாமரே
கோயிலும் மனத்துளே குளங்களும் மனத்துளே
ஆவதும் அழிவதும் இல்லை இல்லை இல்லையே

-சிவவாக்கியர்.

நாற்றமெடுக்கும் மீனை நல்ல நீரில் பலமுறை கழுவினாலும் அதன் நாற்றம் போவதில்லை. அதேபோலவே பிழையே செய்யும் இயல்புடையவர்கள் செய்த பிழையைக் கழுவுவதற்காக கோயில் கோயிலாகச் செல்கின்றார்கள். குளங்களில் மூழ்கின்றார்கள். எத்தனை கோயில் சென்றாலும் எத்தனை குளங்களில் மூழ்கினாலும் அவர்கள் செய்யும் பிழையின் பயன் நீங்காது. மீனின் நாற்றம் தொடர்ந்து இருப்பதுபோல பிழையின் பயனும் தொடர்ந்து இருக்கும்.

நாறு மீனைப் பலதரம் நல்ல தண்ணீரால்
நாளும் கழுவினும் அதன் நாற்றம் போமோ?
கூறும் உடல் பல நதியாடிக் கொண்டதால்
கொண்ட மலம் நீங்காதென்று ஆடு பாம்பே

-பாம்பாட்டிச்சித்தர் பாடல்.

மனிதனுக்கு இறையுணர்வு பெரும்பாலும் இயல்பாய் வருவதில்லை. வாழ்க்கையில் துன்பங்கள் ஏற்படும்போது அந்தத் துன்பங்களைத் தன்னால் தாங்கிக்கொள்ள முடியாத நிலையில் இறைவனை நினைப்பதுதான் இயல்பாக உள்ளது. உலகியலை நம்பி வாழும் வாழ்க்கை நிலையானதன்று. உலகியலில் மனிதன் பெறும் இன்பமும் அமைதியும் எல்லையுடையன. இறைவன் பால் அடைக்கலம் புகுதலால் ஏற்படும் இன்பத்திற்கும் அமைதிக்கும் எல்லை இல்லை.

"இலவு காத்திருந்த பட்சியே ஏங்கியே பறக்குமாப்போல்
உலகமே பொருளாய் நம்பி ஒருவன் அற்றாய் நீயே"

-கணபதிதாசர்.

நிலையான இன்பம் பெற வேண்டுமாயின் நிலையான பரம் பொருளையே பற்ற வேண்டும்.

பற்றுக்களுக்கெல்லாம் அப்பாற்பட்ட இறைவன்மேல் பற்று வைத்தால் உலகியல் பற்றுக்களை எல்லாம் விட்டொழிக்க முடியும்.

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு

-திருக்குறள்.

தமிழ்ச் சித்தர்கள் இறைவன் ஒன்று என்னும் கொள்கையை உடையவர்கள். அவன் குடிகொண்டிருக்கும் இடம் கல்லும் செம்பும் அன்று. தெய்வம் ஒன்று அது நம்முள்ளே இருப்பது. இதுவே சித்தர் இறைக் கொள்கை.

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்" என்பது திருமந்திரம். நட்ட கல்லைத் தெய்வம் என்று நாலு புட்பம் சாத்தியே சுற்றிவந்து முணு முணு என்று மந்திரம் சொல்வதில்

பயன் ஏதும் விளையாது. நாதன் உள்ளே இருக்கையில் நட்ட கல் எப்படிப் பேசும்? என்பது சிவவாக்கியரின் சீரிய வினா: நம் சிந்தனையைத் தூண்டித் துலக்கும் வினா?

நட்ட கல்லைத் தெய்வமென்று நாலு புட்பம் சாத்தியே
சுற்றி வந்து முணு முணு என்று சொல்லு மந்திரம் ஏதடா
நட்ட கல்லும் பேசுமோ நாதன் உள்ளிருக்கையில்
சுட்ட சட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ

-சிவவாக்கியர்.

"கண்டதே காட்சி கொண்டதே கோலம்" என்று வாழும் வாழ்க்கை பயனற்றது. எல்லாம் வல்ல எங்கும் நிறைந்த இறைவனை மனமொழி மெய்களால் போற்றவேண்டும். அன்பு, இரக்கம், தொண்டு ஆகியவற்றைக் கொண்டவர்கள் வாழ்வே சிறந்தது. இவையே சித்தர் பின்பற்றிய நெறிகள். உலகிற்கு உணர்த்திய நெறிகள்.

சிவவாக்கியர் "இலக்கணம் இல்லாத இறைவனை என்னவென்று சொல்வது? என்றும் மின்னோடு மின் கலந்ததுபோல், என் உள்ளத்தில் ஈசனும் யானும் கலந்து விட்டோம் என்று பாடுகின்றார்.

என்னவென்று சொல்லுவேன்
இலக்கணம் இலாததை
மின்னகத்தில் மின் ஒடுங்கி
மின்னாத வாறு போல்
என்னகத்துள் ஈசனும் யானும்
அல்லது இல்லையே!

என்னுள்ளே அந்தர்யாமியாக நிறைந்திருக்கும் இறைவனை யான் அறிந்த பின்பு அதனை வேறு யார் அறிய வல்லவர் என வினாவுகின்றார்.

என்னிலே இருந்த ஒன்றை
யான் அறிந்து கொண்டபின்
என்னிலே இருந்த ஒன்றை
யாவர் காண வல்லரோ

நமது மக்களில் சிலர் தலயாத்திரை, தீர்த்த யாத்திரை செய்வதால் எம்முடைய வினைப் போகங்களை நீக்கலாம் என நம்புகின்றார்கள். ஆனால் சித்த புருஷராகிய சிவவாக்கியர் தீர்த்தம் என்பது வெளியே இல்லை. உள்ளத்தின் உள்ளேதான் உள்ளது என்கிறார். சிவமூல மந்திரமாகிய அஞ்செழுத்து மந்திரமே தெளிந்த தீர்த்தமாக அகத்திலே உள்ளது என்பதைச் சிவவாக்கியரின் பின்வரும் பாடல் தெளிவாக விளக்குகின்றது.

தீர்த்தம் ஆட வேணுமென்று தேடுகின்ற தீனர்காள்
தீர்த்தம் ஆடல் எவ்விடம் தெளிந்து நீர் இயம்புவீர்
தீர்த்தமாக உம்முள்ளே தெளிந்த நீர் இருந்தபின்
தீர்த்தமாக உள்ளதும் சிவாய அஞ்செழுத்துமே

மனத்திலே தூய்மை இல்லாமல் அகத்திலே இறையுணர்வு ஏற்படாமல், இறைவன்பால் இறவாத இன்ப அன்பு அகத்திலே ஊற்றெடுக்காமல் கோயில்களைத் தேடியும் தீர்த்தங்களை நாடியும் ஓடித் திரிவதால் பயன் ஏதும் ஏற்படாது எனப் பாம்பாட்டிச் சித்தர் கூறுகின்றார்.

**சத்தியம்தான் கடவுள், ஒளிதான் அவரது நிழல்.**

1) “காடு மலை நதி பதி காசி முதலாய்க்
கால்கடுக்க ஓடிற்பலன் காணலாகுமோ”
2) “பூசை செய்ததாலே சுத்த போதம் வருமோ?
பூமி வலஞ்செய்ததனாற் புண்ணியம் உண்டோ?”
3) ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு இங்கு எய்திடாது போல்
எண்திசை திரிந்துங் கதி எய்தல் இலையே”
4) நாட்டுக்கொரு கோயில் கட்டி நாளும் பூசித்தே
நாதன் பாதம் காணமுடியவில்லையே!”

அன்போடு உருகி அகம் குழைந்து வணங்கினால் தான் இறையருள் அகத்திலே பிரகாசிக்கும். கள்ளப் புலன்களை ஞானப் புலன்களாக மாற்றினால்தான் இறையருளைப் பெற முடியும். சிறிதளவேனும் அகத்தில் அன்பில்லாதவர்கள் முத்திப்பேற்றினை அடைய முடியாது.

எள்ளளவும் அன்பகத்தில் இல்லாதார் முத்தி
எய்துவது தொல்லுலகில் இல்லை; எனவே
கள்ளப் புலன் கட்டறுத்துக் கால காலனைக்
கண்டு தொழுதே களித்து ஆடுபாம்பே
-பாம்பாட்டிச் சித்தர்.

அகத்தில் தூய அன்பு உடையோரே முத்தி எய்த முடியும். இறைவனைக் கண்டு தொழுது களிக்க முடியும்.

அன்பெனும் நன்மலர் தூவிப் - பர
மானந்தத் தேவனின் அடியினை மேவி
இன்பொடும் உடன்றுட லாவி - நாளும்
ஈடேற்றத் தேடாய் நீ இங்கே குலாவி

என்பதே கடுவெளிச் சித்தர் மனதிற்கு இடும் அன்புக் கட்டளை ஆகும்.

வைதிகச் சமயச் சார்புடைய கருத்துக்களை மறுத்துச் சித்தர்கள் தமது கருத்துக்களை எடுத்துக் கூறியுள்ளார்கள். வேத மரபுகளின் மேலாதிக்கத்தினைச் சித்தர்கள் மறுத்துக் கூறினாலும் இறைவன் உண்டு என்ற கொள்கையினின்றும் அவர்கள் வேறுபடவில்லை. வைதிக மதக் கொள்கைகள் பலவற்றை எதிர்க்கும் சித்தர்கள் தங்களை நாத்திகர்கள் என்றோ உலகாயதர்கள் என்றோ வெளிப்படையாகக் கூறவில்லை. கடவுள் அன்பர்கள் போலவே காட்சியளிக்கின்றனர்.

இறைவன் மனிதனின் புறக்கண்களுக்குப் புலனாகும் வண்ணம் ஸ்தூலமாக எங்கும் இருக்கவில்லை. அகக் கண்களுக்கு மட்டுமே புலனாகும் வண்ணம் சூக்கும வடிவில் இருக்கிறான். சூக்கும வடிவில் இருக்கும் ஒன்றினை நமது ஊனக் கண்ணால் காண இயலாது; உணரத்தான் முடியும். இந்த உலகம் அதில் காணப்படும் ஓசை, அசைவு, சக்தி என்ற நிலைகளில் இறைவனை உணரமுடியும் என்கிறார் அகப்பேய்ச் சித்தர்.

இந்த உலகில் முதலில் தோன்றிய நீர், நிலம் முதலிய அனைத்தும் இறைவனால் படைக்கப்பட்டவை என்கிறார்.

பராபரமானதடி அகப்பேய்
பாவையாய் வந்ததடி!
தராதலம் ஏழ்புவியும் அகப்பேய்
தானே படைத்ததடி

-அகப்பேய்ச் சித்தர்.

இறைவன் செவிப்புலனால் உணரக்கூடிய ஓசையாக, நாதமாக நிறைந்திருக்கிறான். நாதத்துடன் இணைந்திருக்கக்கூடிய நடனத்தில் இருக்கிறான். அதாவது அசைவில் இருக்கிறான். அசைவில் பெறப்படும் சக்தியாக இருக்கிறான்.

நாத வேதமடி அகப் பேய்
நல்நடம் கண்டாயோ
பாதம் சக்தியடி அகப்பேய்
பரவிந்து நாதமடி

-அகப்பேய்ச் சித்தர்.

இறைவன் அனைத்திற்கும் மூலமாக நின்று பிரபஞ்சத்தை இயக்குகின்றார். எனவே கனவு, நனவு, உறக்கம், துரியம் என நான்கு நிலைகளைக் கடந்து நிற்கின்றான். புலன்கள் செயற்பட இயலாத பாழ்வெளியில் மூல சக்தியாக நிற்கிறான் இறைவன். “துரியம் கடந்த பரநாத மூலத் தலத்து முளைத்த முழு முதலே” எனக் குமரகுருபரர் இந்நிலையினைக் குறிப்பிடுகின்றார். துரிய நிலையை அதாவது பிரக்ஞை செயல்படக்கூடிய புலன்கள் செயல்படாத நிலையை உயிர்கள் அடைய வேண்டும் என்று அகப்பேய்ச் சித்தரும் குறிப்பிடுகின்றார்.

நாலு பாதமடி அகப்பேய்
நன்னெறி கண்டாயே
மூலமான தல்லால் அகப்பேய்
முத்தி அல்ல வடி

மனிதன் மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐந்து புலன்களைக் கொண்டுதான் இயங்குகின்றான். எனினும் இவை நிலைபேறுடையனவல்ல. இவையனைத்தும் காரியங்கள். இவற்றுக்கு மூலமான காரணம் ஒன்றுண்டு; அதுதான் நிரந்தரம்; காரணமாக நிறைந்திருப்பதுதான். இறைவன் எனக் கூறுகின்றார். இறைவன் என்பதே ஆனந்தம் மகிழ்ச்சி என்ற கருத்து அகப்பேய்ச் சித்தரிடம் காணப்படுகிறது.

இறைவன் என்றதெல்லாம் அகப்பேய்
எந்த விதமாகும்
அறைய நீ கேளாய் அகப்பேய்
ஆனந்தமானதடி

-அகப்பேய்ச் சித்தர்.

தன்னை அறிந்தால் தான் தலைவனாகிய இறைவனை அறியலாம். “தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை” என்பது திருமந்திர வாக்கு. தன்னிலை உணர்தலால் கிடைக்கும் அறிவே உண்மையான அறிவு ஆகும். பிரக்ஞை பூர்வமாக, தான் இதனைச் செய்கிறேன் என்ற உணர்வே இல்லாமல் இறைவனுடன் கலக்க வேண்டும். இத்தகைய அறிவின்றி பிற அறிவுகள் எல்லாம் பயன்படாத பேயறிவு என்கிறார் அகப்பேய்ச் சித்தர்.

தன்னை அறியவேணும் - அகப்பேய்
சாராமல் சாரவேணும்
பின்னை அறிவதெல்லாம் - அகப்பேய்
பேயறிவு ஆகுமடி

-அகப்பேய்ச் சித்தர்.

மெய்யறிவால் இறைவனை அடைந்த பிறகு புறவுலக நீர்மைகள் பொருளற்றுப் போகின்றன. இது இயல்பான ஒன்றுதான். ஆனால் ஓர் உயர்ந்த மனநிலையில் எதையுமே விரும்பாத நிலை. உண்மை இறைவிருப்பு உயிர்கட்கு ஏற்படுகின்றது. திருநாவுக்கரசரின் மெய்யுணர்வை விளக்கும் சேக்கிழார்

“கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிடலேயன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்”

எனப் பெரியபுராணத்தின் திருக்கூட்டச் சிறப்பில் குறிப்பிடுகின்றார்.

பக்தியின் தொடக்கத்தில் முத்தி, வீடுபேறு என்பன நோக்கங்களாக இருக்கலாம். ஆனால் பக்தியில் முதிர்ச்சி ஏற்பட வீடுபேற்றினை வேண்டி நிற்பது கூடப் பொருளற்றதாகி விடுகிறது. ஏனெனில் வேண்டுதல், வேண்டாமை இல்லாத இறைவனை வணங்கும் மனிதனும் வேண்டுதல், வேண்டாமை இல்லாதவனாக மாறுகின்றான்.

மோட்சம் வேண்டார்கள் அகப்பேய்
முத்தியும் வேண்டார்கள்
தீட்சை வேண்டார்கள்
சின்மயமானவர்கள்

என்று கூறுகின்றார் அகப்பேய்ச் சித்தர்.

(தொடரும்...



# கல்கி அவதார மகிமை

– திருமதி பரமேஸ்வரி நடராஜா அவர்கள் –

அவதார மகிமைதனை இந்த
அவனிக்கு அறியத்தரவே
சிவனவன் என்சிந்தை தூண்டினான்
சிவ சுதனே கணபதியே காப்பு

உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கு அரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

உலகில் தர்மம் குன்றி அதர்மம் தலையெடுக்கும் போதெல்லாம் இறைவன் மனிதனாக அவதரித்துத் தர்மத்தைக் காப்பதே அவதாரத்தின் நோக்கமாகும். "அவதாரம்" என்றால் மேலிருந்து கீழே இறங்கி வருதல் என்பது பொருளாகும். அதாவது இறைவன் தன்நிலையிலிருந்து இறங்கி மனிதனாக மனிதரிடையே தோன்றி வருதல் ஆகும்.



அதர்மம் அதிகரித்துத் தர்மம் குன்றும் போது உலகில் துன்பம் பெருகி வாழ்வில் குழப்பம் மலிந்து சோகமும் துயரமும் அதிகரிக்கும் வாழ்க்கைப் பயணம் கஷ்டமாகின்றது. மக்கள் நிம்மதியின்றி அல்லல்பட்டுத் தவிப்பர். இந்நிலையில் இறைவனைத் தவிர வேறு யாராலும் காப்பாற்ற முடியாது என்ற நிலைக்குத் தள்ளப்பட்டு அந்த இறைவன் ஒருவனே தஞ்சமென்று தஞ்சமடைந்து கூவியழைக்கும்போது தஞ்சமடைந்த அடியவர்களைக் காக்கத் திருவுளம் கொண்டு இறைவன் இறங்கி வருகின்றான்.

முதல் ஒன்பது அவதாரங்களும் அவற்றின் வரலாறும் அவதார நோக்கமும் அற்புதங்களும் அதிசயங்களும் புராணங்கள், இதிகாசங்கள் கதைகள்மூலம் நாம் படித்தும் கேட்டும் அறிந்திருக்கின்றோம். இந்த அவதாரங்களின் மூலம் இறை நம்பிக்கை அதிகரிக்கின்றது. சத்தியம் தர்மம் நிச்சயம் வெல்லும் என்கின்ற நம்பிக்கை தோன்றுகின்றது. இதனால் அதர்ம வழியில் செல்ல மனிதன் அச்சம் கொள்கின்றான். ஒவ்வொரு மனிதனும் திருந்தி நடக்க முற்படுகின்றான். அப்போது உலகில் தர்மம் தலையெடுக்கத் தொடங்குகின்றது. அல்லவை

அழிந்து நல்லவை வல்லமை பெறுகின்றன. இதுவே முன்னைய ஒன்பது அவதாரங்களின் மூலம் நாம் அறிந்து கொண்ட உண்மை களும் அவதாரத்தின் சாராம்சமுமாகும்.

பத்தாவது அவதாரமான கல்கி அவ தாரம் பற்றி அறிய எந்த ஆதாரமும் கிடைக் காததால் இந்த அவதாரத்துக்கான புராணங் களோ கதைகளோ அறியப்படாததால் இந்த அவதாரம் மர்மமாகவே உள்ளது. இந்த அவதாரம் கையில் வாளேந்தி வெள்ளைப் புரவியில் அமர்ந்திருக்கும் மனிதனுடைய வடி வில் தோன்றும் என்பது உலகில் நிலவும் கருத்தாக உள்ளது.

கல்கி என்றால் கல்வி, ஞானம் என்பது பொருளாகும். மனம் என்னும் குதிரை வெண் புரவியான பஞ்சகல்யாணியைச் சித் தரிப்பதாகும். ஐம்புலன்களையும் அடக்கியாள வல்ல மனம். கள்ளம் கபடமற்ற தூய வெண்மையான வெள்ளை மனமாகும். கையில் ஏந்திய வாள் மாயை ஆகிய திரையைக் கிழித்து ஞானமாகிய மெய்யறிவை ஊட்டும் ஞானாயுதம் ஆகும்.

முன்னைய ஒன்பது அவதாரங்களி லும் அந்தந்த அவதாரத்துக்கான நாமங் களும் ரூபங்களும் தரித்து வந்து உலகில் தர்மத்தை நிலைநாட்டி அமைதியான வாழ்க் கைக்கு வழிகாட்டினான். ஆனால் பத்தாவது அவதாரமான கல்கி அவதாரமோ ஒவ்வொரு மனிதனும் தனக்குள்ளேயிருக்கும் இறை வனை உணர்ந்துகொள்ளும் ஓர் அபூர்வமான சக்தியாகும்.

புலன்வழிச் செல்லும் மனத்தை அடக்கி இறையுணர்வை மேலோங்கச் செய்து இறைவனின் குணங்களை அவனது தன் மையை உணர்ந்து கொள்ளும் அபூர்வ சக்தியாகும். முன்னைய அவதாரங்களின் வாழ்க்கை முறையும் அவர்களின் வேத வாக் கியங்களும் இறையுணர்வைத் தூண்டக் கூடிய சக்தி வாய்ந்தவையாகும்.

இறையுணர்வில் தோய்ந்து தர்மத்தின் வழி வாழ முயற்சிப்பதே துன்பத்தினின்றும் விடுதலை பெற்று அமைதியாக வாழ்வதற் கேற்ற வழிமுறையாகும். ஐம்பூதங்களாலான இந்த உடம்பு எனும் ரதத்தில் மனமாகிய வெண்புரவியைப் பூட்டி அந்தக் குதிரையை நல்ல வழியில் சரியான பாதையில் செலுத் தும் சாரதியாக இறைவன் உள்ளிருந்து வழி நடத்துகின்றான். இறைவனின் கருத்தறிந்து அவன் வேத வாக்கின்படி மனமாகிய குதிரை செல்லும்போது அங்கே சாந்தமும் அமைதி யும் நிலவுகின்றது. பயணம் சுகமாகின்றது. அவாவினால் உந்தப்பட்ட மனம் குறுகிய கால முன்னேற்றம் கருதி இறைவனைப் பின் தள்ளி முன்னே செல்ல முயலும்போது அதர் மம் தலையெடுக்கின்றது. அங்கே குழப்பமும் அமைதியின்மையும் அதிருப்தியும் தோன்று கின்றது. இதனால் பாதை தவறிச் செல்லும் மனத்தால் அழிவுகள் ஏற்படுகின்றது.

வாழ்க்கை என்னும் புனிதப் பய ணத்தை நாம் சுகமாக ஆனந்தமாகப் பய ணிக்க இறைவன் காட்டிய வழியில் மனத் தைச் செலுத்திப் பயணத்தை மேற்கொள் வதே சிறந்த வழியாகும். நாம் ஒவ்வொரு வரும் அடுத்தவர்கள் எப்படி வாழ்கின்றார்கள் அவர்களிடம் உள்ள குறைகள் என்ன? என் பதை ஆராய்வதில் காலத்தை வீணாக்காமல் எமது குறைகளை ஆராய்ந்து நாம் திருந் தினால் உலகம் திருந்தும் என்ற பூரண நம்பிக்கையோடு இறைவனையும் அவன் வேத வாக்கியங்களையும் மனதில் இறுகப் பற்றிக்கொண்டு இந்த உடம்பையும் மனத்தை யும் அவன் கருவியாகக் கொண்டு நமது வாழ்க்கைப் பயணத்தைச் சுகமான பயண மாக ஆக்கிக் கொள்வோம். இந்நிலை சித் திக்கப் பெற்றால் நாம் ஒவ்வொருவரும் அவதாரங்களே.

தன்னில் இறைவனைக் காண்பதும் இறையுணர்வில் வாழ்வதும் வேதங்களின்

**புகழ்ச்சி எப்போதும் இனிமையானது.**

இறுதி முடிவான வேதாந்த கலாச்சாரமாகும். இறைவன் ஒருவனே. அவன் அங்கிங்கெனாத படி எங்கும் நிறைந்துள்ளான். இதற்கு தூணி லும் இருப்பான் துரும்பிலும் இருப்பான் என் னும் கூற்றே சான்று. எல்லா உயிர்களிலும் இறைவன் வாழ்கின்றான் என்பதை உணர்ந்து உயிர்களுக்கு ஊறு செய்யாமல் எல்லாரிட மும் அன்புபூண்டு எல்லா உயிர்களையும் நேசித்து வாழ்வதே அமைதிக்கான வழி யாகும். இதுவே கல்கி பகவான் நமக்கு உணர்த்தும் நல்ல கருத்து மிக்க உயர் கல்வியாகும். இதை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்து புரிந்து வாழ்வில் கடைப்பிடித்து வாழ்ந்து உலகில் சாந்தியையும் அமைதியை யும் நிலைநாட்ட எல்லாம்வல்ல இறைவன் நல்லருள் நம் எல்லோருக்கும் கிடைப்பதாக.


எல்லாம் அவன் செயலே

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

# நீங்கா நினைவில்...



**சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண் பாட்டுப் பேரவையில் இடம்பெற்றுவரும் வாராந்த நிகழ்வுகளுக்கெல்லாம் சிறந்த முறையில் நிகழ்ச்சிகளை வழங்கியவரும், பண்பாளரு மாகிய விகடகவி மு. திருநாவுக்கரசு அவர்கள் மறைந்ததையிட்டு அவரது ஆத்மா சாந்தியடை யப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரி வித்துக் கொள்கின்றோம்.**



**சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் நித்திய அன்னப்பணிக்கு பேருதவி புரிந்தவரும், பேராசிரியருமாகிய வி. சிவசாமி அவர்கள் பல்கலைக் கழக மாணாக்கர்களை சிறந்த முறையில் கரையேற்றிய தோடு, சிறந்த விரிவுரையாளருமாக விளங்கிய அவர் மறைந் ததையிட்டு கல்விச் சமூகமே சோகத்தில் ஆழ்ந் திருப்பதோடு நாமும் அவரது ஆத்மா சாந்தி அடைய சந்நிதி வேற் பெருமானை வேண்டி நிற்கின்றோம்.**

-பேரவையினர்-

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் தொடர்ச்சி...

சிவசக்தி ஸ்ரோர்ஸ் வவுனியா 5மூடை அரிசி, 4புட்டி உ.உழுந்து, 1புட்டி கடலைப்பருப்பு

| | | |
|---|---|---|
| வைரமாளிகை | யாழ்ப்பாணம் | 5மூடை அரிசி |
| ச. லலீசன் | அச்சுவேலி | 3மூடை அரிசி, 1புட்டி பருப்பு |
| மாரியம்மன் மோட்டோர்ஸ் | கோப்பாய் | தேங்காய் 1 டிராக்டர் |
| விஜிதா அரிசி ஆலை | அச்சுவேலி | 1மூடை அரிசி |
| ஆறுதிருமுருகன் குடும்பத்தினர் | யாழ்ப்பாணம் | 2மூடை அரிசி |
| மு. ஞானவேல் | சுழிபுரம் | 7000. 00 |
| J. சந்திரப்பிரகாஷம் ஆத்தியடி | பருத்தித்துறை | 5000. 00 |
| சிவதொண்டன் நிலையம் | யாழ்ப்பாணம் பொருட்கள் வகையில் | 25000. 00 |
| சாரங்கா நகை மாடம் | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| புதிய நதியா நகை மாடம் | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| ஸ்ரீ நதியா நகை மாடம் | யாழ்ப்பாணம் | |
| | 4மூடை அரிசி, 1புட்டி பருப்பு, 4புட்டி உருளைக்கிழங்கு, மரக்கறி | |
| A. சண்முகராசா | லண்டன் | 20000. 00 |
| சாந்தி புடவையகம் நவீன சந்தை | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| நா. தெய்வேந்திரம் குடும்பத்தினர் (இந்திரா கபே) நெல்லியடி | | 20000. 00 |
| Dr. பாக்கியநாதன் பொன்னையா வைத்தியசாலை கல்வியங்காடு | | 3000. 00 |
| சிவா பிரதேர்ஸ் | திருநெல்வேலி | 1மூடை அரிசி |
| அம்பிகாபதி பான்ஸ்கூட் | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| பார்த்தசாரதி ஸ்ரோர்ஸ் கஸ்தூரியார் வீதி | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| பெற்றா ஏசென்ஸ் | யாழ்ப்பாணம் | 2மூடை அரிசி, ஏசென்ஸ் வகை |
| ஸ்ரீரங்கன் | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| பொ. சந்திரமோகன் ஓசன்றேட்ஸ் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| V.S.B. பாலா | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| சுந்தரம் பிறதேர்ஸ் | அப்புத்தளை | 2மூடை அரிசி |
| திருமதி கௌசலா லோகானந்தன் | கோண்டாவில் | 2மூடை அரிசி 4200. 00 |
| திரு க.கு.க. மூலம் ராஜன் ஏஜென்சி | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| R.G | | 1மூடை அரிசி, 1புட்டி பருப்பு |
| ரூபா | | 1மூடை நாடு |
| மயூட்டல் | கொழும்பு | 1மூடை நாடு |
| மலாயன் கபே | யாழ்ப்பாணம் | 1மூடை நாடு |
| சிவா பிறதேர்ஸ் | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| மகாராணி | யாழ்ப்பாணம் | 2மூடை நாடு |
| E.S.P | யாழ்ப்பாணம் | 2மூடை நாடு |

| | | |
|---|---|---|
| மங்கை சில்க் | யாழ்ப்பாணம் | 2மூடை நாடு |
| வியாவில் ஐயனார் தேவஸ்தானம் | காரைநகர் | 4மூடை அரிசி |
| அம்பாள் றேடர்ஸ் | யாழ்ப்பாணம் | 2மூடை சம்பா, 20k அரிசி |
| S. நடேசன் குடும்பம் | கொழும்பு | 5000. 00 |
| நவரட்ணம் செங்கோடன் | கனடா | 15000. 00 |
| நாகலிங்கம் பரமானந்தமூர்த்தி | கனடா | 20000. 00 |
| வைரமுத்து ஜெயச்சந்திரா | ஊரிக்காடு | 5000. 00 |
| கி. சுரேந்திரன் குடும்பம் | லண்டன் | 5000. 00 |
| பார்வதி தங்கராசா | நீர்வேலி | 10000. 00 |
| இ. கார்த்திகேசுமூலம் வீரசிங்கம் பத்மசீலன் | கனடா (பத்தமேனி) | 10000. 00 |
| சி. விக்னராஜா | பத்தமேனி | 5000. 00 |
| சு. மதன் | அல்வாய் கிழக்கு | 2000. 00 |
| சி. பத்மநாதன் குடும்பம் | கொக்குவில் | 10500. 00 |
| சி. பத்மநாதன் | அரியாலை | 5000. 00 |
| க. ராஜ்குமார் | கொக்குவில் | 500. 00 |
| சி. சிவனேஸ்வரன் | தாவடி | 1000. 00 |
| ஸ்ரீ. சுபோசினி | லண்டன் | 1000. 00 |
| K. ஜெயச்சந்திரகுமார் | கொழும்பு | 1மூடை அரிசி |
| இ. டிலக்ஷன் | நோர்வே | 5000. 00 |
| K.S. கணபதிப்பிள்ளை | கைதடி | 2மூடை அரிசி 4000. 00 |
| திருமதி தில்லைநாதன் | அளவெட்டி | 1000. 00 |
| திருமதி S. ஸ்ரீனிவாசன்மூலம் மீனாட்சி முருகதாஸ் நினைவாக | கொழும்பு | 5000. 00 |
| ஸ்ரீ அஜித் | இடைக்காடு | 1000. 00 |
| ஜி. கவீனா | இடைக்காடு | 1000. 00 |
| சு. பாலசாந்தன் | அமெரிக்கா | 6000. 00 |
| த. ரேகன் V.M. றோட் | பருத்தித்துறை | 10000. 00 |
| சீ.சி. கந்தையா | ஆவரங்கால் | 5000. 00 |
| வீ. பரமநாதன் | கனடா | 5000. 00 |
| க. தேவதாஸ் | கொழும்பு | 1000. 00 |
| வீ. பரமகுருநாதன் | லண்டன் | 500. 00 |
| மு.நா. கனகராசா உயிலங்குளம் | மன்னார் | 500. 00 |
| க. அந்தூரியா | சங்கானை | 1000. 00 |
| சி. செல்வராசா | உடுப்பிட்டி | 2000. 00 |
| சி. கருணானந்தன் | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| பாபு வெதுப்பகம் | புன்னாலைக்கட்டுவன் | 4மூடை அரிசி |
| சி. கௌரி | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| சி. சிவானந்தன் குடும்பம் | யாழ்ப்பாணம் | 1000. 00 |

(தொடரும்...

# சின்னக் கதிர்காமம்

– திரு கு. சிவபாலராஜா அவர்கள் –

ஈழத்தில் வடக்கிலும் கிழக்கிலும் ஏனைய பிரதேசங்களிலும் பல முருகன் ஆலயங்கள் காணப்படுகின்றன. இவற்றுட் சில தலங்கள் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியவற்றில் சிறந்து விளங்குகின்றன. ஈழத் தின் முருக தலங்களில் கதிர்காமக் கந்தன் ஆலயம் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயம், நல்லூர்க் கந்தசுவாமி கோவில், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் கிழக்கிலங்கையில் மண்டூர் முருகன் ஆலயம், (தில்லை மண்டூர்), தாந்தாமலை முருகன் ஆலயம், உகந்தைமலை முருகன் ஆலயம், திருக்கோவில் சித்திரவேலாயுதர் ஆலயம், வெருகல் சித்திரவேலாயுதர் ஆலயம் (வெரு கலம்பதி), பேராதனை (கண்டி) குறிஞ்சிக் குமரன் கோவில், வன்னிப் பிரதேசத்தில் குமர புரம் சித்திர வேலாயுதர் கோவில் ஆகியன பிரசித்தி பெற்ற ஆலயங்களாக விளங்கி வருகின்றன.

இவற்றுள் இரண்டு ஆலயங்கள் "சின்னக் கதிர்காமம்" என்று அழைக்கப்படும் மரபு காணப்படுகின்றது. அவற்றுள் பிரசித்தி பெற்ற தொண்டைமானாறு செல்வச்சந்நிதி சிறப் பிடம் பெறுகிறது. அடுத்தது கிழக்கிலங்கை மண்டூர் என்னும் கிராமத்தில் அமைந்துள்ள தில்லை மண்டூர் முருகன் ஆலயமாகும். இவை இரண்டும் சின்னக் கதிர்காமம் எனப் பெயர்வரக் காரணமாய் அமைந்தது, அங்கு நடைபெறும் பூஜை முறையாகும். கதிர்காமக் கந்தன், ஆலயத்தில் பின்பற்றி வரப்படும் "வாய் கட்டிப் பூஜை செய்தல்" முறை இந்த இரு ஆலயங் களிலும் இன்றும் பின்பற்றப்பட்டு வருவது இதன் சிறப்பம்சமாகும். கதிர்காமக் கந்தன் ஆலயத்தில் பூஜை செய்வோரை "கப்புறாளை" என அழைக்கும் வழக்கம் இன்றும் உண்டு. எனவே அங்கு சைவ ஆகம முறைப்படி பூஜைகள் நடைபெறுவதில்லை. எளிமையான ஒரு "மௌனபூஜை" முறையே பின்பற்றப் பட்டு வருகின்றது. இத்தலம் வேடுவர்களால் வழிபடப்பட்டு வந்தது. வேடர் வழிவந்த கப்பு றாளை என்பவரே மௌனபூஜை செய்கிறார். ஏனைய கோயில் பணிகளையும் அவர்களே செய்து வருகின்றனர். வாயை ஈரத் துணி யினால் கட்டிக் (மூடிக் கட்டியபின்) கொண்டு மௌனமாக நின்று பூஜை செய்வர். இவ் வாறே எமது செல்வச்சந்நிதி ஆலயத்திலும் பின்பற்றப்பட்டு வருவது சிறப்பு. பூஜை முறை ஒற்றுமைகள் காரணமாக இத்தலம் "சின்னக் கதிர்காமம்" என அழைக்கப்படுவது மாத்திர மின்றி, கதிர்காமக் கந்தனுக்கும், செல்வச் சந்நிதி முருகனுக்கும் இடையே சிலவகை ஒற்றுமைகள் காணப்படுவதாகவும் கூறுவர். கதிர்காமக் கந்தனின் தீர்த்த உற்சவம் முடி வுற்ற பின்னர், முருகப் பெருமான் செல்வச் சந்நிதி ஆலயத்திற்கு வந்து உறைகிறார் எனக் கூறுவது மரபு. அத்துடன் கதிர்காமக் கரை யாத்திரை செல்வோரில் பெரும்பாலா னோர் செல்வச்சந்நிதி முருகனாலயத்தில் இருந்து தமது யாத்திரையை ஆரம்பிக்கும் வழக்கம் உண்டு. பல்வேறு முருக தலங்கள் வட இலங்கையில் இருந்தபோதும் செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் இருந்தே கதிர் காமக் கரை யாத்திரை ஆரம்பமாவது ஒரு தனிச்சிறப்பு மிக்க பெயரினை இவ்வாலயத் திற்கு வழங்குகிறது. சுற்றுச்சூழல், எளிமை யான தோற்றம், தொண்டைமானாறு தீர்த்தம், மாணிக்கப்பிள்ளையார் கோயில், சிறப்பான அன்னதானம், காவடிகள் முதலியன யாவும்

கதிர்காமக் கந்தனாலயத்தோடு ஒத்தவையாகக் காணப்படுகின்றன. சிறப்பாக இங்கு மூலஸ்தானத்தில் காணப்படும் வேலாயுதமானது கதிர்காமத்திலிருந்து கொண்டு வரப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆரம்பத்தில் பூசகர்களால் பூஜிக்கப்பட்டு வந்த இவ்வாலயத்தில் ஓர் அற்புதம் நிகழ்ந்ததாகக் கர்ணபரம்பரைக் கதையுண்டு. பூஜை செய்ய வந்த பூசகரை ஆலயத்தில் நாகபாம்பொன்று தடுத்து நிறுத்தியதாகவும், பூசகர் திரும்பிச் சென்று விட்டதாகவும் கூறப்பட்டுள்ளது. அதன் பின்னரே, தொண்டைமானாற்றில் மீன்பிடித் தொழில் செய்துகொண்டு நின்ற மருதர் கதிர்காமர் என்பவருக்கு முருகன் நேரில் காட்சி கொடுத்து - சிறுவன் வடிவில் - மீன்பிடித் தொழிலை விடுத்து தமக்குப் பூஜை செய்யுமாறு கேட்டுக் கொண்டார். பூஜை விதிமுறைகள் தனக்குத் தெரியாதெனக் கதிர்காமர் கூறவும், முருகப் பெருமான் மருதர் கதிர்காமரை கதிர்காமத்திற்கு அழைத்துச் சென்று, அங்கு நடைபெறும் பூஜை முறைகளை அவருக்குக் காண்பித்தார். அங்குள்ள வேலாயுதங்களில் ஒன்றினை எடுத்துச் சென்று சந்நிதி கோயிலில் வைத்து பூஜை செய்யுமாறும் முருகப் பெருமான் கட்டளை இட்டார். அதன்படி கொண்டு வரப்பட்டதே இக்கோயிலிலுள்ள வெள்ளிவேலாயுதமாகும்.

அடியார்கள் தங்குவதற்குப் பல மடங்கள் சந்நிதி கோவில் வீதிகளில் காணப்படுவது தனிச்சிறப்பாகும். கதிர்காமத்தில் முன்னர் பல மடங்கள் காணப்பட்டன. அவற்றுள் இராமகிருஷ்ண மடம் சிறப்பிடம் பெற்றுத் திகழ்ந்தது. இது தவிர சடையம்மா மடம் என்னும் ஓர் மடமும் முன்பு இருந்தது. தற்போது இவை அங்கு காணப்படவில்லை. இந்து விடுதி மற்றும் தனியார் விடுதிகள் பல இன்று அங்கு காணப்படுகின்றன. தெய்வயானையம்மன் மடத்தில் அன்னதான நிகழ்வு நடைபெறுகிறது. சந்நிதியில் இன்று பல மடங்கள் காணப்படுகின்றன. சந்நிதியான் ஆச்சிரமம் அடியார்களுக்கு அருந்தொண்டாற்றி வருகின்றது. எனவே கதிர்காமமும், சந்நிதியும் மடாலயச் சிறப்பு மிக்க தலங்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்புக்குத் தெற்கே சுமார் முப்பது கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ளதே "சின்னக் கதிர்காமம்" என அழைக்கப்படும் தில்லை மண்டூர் முருகன் ஆலயம். இவ்வாலயத்திற்கும் கதிர்காமத்திற்கும் நெருங்கிய தொடர்புகள் இருப்பது சிறப்புடையது. இயற்கையாக பல்வேறு இன மரங்களால் சூழப்பட்டுள்ள இக்கோவில், பண்டை நாளில் தில்லை மரக்காடுகளால் சூழப்பட்டுள்ளமையால் "தில்லை மண்டூர்" என சிறப்புப் பெயர் பெறும். மூலஸ்தானத்தில் உள்ள வேல் முன்னர் தில்லை மரம் ஒன்றில் காணப்பட்டது. கதிர்காம முருகன் ஆலயத்திற்கும் மண்டூர் முருகன் ஆலயத்திற்குமிடையே பூஜை, வழிபாடு முதலிய பல்வேறு வழிகளில் ஒற்றுமையுண்டு. பூஜை வேளையிலும் கூட மூலஸ்தானம் திரைச்சீலையால் மூடப்பட்டிருக்கும். திருவிழா முதலிய எல்லாச் சந்தர்ப்பங்களிலும் சுவாமி திரைச்சீலையால் மூடப்பட்டவாறே கொண்டு செல்லப்படுவார். கதிர்காமக் கந்தனின் தீர்த்தத் திருவிழா முடிந்த பின்னர் பத்தாம் நாள் மண்டூர் முருகனுக்கு கொடியேற்றம் நடைபெறும். இங்கும் கதிர்காமம் போல் மண்டூர் முருகனுக்கு நிலையான கொடித்தம்பம் இல்லை. அதற்காக நேரிய தடியொன்றை கொடிமரமாகப் பாவித்து அதில் கொடியேற்றுவர். கொடிமரத்திற்கு தினமும் பூஜை செய்வர். கதிர்காமத்தைப் போலவே இங்கேயும் திருக்கார்த்திகையன்று கார்த்திகைத் திருவிழா நடைபெறும். கார்த்திகைத் திருவிழாவும் சிறப்பானது. இங்கு பூசகர் "கப்புகனார்" எனப்படுவர். பூஜை செய்யும்போது வெண்துணியால்

**அன்பு இல்லாத மாளிகை இருண்ட குகை போன்றது.**

வாய்கட்டி, மந்திரம் எதுவும் சொல்லாது பூஜை செய்வர். இவ்வாலயத்தில் மூலஸ் தானத்தில் இருப்பது என்ன என்பது பரம ரகசியமாகவுள்ளது. கதிர்காமத்திலும் இப் படியே. இங்கும் (மண்டூரில்) திரை திறந்து பூஜை செய்யும் வழக்கம் இல்லை. இக் கோவிலுக்கும் வேடர்களுக்கும் தொடர்புண்டு. திருவிழாக் காலத்தில் வேடுவர்களில் ஒருவர் முருகனைக் காவல் புரியும் கடமையைச் செய்பவர்போல, வாய்க்குச் சீலைகட்டி, அம்பும் வில்லும் கொண்டு வைத்த கண் வாங்காமல் அடிமேல் அடி வைத்து வீதி வலம் வரும் காட்சி இன்றும் நடைபெறு கிறது. கதிர்காமத்தில் மாணிக்ககங்கை அமைந்துள்ளதுபோல, மண்டூர் முருகன் ஆலயத்தின் அருகே (தெற்கே) மட்டக்களப் பின் பிரபலம் பெற்ற மட்டுநகர் வாவி அமைந் துள்ளது. இதுவே இக்கோவிலின் பிரதான தீர்த்தமாகும். எனவே, சின்னக் கதிர்காமங் கள் இவை இரண்டும் முருகப் பெருமானின் அருட்கடாட்சத்தை அடியார்களுக்கு அள்ளி வழங்கி வருவது கண்கூடு.

## ஆதரித்தாளும் உமை மைந்தன்!

தொண்டைமான் ஆற்றங் கரைதனிலே - பக்தி
துலங்கும் நற் சந்நிதிப் பதியினிலே.
தண்டமிழ்க் கடவுளைக் கண்டுகொண்டேன்! - அவன்
தாள் பணிந்தே புகழ்ந் தேத்தி நின்றேன்!
கண் கண்ட தெய்வம் எம் கந்தனென்பேன்! - அவன்
கருணைக் கடலினில் மூழ்கி நின்றேன்!
பண்ணோடவன் புகழ் பாடிநின்றேன்! - பக்திப்
பரவசத்தில் ஆங்கு ஆடி நின்றேன்!
அண்டி வருகின்ற தொண்டர்க்கெல்லாம் - நல்ல
அன்பினைக் காட்டி அரவணைக்கும்.
தண்டாயுத பாணித் தெய்வமன்றோ? - இந்தத்
தரணியை வலம் வந்த வேலனன்றோ?
அன்னதானக் கந்தன் என்றுரைப்பார்! - பசி
ஆற்றி அருள் தரும் வள்ளலென்பார்!
நன்மைகள் செய்து நலந்தருவான்! - தன்னை
நாடிடுவோர் பிணி தீர்த்து வைப்பான்!
சூரனை வென்ற சுடர் வேலன்! - நல்ல
சுகங்களை நல்கும் சிவபாலன்!
தீரா வினை தீர்க்கும் மால்மருகன்! - தமிழ்த்
தெய்வமாய் விளங்கிடும் எழிற்குமரன்!
ஆறுபடை வீட்டில் அமர்ந்தகந்தன்! - பக்தர்
அல்லல் களைந்திடும் ஆறுமுகன்!
ஏறுமயில்மீது ஏறி வந்தே - எங்கள்
எண்ணங்கள் ஈடேறச் செய்வானவன்!
சுற்றவர மண்டபங்கள் அமைந்த - நற்
சுந்தரச் சூழலில் கோவில் கொண்டே
அற்புதங்கள் செய்யும் அன்பு முகன்! - எமை
ஆதரித்தாளும் உமையாளின் மைந்தன்!

-கி. குலசேகரன்-

# சங்கடம் தீர்க்கும் சனிபகவான்

– திரு க. ஜெயராமக்குருக்கள் அவர்கள் –

கிரகங்களில் ஈஸ்வரன் என்ற சிறப்புப் பெயருக்கு காரணமாகி நிற்பவர் சனீஸ்வர பகவான். பொதுவாக சனீஸ்வர பகவான் என்றாலே எல்லோரையும் ஆட்டிவைப்பவன் என்று பொருள்படும். ஆனால் தன்னை யார் சிரத்தையோடு வழிபடுகிறார்களோ அவர்களுக்கு கருணையை, நலத்தை அள்ளித்தரும் வள்ளல்த் தெய்வம் இவர்தான்.



சூரியனுக்கும் சாயாதேவிக்கும் மகனாகப் பிறந்த இவர் சாவர்ணி என்ற சகோதரனையும் பத்திரை என்ற சகோதரியையும் உடையவர். இவர் பூலோகத்திலே காசிக்குச் சென்று தன் பெயரால் சிவலிங்கத்தை நிறுவி பூசை செய்து வந்ததால் நவக்கிரகங்களில் ஒருவராக சிறப்புப் பதவியை அடைந்தார். சனீஸ்வர பகவான் ஒருசமயம் யமனின் கோபத்திற்கு ஆளாகி உதைக்கப்பட்டமையால் ஒரு கால் ஊன மானார். சனீஸ்வர பகவானுக்கு சித்திரதா எனும் தேவியை அவரது ஈடுபாடின்றி மணம் முடித்து கொடுக்கப்பட்டு அவளின் சாபத்தால் பார்வை வக்கிரமடைந்தது. இதனாலேயே சனீஸ்வரனின் பார்வை வக்கிரமானது.

ஆகமங்களில் சனீஸ்வரனுடைய உருவம் கரிய நிறமுடையவராகவும் கரிய ஆடை அணிபவராகவும் ஒருகால் முடமானவராகவும் இருகரம் கொண்டவராகவும் வலக்கரத்தில் தண்டமும் இடக்கரத்தில் வரத கஸ்தமும் உடையவர். பத்ம பீடத்தில் காக வாகனனாக காட்சியளிப்பார். எட்டுக் குதிரைகள் பூட்டிய இரும்புத் தேரில் பவனி வருவார். மெல்ல நடப்பவர் கருஞ்சந்தனம், கருமலர், நீலமலர், விரும்புவர். கருநிறக்குடை கொடி உடையவர். சனீஸ்வரனுடைய அதிதேவதை யமன், பிரத்யதிதேவதை பிரஜாபதி ஆவார்.

சனீஸ்வரனைப்போல கொடுப்பவரும் இல்லை கெடுப்பவருமில்லை. பிரியமான உலோகம்- இரும்பு, மணி- நீலம், தானியம்- எள், மலர்- கருங்குவளை, சுவை- கசப்பு. காசியபகோத்திர தோன்றலாவார். சனீஸ்வரனை வழிபட்டால் நீண்ட ஆயுளும் சிறப்பும் கிடைக்கும். சனீஸ்வரனுடைய மகன் குளிகன், குளிகை காலத்தில் எதனைச் செய்தாலும் நன்கு பெருகும். இறந்தவர்களின் உடலை இக்காலத்தில் எடுக்கக்கூடாது என்பது நியதி.

சனிபகவான் சிவபெருமானையே ஏழரை ஆண்டுகள் பீடித்திருந்தமையால் இறைவனாலேயே ஈஸ்வரன் எனும் சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டார். ஏழரைச் சனி என்பது அவரவர் நட்சத்திரத்திற்கு சனிபகவான் 12ஆம் இடஜென்மம், இரண்டாம் இடம் வரும்போது ஏற்படுவது, மரணபயம், இடம்மாறல், குடும்பப்பிரிவு, நஷ்டம், தொழில் நஷ்டம் என்பன ஏற்படலாம். அச்சமயம் சனீஸ்வரனுக்கு சாஸ்திர முறைப்படி எள்ளெண்ணை தீபம் ஏற்றி சனிக்கிழமை தோசம் விரதமிருந்து காகத்திற்கு உணவளித்து பூஜித்தால் நன்மை

பயக்கும். சனீஸ்வரர் திருக்கோயில் பிரசித்தமானது திருநள்ளாறு அநேகமாக சிவன் கோயில்களில் நவக்கிரக சன்னிதானத்தில் மேற்குப் புறம் நோக்கி இருப்பார். இவரை திருக்குட நீராட்டி நீல அல்லது கறுப்பு நிறப்பட்டுடுத்தி நீல மலரால் அர்ச்சிக்க வேண்டும். எள்தீபம் ஏற்றி வழிபடல் வேண்டும்.

சனீஸ்வர பகவானை ஒருவர் எவ்வளவுக்கு எவ்வளவு துதிக்கிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு துன்பத்திலிருந்து விடுதலை பெறுகிறார்கள். புரட்டாதி மாதத்தில் வரும் சனிக்கிழமைகளில் வழிபடுதல் கூடிய சிறப்பைத் தரும். நீண்டகால வாழ்வுக்கும் மரணத்திற்கும் காரணமானவர் இவரே. உலக அறிவு விருத்திக்கும் மொழியறிவுக்கும் காரணம் சனீஸ்வரனே இயந்திரங்களை கற்க, ஓட்ட திறமையும் ஆற்றலும் அளிப்பவர் சனீஸ்வர பகவான். இவ்வாறு சிறப்புப் பொருந்திய ஆயுள் காரணமாக சனீஸ்வர பகவானை வழிபட்டு எல்லா தோஷமும் நீங்கிச் சிறப்பாக வாழ்வோம்.

"யாவர்க்குமாம் இறைவர்க்கொரு பச்சிலை"

# விரைந்துமே தேடிப் போவீர்

சந்நிதி சென்று வந்தால்
சஞ்சலம் ஓடிப் போகும்
சந்தோ ஷம்வந் துசேரும்
சகலரும் கண்ட உண்மை
சிந்தையில் வேலனை நினைத்தால்
தினம்தினம் தருவான் நன்மை
விந்தையோ வியப்போ இல்லை
விரைந்துமே தேடிப் போவீர்

-வ. யோகானந்தசிவம்-

# குருபூஜை தினங்கள்

| | | | |
|---|---|---|---|
| டிசம்பர் | 12 கார்த்தி | 26 வெள்ளி | ஆறுமுகநாவலர் |
| டிசம்பர் | 15 கார்த்தி | 29 திங்கள் | மெய்ப்பொருளார் |
| ஜனவரி | 19 தை | 05 திங்கள் | நயினாதீவு முத்துக்குமாரசுவாமி |

பொறுமைசாலியே வெற்றி பெறுவான்.

# திருகோணமலை ஈன்றெடுத்த முதல் பெண்துறவி சுவாமி சிவானந்த சச்சிதானந்த சரஸ்வதி மாதாஜீ அவர்கள்

– பொ. கந்தையா (காந்தி ஆசிரியர்) அவர்கள் –

சிவபூமி, தட்சிண கைலாசம், பாடல்பெற்ற தலம் என்றெல்லாம் புகழப்படும் திருகோணமலையில் அவ்வப்போது மகான்களும் அறிவாளிகளும் தோன்றித் தொண்டுகள் செய்துள்ளார்கள். சைவப் பண்பாட்டுக் குடும்பத்தில் 1907ஆம் ஆண்டு மாசிமாதம் 8ஆம் திகதி பிறந்தார். தகப்பன் பெயர் நாகரத்தினம்பிள்ளை. தாய் பெயர் தங்கம்மாள். பிள்ளைத் திருநாமம் செல்வநாயகி.

தமிழிலும் ஆங்கிலத்திலும் கற்றுத் தேர்ந்து ஆசிரியையாகப் பலகாலம் பணி புரிந்தார். சமய அறிவைப் பெறுவதற்காகச் சமஸ்கிருதமும் கற்றார். ஆங்கிலத்திலும் தமிழிலும் சொற்பொழிவுகள் ஆற்றுவார்.

பொருட் செல்வமும், கல்விச் செல்வமும் வாழ்க்கையில் திருப்தி அளிக்கவில்லை. எனவே அருட்செல்வத்தைத் தேடினார். யாத்திரைகள் செய்தார். குருவைத் தேடினார். ரிஷி கேசத்தில் சிவானந்த ஆச்சிரமத்தை அமைத்து உலகம் முழுவதும் இந்துமதத்தைப் பரப்பும் மகரிஷி சுவாமி சிவானந்தரின் பாதங்களைச் சரணடைந்தார்.

சுவாமி சிவானந்தா செல்வநாயகி அம்மாவுக்கு சந்நியாசம் கொடுத்து சுவாமி சிவானந்த சச்சிதானந்த சரஸ்வதி என நாமமிட்டு ஆசீர்வதித்து இறைபணிக்கு ஆளாக்கி விட்டார். திகதி 1952 கார்த்திகை 7.

பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனி சிறந்தனவே என்ற பாரதி பாட்டுக்கமைய திருகோணமலையில் இறை பணியைத் தொடங்கினார். மாதாஜீக்கு உதவியாக ஸ்ரீமத் சுவாமி சச்சிதானந்த யோகிராஜ் அவர்களையும் சுவாமி சிவானந்தர் இலங்கைக்கு அனுப்பி வைத்தார்.

மாதாஜீ செல்வந்தக் குடும்பத்தில் பிறந்ததால் காணி பூமிகள் வயல்கள் ஏராளம் ஒரு பகுதிச் சொத்துக்களை விற்று உப்புவெளியில் பெரிய காணியில் பல கட்டிடங்களைக் கட்டி திவ்ய ஜீவன சங்கத்தையும் சிவானந்த தபோவனத்தையும் 1953இல் ஸ்தாபித்து சுவாமி சச்சிதானந்தரின் உதவியுடன் சமய சமூகத் தொண்டுகளைப் பெருமளவில் நடத்தினார்.

இருளில் இருக்கும் பிள்ளைகளை வெளிச்சத்துக்குக் கொண்டுவந்து விட்டார். மாணவர் இல்லத்துக்கு ஆண் பெண் பிள்ளைகளைச் சேர்த்து இல்லத்தைச் சிறப்பாக நடத்தினார்கள். மாணவர்களுக்குப் பாடசாலைக் கல்வியுடன் பல கைத்தொழில்களையும் பழக்கினார்கள்.

இலங்கையின் பல பாகங்களிலும் திவ்ய ஜீவன சங்கக்கிளைகளை நிறுவி சமய சமூகத் தொண்டுகளைச் செய்தார்கள். சமய சமூக வளர்ச்சிக்கான துண்டுப் பிரசுரங்கள் வெளியீடுகளைச் செய்தார்கள். குருபூஜைகள், சமய விழாக்கள் நடைபெற்றன. எல்லாச் சமயக் குருமார்களையும் போற்றி வழிபடும் குருபூர்ணிமாதினம் விமரிசையாகக் கொண்டாடப்படும். அன்னதானமும் நடைபெறும். வெள்ளிவிழாவும் நடந்து மலரும் 1978 மாசி 17இல் வெளியிடப்பட்டது.


மாதாஜீ பல யாத்திரைகளை மேற்கொண்டார்கள். கைலாசமும் போய்வந்தார்கள். சுவாமி இராமதாஸ் அன்னை கிருஷ்ணாபாய் சுவாமி சுத்தானந்த பாரதியார் சுவாமி பிரேமானந்தா சுவாமி சிதானர்தா (ரிஷிகேசம்) சித்திரமுத்து அடிகளார் (மதுரை) ஆகியோர் வந்து ஆசிகூறினார்கள்.

மாதாஜீ சுகவீனமுற்றபோது தபோவன நிர்வாகத்துக்கு பொறுப்பாக நாகரத்தினம் பிள்ளை தங்கம்மாள் அறக்கட்டளை ஒன்றை எழுதி வைத்துள்ளார். அந்த ஒழுங்கின் படியே தபோவன நிர்வாகம் நடைபெற்று வருகிறது.

சுகவீனத்தைத் தொடர்ந்து 1978 சித்திரை முதலாந் திகதி மாதாஜீ சமாதி அடைந்தார்கள். தபோவனக் காணிக்குள்ளேயே மாதாஜீயின் உடல் கிரியைகள் நடைபெற்று சமாதி வைக்கப்பட்டது. சமாதிக்கு பூஜை வழிபாடுகள் நடந்து வருகின்றன.

மாதாஜீ பல வகையிலும் சமூகத்துக்குத் தொண்டுகள் செய்துள்ளார்கள். பல பிள்ளைகள் படிப்பதற்கு உதவினார்கள். சிவானந்த தபோவனம் மாணவர் இல்லத்தில் ஆண்பிள்ளைகளும் பெண்பிள்ளைகளுமாக சுமார் நூறு பிள்ளைகள் கல்விகற்று வருகிறார்கள்.

மாதாஜீ அவர்களின் ஆன்மீக அலையோடு மக்கள் எல்லோரும் சீரும் சிறப்பும் பெற்று இன்பமாய் வாழவும் பிரார்த்திக்கிறேன்.



**சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் சமுதாயப்பணிகளின் வரிசையில் திக்கத்தைச் சேர்ந்த முருகேசு ஜெகதீஸ்வரன் அவர்களுக்கு சுயதொழில் புரிவதற்காக ஆச்சிரமத்தினால் வழங்கப்பட்ட துவிச்சக்கரவண்டியினை திரு அ. குமாரவேல், திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள் கையளித்தனர்.**

# நாவலரின் நற்பணிகள் நாம் மறவோம்

– திரு கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள் –



நாவலரின் நற்பணிகள் நாம் மறவோம் நானிலத்தில்
பாவலராய்ப் பண்பினராய்ப் பணிசெய்தார் - பாரினிலே
வேறுபல தொழில் செய்யா வித்தகராய் உயர்ந்திட்டார்
ஆறுதலே அவர்நினைவு தான்.

கோலவுடைதரித்துக் குவலயத்தில் வாழ்பவர்போல்
சால அலங்கரித்து வாழவில்லை, தாம் வரித்த
கொள்கைகளை விட்டு வேற்றுமதஞ் சாரவில்லை
எல்லையில்லா வித்தகராய் இயங்கியவர் கல்வியிலும்
கதாப்பிரசங்கஞ் செய்வதிலும் எல்லையிலாப் பேரறிவு
எய்திப் பிறமதத்தார் சொன்னவற்றைக் கண்டித்த தூயர்
சொலற்கரிய தூயபணிகள் பல செய்திட்டார்
வல்லபமே வாழி நிதம் வாழி.

நல்லை நகர் தந்த நாவலரே ஞாயிறென
வல்ல ஒளிபரப்பிச் சைவத்தை வாழ்வித்த
எல்லையிலாப் பேரறிவு ஏந்தலவர்
தில்லைச் சிவன்பாதம் போற்றும்நற் சிந்தனையால்
தீட்சைதனைப் பெற்ற சீலர், கவிவல்லோன்
சாற்றற்கரிய சால் பெல்லாங் கொண்டவராம்
போற்றற்கரிய பணிகள் பல செய்தவராய்ச்
சீற்றஞ் சினமின்றிச் சிந்தனையால் உயர்ந்திட்டார்.

சொல்லுதமிழ் காத்த தூயவராம் வேதநெறி
வெல்லுந்தருக்கநெறி, அச்சுநெறி, அறநெறியும்
வல்ல சீர் திருத்த வாதியவர் சொலல் வல்லான்
செல்லும் வழி எழுதிச் சீரான வழிகாட்டும் வள்ளல்
அச்சகத்தின் ஆக்கநூல் பலதந்துநின்ற பேரறிஞன்
ஆங்கிலத்தார் சமயநெறி நன்குகற்ற கல்விக்கடல்
பைபிள்தனைத் தமிழில் பெயர்த்த தகை சான்றோன்
நல்லபல நூல்கள்தனை எழுதிப் பதிப்பித்தோன்

நீதிநெறி வல்லோன் நேர்மையாளன் தானெவர்க்கும்
அஞ்சாத நெஞ்சம் படைத்த அருங்குணத்தான்
நெஞ்சாரக் கடவுள் தமை நேசித்த தன்மையினால்
பஞ்சான எளிமை பாரமிலா அறிவுவளம்
துஞ்சாதரும் பணிகள் துடிப்புடனே செய்து வென்றார்
பெண்சாதி தமிழணங்கே என்ன மனங் கொண்டார்
தன்சாதி வெல்லத் தகைசார் பணி புரிந்தார்.

சைவத்தமிழுலகு தளைக்கப் பணி செய்தார்
மெச்சு பலபதிப்பு மேற்கொண்டு வெளியிட்டார்
அச்சுதனைச் சென்னையிலும் ஆக்கிநூல் வெளியிட்டார்
வண்ணை நகரில் நாவலர் பாடசாலை
எண்ணம் உதிக்க எடுத்திட்டார் முன்முயற்சி
தமிழ்சைவச் சீலமிக்க மாணாக்கர் பயின்றிடவே
பலநூல்கள் பாலபாடம், சைவவினா விடையெழுதித்
துணிவாகத் தமிழ் சைவம்தான் வளர்த்தார் காவலனாய்.

இலக்கணத்தில் வித்தகராய் இருந்த எம் நாவலனார்
இனிய தமிழ்ப் பிரபந்தம் பலவியற்றி நின்றவராம்
நல்லைநகர்க் கந்தன் சீர்திருத்தச் சிந்தனைகள்
எல்லையிலாதெழுதிக் குவித்தபணி பற்றி
வல்ல தமிழறிஞர் வாதிடுவோர் ஆய்வாளர்
புல்லுருவி எதிராளர் புரிந்த வழக்கு நிலை
சொல்ல முடியாத சூழ்ச்சிகளையுஞ் செய்து
நாவலரைத் துச்சமென மதித்த துயரமது வரலாறு.

தியாகத்தின் பேரொளியாய்த் திடமனது கொண்டவராய்
நியாயத்தின் பக்கமே நின்றுசெயற் பட்டுவந்தோன்
கஞ்சித்தொட்டித் தருமம் சமூகசிந்தனை வீச்சால்
நெஞ்சில் நினைத்து நிதந்தொழவும் வைத்திடுமே!
சைவநெறி முறைகள் பிசகாது நூலெழுதி
நல்லமுறையில் நல்லறிவுச் சுடர் கொளுத்தி
நாளுமனுட்டானஞ் செய்து நம்பன் கழலடிகள்
பாடும் திருமுறைகள் ஓங்கவழி செய்தவராம்!

கண்டனங்கள் துண்டுப்பிரசுரங்கள் என்றவிவை
கொண்ட கிறித்தவத்தின் வழியறிந்து கடைப்பிடித்துத்
தாமும் அதுவழியே தக்கவாதாரங்களுடன்
நாளும் பொழுதும் நயமாகப் போதித்தும்

பாழும் வழிவிடுத்துப் பார்போற்றுஞ் சைவத்தின்
சீலத்தை வென்றெடுத்தார் நாமின்று கொண்டுள்ளோம்
மாநிலத்திலவர் மேன்மை மதிக்கத் தெரிந்திட்டால்
வேறுளதோ நற்சைவப் பேறு.

ஒழுக்கத்தின் உயர்குணங்கள் ஓங்கி வளர்ந்திடவும்
பழக்கத்தில் ஆசாரசீலரென வாழ்வதற்கும்
மயக்கத்தில் பிறமதத்தில் மதிமயங்கிப் போகாமல்
இறுக்கத்திற் சைவநெறி நிற்க வழி வகுத்திட்டார்.

பக்தி குணம் பண்பாடு படிப்பிற் செம்மை
பார்போற்றும் மானுடத்தின் மாண்புக் கொள்கை
எத்திக்குச் சென்றாலும் நிமிர்ந்த நேர்மை
எடுத்தியம்பும் நாவலனார் இதயமேன்மை.

புராணத்திற் புனிதத்தில் உண்மை வாழ்வில்
புண்ணியநற் கருமத்தில் உறைத்த சீலர்
அந்நியரின் ஆசாரமின்மை கண்டு
ஆர்ப்பரித் தெழுந்திட்ட அறிஞர் கண்டீர்!
எண்ணிய நற்கருமங்கள் ஏற்றமாக
எடுத்தாண்ட வித்தகராம் நாவலரின்
கண்ணியத்தைக் காரியத்தைக் கடமைதன்னைக்
கருதாத தன்மையது இழிவாம் கண்டீர்!

நாவலரையெதிரியெனக் காணுஞ் சில்லோர்
நாப்பிழக்கப் பொய்யுரைத்து நன்மை காணார்!
பூப்பறித்துப் புனிதமான இறைவன் தன்னைப்
பூவுலகிலில்லை யெனப்புகன்று பேசிநின்று
ஆர்ப்பரித்து அவலங்கள் செய்ததாலே
அழிந்ததுவே சைவம் அதன் சீலமெல்லாம்
பேய்பிடித்த மூஞ்சியராய் நீறுமின்றிப்
பிதற்றுகின்ற பேச்சுரைகள் பொய்யே! பொய்யே!

செந்தமிழைப் பிழையின்றி அச்சடித்த
செயற்கரிய செய்த நாவலனார் வாழி
நந்தமிழைச் சைவத்தை வாழ்விற் கொண்ட
நற்பெரியோனாறுமுகநாவலர் தாள் வாழி
முந்துமதம் காத்தளித்துப் பணிகள் செய்து
முழுவுலகுஞ் சைவத்தைப் போற்றி வாழத்
தந்துதவிநின்ற தவப்புதல்வர் பணி நின்றென்றும்
தலைக் கொண்டு நன்று நின்று வாழுவோமே.




## சபிண்டிகரணம்

பிதுர்களுக்குக் கர்மம் செய்யும் உரிமை யாருக்கு உண்டு என்பதை பரந்தாமர் விளக்கிக் கூறியதையடுத்து கருடன் பரந்தாமரை நோக்கி "பரந்தாமா!" "சபிண்டிகரணம்" என்ற சடங்கை எப்பொழுது செய்ய வேண்டும்? யார் செய்ய வேண்டும்? பிதுர்களுடன் உயிரைச் சேர்ப்பது எப்படி? கணவன் இருக்கும்போது மனைவி இறந்தால் சபிண்டிகரணம் எப்படிச் செய்யவேண்டும்? இந்த விடயங்களை எல்லாம் விளக்கிக்கூற வேண்டும்? என்று வேண்டினார்.

கருடனே! இறந்தவனுக்கு செய்யவேண்டிய எல்லாச் சடங்குகளையும் நியதிப்படி செய்ய வேண்டும். "சபிண்டிகரணம்" என்பது இறந்தவனின் உயிரை, பிதுர்களுடன் சேர்ப்பதாகும். அதாவது இறந்தவனுடைய குலத்தில் முன்னர் இறந்தவர்களுடைய பிண்டத்தோடு, இறந்தவனுடைய பிண்டத்தைச் சேர்ப்பதாகும். இந்த சபிண்டிகரணம் செய்வதால் இறந்தவன் பிரேத உடல் நீங்கப் பெற்று பிதுர்களுடன் சேர்வான்.

ஏதாவது ஒரு காரணத்தினால் சபிண்டிகரணம் செய்யாமல் நிறுத்தி வைத்திருந்தால், அதைச் செய்த பிறகே சுப காரியங்கள் எதையும் செய்ய வேண்டும். ஏனெனில் இறந்தவன் சபிண்டிகரணம் செய்யும் வரை பிரேத உடலுடன் இருப்பான். பெரும்பாலும் பன்னிரெண்டாம் நாள் சபிண்டிகரணம் செய்வது உத்தமம். சபிண்டிகரணம் செய்த பிறகுதான் திவசத்தைச் செய்ய வேண்டும்.

ஒருவர் இறந்து போனால் அவருடைய புதல்வர் மட்டுமே கர்மம் செய்ய வேண்டும். புத்திரன் இல்லாது போனால் இறந்தவரின் மூத்த சகோதரர் அல்லது கடைசி இளைய சகோதரர் இருவரில் எவராவது செய்யலாம். அல்லது அவர்களில் ஒருவருடைய மகனா வது செய்யலாம். இறந்து போனவரின் சகோ தரர்கள் ஏதோ காரணங்களினால் தனித்தனி யாக வாழ்ந்துவரின் இறந்தவரின் மனைவி கருமம் செய்ய வேண்டும்.

இறந்தவருக்கு புத்திரரும், அவரது சகோதரரும், சகோதரரின் புத்திரரும், மனைவி யும் இல்லையெனில் இறந்தவரின் பங்காளி (ஒன்றுவிட்ட முறைச் சகோதரர்) பின் அவர் செய்யலாம். அவரும் இல்லாத நிலையில் இறந்தவருக்கு மாணாக்கர் இருந்தால் அவர் செய்யலாம். அப்படி யாருமே இல்லையென் றால் புரோகிதரே அவருக்குரிய கர்மங்களைச் செய்யலாம்.

ஒன்றுக்கு மேற்பட்ட சகோதரர்கள் இருந்து அவர்களில் ஒருவனுக்கு மட்டும் பிள்ளையிருந்தால் அந்தப் பிள்ளை அனைத்து சகோதரர்களுக்கும் பிள்ளையாவான். ஒரு வருக்கு பல மனைவியர் இருந்து அவர்களில் ஒருத்திக்கு மட்டும் பிள்ளை இருந்தால் அனைத்து மனைவியருக்கும் அவனே பிள்ளையாவான்.

பெண் ஒருத்தி திருமணமாகி புத்திர ரைப் பெறாமல் இறக்க நேரிட்டால் அவளுக் குரிய கருமங்களை அவள் கணவனே செய் யலாம்.

சபிண்டிகரணம் செய்த பின்பு பிதுர்த் தேவர்கள் அனைவரையும் குறித்து இல்லா மல் இறந்தவரை மட்டுமே குறித்து சிரார்த்தம் செய்வது கூடாது. அவ்வாறு செய்தால் இறந் தவரும், சிரார்த்தம் செய்தவரும், சிரார்த்தம் செய்கின்ற புரோகிதரும் நரகமடைவர்.

இறந்து போனவருக்கும் பலர் இருக் கலாம். இருந்தாலும் ஓராண்டு வரையிலும் ஒருவரே சகல கிரியைகளையும் செய்ய வேண்டும். ஓராண்டு முடியும் வரை நித்திய சிரார்த்தத்தோடு ஒரு குடத்தில் நீர் நிறைத்து உதககும்ப தானத்தைச் செய்ய வேண்டும். இவ்வாறு இறந்தவருக்குரிய தர்மங்களை தவறாமல் செய்து வந்தால் அவர் விமானத் தில் நல்லுலகை அடைவர்.

பாட்டன் உயிருடன் இருக்கும்போது தம் தந்தை இறந்தால் அவருக்கு சபிண்டி கரணம் செய்யக்கூடாது. பாட்டன் இறந்த பின்பு அந்தப் பாட்டனுக்கு சபிண்டிகரணம் செய்த பின்புதான் இறந்துபோன தந்தைக்குச் செய்ய வேண்டும்.

ஒரு பெண் தன் கணவரையே தெய்வ மென்று கருதி வாழ்ந்திருந்து அவர் இறந்த வுடனே தன்னுயிரை விடுவாளேயானால் (உடன்கட்டை ஏறுதல்) அவள் நற்கதி அடை வாள். அத்தகையவள் புண்ணியவதியாகக் கருதப்படுவாள். அவளுடைய இந்நிலையால் அவள் கணவன் பாவங்கள் பல செய்திருந் தாலும் அவனும் புண்ணியவானாக தன் மனைவியுடன் சொர்க்கம் அடைந்து சுகமடை வான்.

அவ்வாறு கணவனும், மனைவியும் இறந்தால் அவர்களின் புத்திரன் ஒரே சபிண்டி கரணச் சடங்கை செய்தாலே போதுமானது. ஆனால் தனித்தனியாக சிரார்த்தம் செய்ய வேண்டும். அதைப்போன்று விருஷோற் சர்க்க மும் தான தர்மங்களையும் தனித்தனியே செய்ய வேண்டும். இவ்வாறு ஓராண்டு வரை யில் எல்லாவற்றையும் தனித்தனியே செய்து வந்தால் இருவருமே மகிழ்ச்சி கொள்வர்.

புனித ஸ்தலங்களிலும், கிரகணம் மாயை அமாவாசை முதலான புண்ணிய காலங்களிலும் அவர்கள் இருவர்களிற்கும் சிரார்த்தம் செய்து வேறு வேறாகப் பிண்டம் போட வேண்டும்.

ஒருத்தி தான் மணந்த கணவனையே உயர்ந்த தெய்வமாகக்கருதி தன் கணவனுடன்

உயிர் துறப்பவள் தன் கணவனுடன் சொர்க் கத்தில் இன்புற்றிருப்பாள். பின் மறு பிறப்பில் மகா யோகமுள்ளவர்களுக்கு அவர்கள், மகன், மகளாகப் பிறந்து மீண்டும் அவர்களே கணவன் மனைவியராகி மேன்மை அடைவர்.

தம் கணவரையே மேலாக மதித்து அவருடன் உடன்பட்டு ஒழுக்க நிலை தவ றாமல் வாழும் பெண்கள் இறந்த பின்பும் புண்ணிய லோகத்தை அடைவர். தம் கண வரை மதிக்காமல் அலட்சியம் செய்து தம் விருப்பப்படி வாழும் பெண்கள் மரணத்திற்குப் பின் கொடிய நரகத்தையே அடைவர். அத் துடன் அடுத்து ஏற்படும் பிறவியில் கொடூர குணமுள்ளவருக்கு மனைவியாக வாய்த்து துன்புறுத்தலுக்கு உள்ளாவர். என்று நற்பண் புள்ள மனைவியர் அடையும் நிலை பற்றி பகவான் கூறுகின்றார்.

மகாவிஷ்ணு இறந்தவர் குறித்து செய்யவேண்டிய கருமங்களைப் பற்றி மேலும் விளக்கமாகக் கூறுகிறார்.

இகத்திலும், பரத்திலும் இன்பம் பெற வேண்டுமாயின் புத்திர பாக்கியம் பெற்றவராக இருக்க வேண்டும். அப் பேறு பெறாதவருக்கு எவ்வுலகிலும் இன்பம் இல்லை.

அதனால் தானமும், தவமும் புரிந்தா வது புத்திர பாக்கியம் பெறுவதற்காக முயற் சிக்க வேண்டும். அவ்வாறு முயற்சி செய்யாத நிலையில் மனைவிக்கு கரு உற்பத்தியாகாது, புத்திரரைப் பெறும் வாய்ப்பு இல்லாமல் போய் விடும்.

கருமங்களைச் செய்ய ஆரம்பிப்பதற்கு முன்பாக அதற்காக ஒதுக்கப்பட்ட இடத்தைச் சுத்தப்படுத்த வேண்டும். அவ்வாறு சுத்தப் படுத்தாமல் செய்யும் கருமங்கள் பூர்த்தியடை யாது அரக்கரும், பூதங்களும், பிரேத பிசாசு களும் கூடி அக் கருமம் நிறைவேற விடாது செய்து விடுவர். அதனால் அந்த இடத்தை சுத்தம் செய்தால் அந்த இடத்தில் தேவர்கள் வந்திருந்து மேற்கொள்ளும் கர்மங்களை குறைவின்றி நிறைவேற்றி வைப்பர். அப்படிச் செய்தால் தான் இறந்து போனவர் அந்தக் கருமத்தின் முழுப் பயனையும் பெறுவர். இல்லையெனில் நரகத்தையே அடைய நேரும்.

பிதுர்களுக்கு கர்மம் செய்யும்போது எண்ணையும், எள்ளையும், தர்ப்பைப் புல்லை யும் உபயோகிக்க வேண்டும்.

எள் என்பது மகாவிஷ்ணுவிடமிருந்து தோன்றியது. அதனால் மிகவும் பரிசுத்த மானது.

எள்ளில் கறுப்புஎள், வெள்ளைஎள் என்று இருவகையுள்ளது. இவற்றில் எந்தவித எள்ளையும் தானங்களோடு சேர்த்துக் கொள்ள லாம். அதனால் ஏற்படும் பயன்கள் ஒன்றே.

ஆனால் சிரார்த்தக் காலத்தில் கறுப்பு எள்ளைச் சேர்த்துக் கொடுப்பதுதான் சிறப் பாகும். அதனால் பிதுர்த் தேவர்கள் மிகவும் திருப்தி கொள்வார்கள்.

தர்ப்பை என்பது ஆசகப்புல்லாகும். அந்தத் தர்ப்பையின் இரு முனைகளிலும் பிரம்மனும், சிவனும் மத்தியில் ஸ்ரீ விஷ்ணு வும் வாசம் புரிகின்றனர்.

தர்ப்பை இல்லாமல் சிரார்த்தம் முத லான எந்தக் கருமங்களையும் செய்யக்கூடாது. அந்தணருக்கும், மந்திரத்திற்கும், தர்ப்பைக் கும், அக்கினிக்கும், துளசிக்கும் நிர்மாலிய தோஷம் இல்லை. அதாவது ஒருமுறை பூசித்து நீக்கியதையே மீண்டும் உபயோகிக் கலாம். அதனால் தோஷப்படுவதில்லை.

ஏகாதசி விரதமும், துளசியும், பகவத் கீதையும், பசுவும், மிகவும் உயர்ந்தோர் பக்தியும், ஸ்ரீமத் நாராயணனின் சரணம் ஆகிய இவை அனைத்தும் சம்சாரம் என்னும் கடலை எழுதிக் கடக்க உதவும் தோணிக ளாகும்.


மரணத்தருவாயில் ஒருவர் ஓரிடத்தை சாணத்தினால் மெழுகி தர்ப்பைப் புல்லைப் பரப்பி அதன்மீது எள்ளை இறைத்து அந்தத் தர்ப்பைப்புல்மீது படுத்து தம் கையில் தர்ப்பைப் புல்லையும் துளசியையும் வைத்துக் கொண்டு ஸ்ரீமத் நாராயணனின் நாமத்தை வாயார உச்சரித்தபடி உயிரை விடுவாராயின் அத்தகையவர் மிக உயர்ந்த இன்ப வீடாகிய வைகுண்டத்தை அடைவர். அவ்வாறு உயிர் விடுபவர் தர்ப்பைப் புல்லின்மீது குப்புறப் படுக்கக் கூடாது; முதுகு கீழுறப் படுத்து உயிர் பிரிவதற்கு முன்பாகவே துளசியோடு தான் மேலுலகம் அடைய வேண்டிய தான தர்மங்கள் எல்லாம் செய்து விட வேண்டும்.

தானம் புரிவதில் உப்புதானம் என்பது மிகவும் உயர்வானது. உப்பு விஷ்ணு லோகத்தில் உண்டானது. அதனால் ஒருவர் உப்பைத் தானம் செய்வாரெனில் அவர் சொர்க்கலோகத்தை அடைவர்.

(தொடரும்...



**கந்தசஷ்டி காலத்தை முன்னிட்டு இடம்பெற்ற விஷேட நிகழ்வில் தொடர் சொற்பொழிவு ஆற்றிய திரு இரா செல்வவடிவேல் அவர்களுக்கு இந்தியாவிலிருந்து வருகைபுரிந்த சித்த வைத்தியர் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்கள்.**



**சந்நிதியான் ஆச்சிரம பேரவையின் போஷகருள் ஒருவராக விளங்கும் சிவஸ்ரீ சோ. தண்டபாணிக தேசிகர் அவர்கள் தனது 70ஆவது அகவையில் காலடி வைப்பதையிட்டு வாழ்த்திப் போற்றுவதோடு, அவரது குடும்பத்தாரும் பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ சந்நிதிவேற் பெருமானின் அருளை வேண்டி நிற்கின்றோம்.**

**-பேரவையினர்-**

இலட்சியங்கள் வாழ்க்கையில் விறுவிறுப்பூட்டுபவை.

# ஞானச்சுடர் வாசகர் போட்டி 2014

## வினாக்கள்

01. இறைவனுக்குரிய உபசாரப் பொருள்கள் எவை?

02. யமன் எமது உயிரைக் கவரும்போது கூட வருவது என்ன?

03. அருணகிரிநாத சுவாமிகள் புராணம் பாடிய பெருந்தகை யார்?

04. திருகோணமலையில் வைரவர் ஆலயம் அமைந்த இடங்கள் எவை?

05. ஆன்மீகத்தில் அடங்கும் செயற்பாடுகள் எவை?

06. சைவசமய மேம்பாட்டிற்காக உழைத்த அந்தணர்கள் யாவர்?

07. ஆசையில்லாதவருக்கு எது அனுகா?

08. எச்செயற்பாட்டின்மூலம் மனிதன் பூரணமடைகின்றான்?

09. இல்லறத்திலிருந்து துறவற வாழ்வை மேற்கொண்ட மன்னன் யார்?

10. காலியில் சமயப்பணியின் நிமிர்த்தம் சென்ற சொற்பொழிவாளர் யார்?

11. உடல் அமைதிபெற நாம் என்ன செய்ய வேண்டும்?

12. பெருந்தோட்ட மக்களின் பிரதான குலதெய்வமாக விளங்கும் தெய்வம் எது?

13. எது சுகத்தைக் கொடுக்கும்?

14. நீர்ப்பூக்கள் எவை?

15. செல்வம் குறையாதிருக்க நாம் என்ன செய்ய வேண்டும்?

16. உயிர்களினால் மேற்கொள்ளப்படும் பாவ புண்ணியங்களை அறிந்து கூறுபவர் பெயர் என்ன?

17. எது நன்றாக இருந்தால் நோக்கமும் பயனும் நன்றாக இருக்கும்?

18. நெடுவழிப் பிரயாணத்திற்கு நாம் யாரைத் துணையாகக் கொள்ளவேண்டும்?

19. புருடார்த்தங்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

20. யாகம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

21. எமக்குப் பூரண உணவாக விளங்குபவை எவை?

22. பிரேத ஜென்மம் அடைபவர் யார்?

23. முருகப் பெருமானால் திருத்தம் செய்யப்பட்ட புராணம் யாது?

24. முதுபெரும் புலவர் வை.க. சிற்றம்பலம் அவர்களது குருவாக விளங்கியவர் யாவர்?

25. மனித விழுமியங்கள் எத்தனை பிரிவாக வகுக்கப்படுகின்றன? அவை யாவை?

ஒவ்வோர் இன்பத்துக்கும் ஒரு துன்பம் உண்டு.




- போட்டியில் எவரும் பங்குபற்றலாம். ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட விடைகளையும் எழுதி அனுப்பலாம். ஆனால் அவை தனித்தனியாக அனுப்பப்படவேண்டும்.
- 2014ஆம் ஆண்டு தை மாதம் தொடக்கம் ஐப்பசிமாதம் வரை வெளிவந்த ஞானச்சுடர் மலர்களிலிருந்தே வினாக்கள் எடுக்கப்பட்டுள்ளதால் விடைகளும் மலருக்குள் இருந்தே எடுக்கப்படவேண்டும்.
- விடைகளை அச்சிடுவதோ, பிரதி செய்வதோ, போட்டோ பிரதி எடுப்பதோ அனுமதிக் கப்படமாட்டாது.
- விண்ணப்பங்களை வாசகர் போட்டிக்குழு, சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை, செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு என்ற முகவரிக்கு 15.01.2015 தைமாதத்திற்கு முன்பு தபால்மூலமோ, நேரிலோ கையளிக்கவும்.
- போட்டியின் பெறுபேறுகள் தைமாத ஞானச்சுடர் மலரில் வெளியிடப்பட்டு அதன் பரிசில்கள் மாசி மாத ஞானச்சுடர் வெளியீட்டின்போது வழங்கப்படும்.

## ஞானச்சுடர் சந்தாதாரரின் கவனத்திற்கு

வணக்கம்! தாங்கள் காட்டிவரும் பேராதரவுக்கு மனமார்ந்த நன்றிகள். ஞானச்சுடர் மலரின் தயாரிப்புச் செலவினங்களும், அஞ்சல் கட்டண உயர்வும் பல மடங்கு உயர்ந்து விட்ட இவ்வேளையிலும், மாதந்தவறாது ஞானச்சுடரினை வெளிக்கொணர்வதில் நாம் மிக்க ஊக்கமாகவே உள்ளோம். இத்தகைய சூழ்நிலையில் நாம் உங்களிடம் எதிர் பார்ப்பது ஒன்றுதான்.

2015ஆம் ஆண்டுக்கான நுழை வாசலிலே நாம் நிற்கிறோம். உங்களுடைய வருடாந்த சந்தாப் பணத்தினைச் செலுத்தி தங்கள் சந்தாப் பதிவினைப் புதுப்பித்துக் கொள்ளுமாறும், புதிய ஆண்டில் பிரதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக தங்களது சரியான முகவரியைத் தபால் மூலமோ- தொலைபேசி மூலமோ தெரியப்படுத்துமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

சந்நிதியான் ஆச்சிரம
சைவ கலை பண்பாட்டுப் பேரவை.


கைத்திறன் இல்லையேல் பிழைப்பு இல்லை.

(தொடர்ச்சி...

# கண்டோம் கதிர்காமம்

– திரு அன்னைதாசன் அவர்கள் –

ஆம் இங்கு எமது மோகனதாஸ் சுவாமிகளால் அம் மாபெரும் வேற்பெருமானுக்குச் செய்யப்பட்ட அபிஷேகமும் நிவேதனமும் பூசைமுறையும் அங்கு குழுமியிருந்த பக்தர்களின் மனநிலையும் அவர்கள் அணிந்திருந்த உடை அவர்களின் சமகால உணவுப் பழக்கங்கள் என்பவையும் சேர தெய்வம் பொறுக்குமா? சாந்தி நிலைக்குமா? மழை பெய்யுமா? என்ற கட்டுரை சிறியேனை பின்வருமாறு தொடவைக்கின்றது. முழுக்க முழுக்க ஐயா அவர்களின் குமுறல் சரியானதே.... ஆனாலும்,



* நிர்வாண மனிதன் தன் மானத்தை மறைக்க வேண்டுமென்று உணர்ந்து இலை குழை, மரஉரி, விலங்குத்தோல் போன்றவற்றிலிருந்து, பருத்தி உடைக்குமாறி இப்போ பலவித, சிந்தெற்றிக் துணிகளாலும் பல செயற்கை மணிகள் ஜிகினாக்கள் தாங்கிய பலவித உடையணிகளும் வளர்ந்து விட்டன.

* தற்பொழுதைய தமிழ்ப் பெண்களின் உடுப்பு எது என 7-8 வயதுக் குழந்தையைக் கேட்டால் ஜீன்ஸ், ரீசேட்தான் என்றே சொல்லும்.

* பிரவேச பலிக்கு முழுப்பூசணிக்காய் பாவித்த நாம் நீற்றுக்காய் கீறல்கள் பாவிக்கும் நிலையாச்சு.

காற்றோடு வருவது நீரோடு போகும்.

* கோதானத்திற்கு பசுமாடு, பசுக்கன்று கொடுத்த நாம் ஐயாவுக்கு 100 - 5000 ரூபா கொடுக்கும் நிலையாச்சு. இப்படிப் பல சொல்லலாம்.

* கௌரிகாப்பிற்கு ஒருநாளைக்கு ஓர் முடிச்சு மந்திர உச்சாடனம்பண்ணி முடிக்க வேண்டும்.

* சூத்திரர் பூசை செய்யும் கோயிலில் 1000க்கு மேற்பட்ட கௌரி நூல்கள் வழங்கப்படுகின்றன. மக்கள் அணிகிறார்கள். திருவருள் கொட்டுகிறது. மக்கள் உணர்கிறார்கள், ஓடி வருகிறார்கள், வேண்டி அணிகிறார்கள். தபாலிலும் நூல்கள் செல்கின்றன. பிரபல கோயில்களில் 5000ற்கு மேல் நூல்கள் வழங்கப்படுகின்றன. குழந்தையில்லாதவர்களுக்கு குழந்தை கிடைக்கிறது. திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் நடக்கின்றது கண்கூடு. இவர்கள் விரத நியமங்களில் 100% நின்றார்களா? அவர்களது குடும்பச் சூழலில் நிற்க முடியுமா?

* மலசல மோசனஞ் செய்யும்பொழுது வடக்குப் பக்கம் பார்க்க வேண்டும். கொமேட் கிழக்கை பார்க்குது. வடக்குப் பார்த்தால் ஐயா கொமேட்டுக்குள்... இச்சூழலில் இப்போ இது கடைப்பிடிக்க முடியுமா?

* ஆக தக்கன பிழைக்கும் இது டார்வினின் கொள்கை. யாதும் ஊரே யாவரும் கேளீர் இது திருமந்திரம். சைவம் தழைக்கும் யாரும் அதனை அழிக்க முடியாது. இப்படியான வைதீகக் கோட்பாடுகள் இறுக்கமாகில் சைவம் நலிய வாய்ப்பாகுமேயொழிய வளர வாய்ப்பாகாது.

* எத்தனைபேர் ஆலய வாசலில் கால் வைப்பதில்லை. ஆனால் இவர்கள் வழிபடாமல் இருப்பதும் இல்லை.

தோய்த்து உலர்ந்த ஆடைகள் கட்டி வருகிறார்களா? மாமிசம் மது அருந்திவிட்டு வருகிறார்களா? என்று மணந்து நுகர்ந்து பார்க்க வெளிக்கிட்டால் விளைவு.....? குருக்கள் ஐயாவின் கிரியைகளைக் கூர்ந்து நோக்கினால்..... விளைவு? ஆக சத்யம் தர்மம் அனைவருக்கும் நன்கு தெரியும். நெளிந்து சுளிந்து ஓரளவுக்குக் கடைப்பிடித்து அம்மா தாயே, அப்பனே முருகா என்று நம்பிவருகிறார்கள் வழிபடுகிறார்கள். நூல் நீறு, வேப்பிலை அணிகிறார்கள். பலன் கொட்டுகிறது. கூடுகிறார்கள். கிள்ளிக்கொடுக்கிறார்கள். ஆலயம் புது மெருகு பெருகிறது. கிடாயைப் பார்த்துப் பார்த்தே கந்தசஷ்டியை ஆலய தர்மகர்த்தா தொடக்கம் பக்தன் வரை விரதம் பிடிக்க குழுமுகிறார்கள். கந்தசஷ்டி முடிய கிடாய்.... முட்டை தொடக்கம் மீன்வரை சந்தையில் விலை கூடுகிறது. அருள் கிடைக்கவில்லையா? அடுத்த வருடம் கந்தசஷ்டிக்கு ஆலயத்தில் ஆட்கள் இல்லையா? சிறிசு தொடக்கம் பெரிசு வரை எல்லோருக்கும் எல்லாம் தெரியும். ஆக சந்தர்ப்பம் சூழலுக்கு ஏற்ப வழிபடுகிறார்கள். எம்மைப்போல பழசுகளாக, பக்குவம் எம்மிளைஞர்களுக்குத் தானாக வரும். அப்போ அவர்களும் இப்படி எழுதுவார்கள். ஆன்ம முத்திக்கு ஆசாரம் உதவும், லௌகீக அருள்பெற இவை போதும் என்பது எம் மக்களின் கொள்கைபோல் இருக்கிறது. தப்பிப் பிழைக்கத் தெரியாததால்தான் டைனோசர் இனமே அழிந்தது. இது விஞ்ஞான உண்மை. எம்மிளைஞர்கள் மண்ணையும் மதத்தையும் மொழியையும் மறக்க மாட்டார்கள். கோட்டுச் சூட்டுப்போட்டு குளிர் நாட்டிலும் கோயில்கட்டி வழிபட்டு, தம் பிள்ளைகளையும் வழிபடச் செய்கிறார்கள்.

காலத்தின் திரிபுகளுக்கு ஏற்ப எங்கள் இளைஞர்கள் தப்பிப் பிழைக்க வைப்பார்கள். இதற்கு எங்கள் ஞானச்சுடரின் ஆக்கங்களும் ஆவணமாகும்.

மந்திரமில்லை மேளதாள வாத்தியமில்லை, பீடத்தின் மீதமர்ந்த வேற்பெருமானுக்கு அடியார்கள் நீர் ஏந்திக் கொடுக்க மோகனதாஸ் சுவாமிகள் அபிடேகிக்கிறார்கள். பால், பழம், இளநீர் போன்றவற்றால் அபிஷேகம் செய்தார்கள். கீழே பார்த்தால் அதால பாதாளம் எங்கும், பச்சைப் பசேல்; நவீனத்துவத்தின் வெளிப்பாடாக மின்சாரக் கம்பங்களும் தொலைத் தொடர்புக் கோபுரங்களும் அவ்விளங் காலைப்பொழுதில் உலோக மினுக்கத்தில் ஒளிர்ந்து கொண்டிருந்தன. குரங்குக்கூட்டம் நாம் படைக்கும் பழங்களின் மேல் கண்ணாக இருந்தன. இப்போ அவல் நிவேதனத்திற்குத் தயாராகிவிட்டது. ஏற்கனவே நாங்கள் வாழை இலை கட்டாகவே கொண்டு வந்திருந்தோம். பழவர்க்கங்கள் அவல் என்பன வாழை இலைகளில் நிவேதிக்கப்பட்டன. ஐயா அவர்கள் பூஜையைத் தொடங்கினார். தூப, தீப, ஆராதனை, தமிழ் வேதமாம் திருமுறைகள் ஓதி பூசைகள் நடைபெற்றன. மக்கள் எல்லோரும் மிகமிகப் பக்திசிரத்தையுடன் கதிரமலையானுக்கு அரோகரா என்ற கோஷத்துடன் தம்மை மறந்து வேலனுடன் இருந்தார்கள்.



நேருக்கு நேர் பேசினால் உண்மை வெளியாகும்.

சுவாமிகள் கற்பூரதீபம் காட்டியவேளை அவ்வேலில் ஏற்பட்ட பிரகாசம், எம்மனநிலை.... அப்பப்பா! எப்படி எழுதுவது, வர்ணிப்பது வார்த்தைகளைத் தேடினேன் கிடைக்கவில்லை. கண்களை மூடி அகக்கண்ணால் தரிசித்த அக்கணங்களிலிருந்து "மாஸ்டர் பஜனையைத் தொடங்குங்கள்" என்ற வார்த்தை என்னை இவ்வுலகிற்குத் தள்ளியது. எல்லோரும் அமர்ந்தோம். ஊசி விழுந்தால் உணரும் நிசப்தம். குரங்குகளின் அட்டகாசமும், எங்கோ பறவைகளின் ஓசையும் ஒலித்தது. ஓங்காரத்துடன் பஜனை ஆரம்பமாகியது. அன்னையின் பாலனே... என்று தொடங்கி சிவன், சக்திக்கு, நயினையிலே கோயில் கொண்டாள் நாகபூஷணி என்று பாடியபொழுது ஏற்பட்ட அந்தக் கணங்களின் தன்மை, தாயும் மகனும் எம்மைத் தம்மோடு இணைத்த அற்புத நிகழ்வாக மயிர்க்கூச்செறிய வைத்தது. முருகனுக்குச் சுவாமிகள் தமது அதே பாணியில்

முருகா, முருகா, முருகா, முருகா
வேல் வேல் முருகா வெற்றிவேல் முருகா.....
அடியார் இடரைக் களைவாய் முருகா....
அடியேன் இடரைக் களைவாய் முருகா....

என்ற வரிகள் ஒலித்தபொழுது ஏற்பட்ட இராகபாவ ஓசை அதிர்வு அனைவரையும் உலுப்ப பலரது கண்களிலிருந்து அருவிநீர் சொரிய பக்திப் பரவசத்தில் திளைத்திருந்ததைக் காணும் வாய்ப்பும் அடியேனுக்கு ஏற்பட்டது. இதனையே எமது ஞானச்சுடர் ஐப்பசி 2014 இதழ் பக்கம் 57இல் "பக்தி என்பது ஆன்மா, இறைவன் இரண்டிலும் ஒருமை ஏற்பட உணர்கின்ற உணர்வேயாகும். பக்தியே உண்மைச் சமயத்தின் உயிர்நாடியாகத் திகழ்கின்றது" என்று இடித்துரைக்கின்றது. உணவோ, உடையோ அன்று.

தொடர்ந்தும் அவரின் முத்தாய்ப்பான இயல் இசையின்.......

(காட்சி தொடரும்...

# ஆன்மீகச் சிந்தனை

இறைவனை அடைவதையே வாழ்க்கையின் ஒரே இலட்சியமாக ஏற்றுக்கொண்டால்த் தான் சரியான - முழுமையான ஆன்மீக வாழ்க்கை அமையும். அப்போதுதான் தன் ஆன்மீக சாதனைகளில் தீவிரமான ஆர்வத்துடன் முழுமையாக ஈடுபட இயலும். இறை வனையே குறிக்கோளாகக் கொண்டு வாழ்க்கைப் படகை அவனை நோக்கிச் செலுத்த முயன்றால், சூழ்நிலையும் அதற்கேற்ப ஆதரவாகத் தானாகவே அமையும். காற்று "கடவுளின் கிருபை என்ற தென்றல் காற்று எப்போதும் வீசிக்கொண்டுதான் இருக்கிறது. நீ உன் படகின் பாய்மரத்தை விரித்து வைத்தால் போதும், காற்றே படகை இழுத்துக்கொண்டு போகும்" என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் அடிக்கடி சொல்வது வழக்கம். "பாய்மரத்தை விரித்து வைத்தல்" என்பது ஒரு சாதகர் மேற்கொள்ளவேண்டிய சுயமுயற்சியைக் குறிக்கும். பற்றுக்களை அகற்றி அவரவர் மனநிலைக்கேற்ப ஞானம், யோகம், கர்மம் ஆகிய யோகங்களில் ஏதாவது ஒன்றையோ இரண்டையோ, மூன்றையோ அனைத்தையுமோ கடைப்பிடிக்கும் வகையில் அன்றாட வாழ்க்கையை ஒரு சாதகர் அமைத்துக்கொள்வது நல்லது.

**முதலில் சிந்தித்து பிறகு பேசவேண்டும்.**

# மார்கழிமாத வாராந்த நிகழ்வுகள்

05.12.2014 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "சைவநெறி"

வழங்குபவர் :- திரு பூ. சோதிநாதன் அவர்கள்

[இளை. விரிவுரையாளர், பேராதனைப் பல்கலைக்கழகம்]

---

12.12.2014 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "தேவி பாகவதம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு அ. குமாரவேல் அவர்கள்

[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை]

---

19.12.2014 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

விடயம் :- "முருகநாம பஜனை"

வழங்குபவர்கள் :- முருகன் அடியார்கள்

(பக்கவாத்திய சகிதம்)

---

26.12.2014 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில்

## ஞானச்சுடர் மார்கழிமாத வெளியீடு

வெளியீட்டுரை :- திரு சோ. பரமநாதன் அவர்கள்

[கிராம சேவையாளர், குப்பிளான்]

மதிப்பீட்டுரை :- திரு ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி அவர்கள்

[இளை. பிரதிக் கல்விப்பணிப்பாளர்]

204ஆவது மலர்

பதிவு இல. *QD/16/NEWS/2014*

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

